விலை ரூபா: 15.00
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பதினெட்டு

சங்கு 11 வள்ளுவர் ஆண்டு 2041 ஆவணி 16 புதன்கிழமை (01.09.2010) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 256

ராம்கோ
RAMCO
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

# வடக்கு, கிழக்கு மக்களுக்கு இந்தியா தொடர்ந்து உதவும்

## யாழ். வந்த நிருபமா உறுதியளிப்பு



(யாழ்ப்பாணம்)

வடக்கு, கிழக்கு மக்களுக்கு திறந்த மனத்துடன் தாராளமான உதவிகளை இந்தியா தொடர்ந்து வழங்கும் என யாழ்ப்பாணத்துக்கு நேற்று விஜயம் செய்த அந்நாட்டு வெளியுறவுச் செயலாளர் நிருபமா ராவ் தெரிவித்தார். (17ஆம் பக்கம் பார்க்க)



இந்திய அரசின் வீடமைப்பு உதவிப் பொருட்களை இந்திய வெளியுறவுச் செயலர், பயனாளி ஒருவருக்கு கையளிப்பதைப் படத்தில் காணலாம்.

## நீதிமன்ற விசாரணைக்கு பொன்சேகா செல்லவில்லை

(கொழும்பு)

சரத் பொன்சேகா தொடர்பாக விசாரணை நடத்திவரும் இரண்டாவது இராணுவ நீதிமன்றம் நேற்று பிற்பகல் தனது அமர்வை ஆரம்பித்தது.

எனினும் இதில் கலந்துகொள்வதற்கு ஏற்ப சரத்பொன்சேகா உடற்திட நிலையில் இல்லை என மருத்துவ அதிகாரியொருவர் இந் நீதிமன்றத்திற்கு அறிவித்தார். அதையடுத்து இன்று 2 மணிவரை விசாரணை ஒத்தி வைக்கப்பட்டது.

சரத்பொன்சேகா இராணுவத் தளபதியாக பதவி வகித்த காலத்தில் ஆயுதக் கொள்வனவில் இடம் (17ஆம் பக்கம் பார்க்க)

# புதிய அரசியலமைப்பு வந்தவுடன் யாழில் அனைவருக்கும் வீடுகள்



## அமைச்சர் விமல் உறுதியளிப்பு

(யாழ்ப்பாணம்)

புதிய அரசியலமைப்புத்திட்டம் அமுலுக்கு வந்தவுடன் யாழ்ப்பாணத்தில் வீடற்ற சகல மக்களுக்கும் இலங்கை அரசு வீடுகளைக் கட்டிக்கொடுத்து அவர்களின் நீண்டகாலக் குறையைத்தீர்த்து வைக்கும் என தேசிய வீடமைப்பு அமைச்சர் விமல் வீரவன்ச உறுதியளித்துள்ளார்.

யாழ்ப்பாணத்துக்கான விஜயத்தினை மேற்கொண்ட அமைச்சர் விமல் வீரவன்ச தேசிய வீடமைப்பு அதிகார சபையின் யாழ். மாவட்ட (17ஆம் பக்கம் பார்க்க)

## மக்கள் கூட்டம் புடைசூழ, மங்கல வாத்தியம் முழங்க நாவலர் சிலை மணிமண்டபத்தில் நேற்று பிரதிஷ்டை

(யாழ்ப்பாணம்)

நல்லை ஆறுமுக நாவலரின் சிலை நேற்று நல்லூர் நாவலர் மணி மண்டபத்தில் மீண்டும் பிரதிஷ்டை செய்யப்பட்டது.

1985ஆம் ஆண்டு நாவலர் மணி மண்டபத்திலிருந்த நாவலர் சிலை, நாவலர் மண்டபத்துக்கு இடமாற்றப்பட்டிருந்தது.

இந்நிலையில் மணி மண்டபத்தில் இடம் மாற்றும் வகையில் மேற்கொண்ட தீர்மானங்களின் அடிப்படையில் நாவலர் சிலை நேற்றுக்காலை நாவலர் மண்டபத்திலிருந்து நல்லூர் மணிமண்டபத்துக்கு மங்கலவாத்தியம் முழங்க ஊர்வலமாக எடுத்து வரப்பட்டது.

அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தாவின் தலைமையில் இடம் பெற்ற இந்நிகழ்வில் யாழ். மாநகர முதல்வர் திருமதி யோ.பற்குணராசா, நல்லை ஆதீன முதல்வர் மற்றும் பேராசிரியர் சி.க.சிற்றம்பலம், நாவலர் சபையினர், இந்து சமய பேரவையினர், யாழ். பல்கலைக்கழக துணை வேந்தர், பேராசிரியர்கள், யாழ்.வணிகக் (17ஆம் பக்கம் பார்க்க)

## அரசியல் சாசனத்துக்கு எதிரான வழக்கு

(கொழும்பு)

உத்தேச அரசியல் சாசனத் திருத்தங்களுக்கு எதிராக உச்ச நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட உள்ளதாக ஜே.வி.பி. அறிவித்துள்ளது.

அரசாங்கத்தினால் திட்டமிடப்பட்டுள்ள 18 ஆவது திருத்தச்சட்ட மூலத்துக்கு எதிராக வழக்குத் தொடரப்படும் என ஜே.வி.பியின் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

அரசியல் (18ஆம் பக்கம் பார்க்க)

## இந்தியக் கடலில் சீன ஆதிக்கம்

(டெல்லி)

இந்தியப்பெருங்கடலில்இருக்கும்அமெரிக்க விமானம் தாங்கி கப்பல் இந்தியப் பெருங் கடலில் சீனா அளவுக்கு அதிகமாக ஆர்வம் காட்டத்துவங்கியிருப்பதை இந்தியா தற்போது உணர்ந்திருப்பதாக இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் எஸ்.எம் கிருஷ்ணா தெரிவித்துள்ளார்.

இந்திய மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் (18ஆம் பக்கம் பார்க்க)

# தமிழ் மக்களுக்கு உதவிசெய்ய இந்திய அரசாங்கம் தவறிவிட்டது



## பேரா. சிற்றம்பலம் காட்டம்

(யாழ்ப்பாணம்)

இலங்கை தமிழ் மக்களுக்குச் செய்திருக்கவேண்டிய பல விடயங்களை இந்திய அரசு செய்யத் தவறிவிட்டது. போர்நடைபெற்றவேளையிலும் போருக்குப்பிந்திய வேளையிலும் தமிழ் மக்களின் நன்மை கருதி இந்திய அரசு எடுத்திருக்க வேண்டிய முக்கிய நடவடிக்கைகளை அது மேற்கொள்ளவில்லை என பேராசிரியர் சி.க. சிற்றம்பலம் தெரிவித்தார். (18ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்



யாழ்ப்பாணத்துக்கு நேற்று வந்த இந்திய வெளியுறவுச் செயலர் நிருபமா ராவ், யாழ்.அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமாரினால் வரவேற்கப்படுவதையும் யாழ்.நூலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலில் கலந்து கொண்ட பிரமுகர்கள் மற்றும் மத குருமார்களையும் படங்களில் காணலாம்.

## என்ன செய்ய முடியும்? இப்படியும் திருடுகிறார்கள்

(சாவகச்சேரி)

தம்மைப் புலனாய்வுத்துறையினர் எனத் தெரிவித்து தங்க நகைகள் தொடர்பாக விசாரணை செய்ய வேண்டும் எனவும் அதற்காகப் பொலிஸ் நிலையத்திற்கு நகைகளுடன் வருமாறு கூறி குடும்பஸ்தர் ஒருவரை அழைத்துச் சென்ற சிலர் அவர் வைத்திருந்த நகைகளைப் பறித்துக்கொண்டுதப்பிச்சென்றுள்ளனர்.

இச் சம்பவம் நேற்று மாலை 3 மணியளவில் சாவகச்சேரி வர்த்தக வங்கி ஒழுங்கையில் உள்ள தனங்கிளப்பு விவசாய சம்மேளனத் தலைவரான விவாகப்பெருமாள் சதானந்தன் என்பவரின் வீட்டில் இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பில் தெரிய வருவதாவது, மோட்டார் சைக்கிளில் சென்ற இருவர் தம்மைப் புலனாய்வுத் துறையினர் எனத் தெரிவித்து பிரஸ்தாப நபரிடம் களவாடப்பட்ட தங்க நகைகள் இருப்பதாகவும் அது குறித்து விசாரிக்கத் தங்க நகைகளுடன் வருமாறு கூறி அவரை அழைத்துச் சென்றுள்ளனர்.

அழைத்துச் செல்லப்பட்ட சதானந்தனை கல்வயல் துர்க்கையம்மன் ஆலயப் பகுதியில் இறக்கி அவர் வைத்திருந்த நகைகளை அழைத்துச் சென்ற நபர்கள் பறித்துக் கொண்டு சென்றுள்ள னர்.

12 பவுண் பெறுமதியான தாலிக்கொடி, 2 பவுண் காப்பு எனப் 14 பவுண்கள் பெறுமதியான நகைகள் திருடப்பட்டுள்ளதாக சாவகச்சேரிப் பொலிஸ் நிலையத்திலும் சிவில் அலு வலகத்திலும் முறையிடப்பட்டுள்ளது. (ச-3,4,29,37)

## ஜனாதிபதி மகிந்தவை நாளை சந்திக்கிறார் நிருபமா

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை இந்திய வெளியுறவுச் செயலாளர் நிருபமா ராவ் நாளை சந்தித்துப் பேசுகின்றார். இலங்கையில் நடைபெறும் மறுசீரமைப்புப் பணிகள் தொடர்பாக முதல்வர் கருணாநிதி சமீபத்தில் பிரதமர் மன்மோகன் சிங்கிற்கு ஒரு கடிதம் எழுதினார்.

அதில் மறுசீரமைப்புப் பணிகளைப் பார்வையிட இலங்கைக்குச் சிறப்புப் பிரதிநிதி ஒருவரை மத்திய அரசு அனுப்பி வைக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டிருந்தார்.

முதல்வர் கருணாநிதியின் கோரிக்கையை ஏற்று நிருபமா ராவ் இலங்கை வந்தார். முதல் நாளான நேற்று யாழ்ப்பாணம், வவுனியா, கிளிநொச்சி ஆகிய பகுதிகளில் தமிழர்களின் மீள்குடியேற்றப் பணிகளை ஆய்வு செய்தார்.

இதனைத் தொடர்ந்து இன்று தமிழர் கட்சிகளின் தலைவர்களைச் சந்திக்கின்றார். அப்போது இலங்கைத் தமிழர்களின் நிலை குறித்து அவர்களிடம் கருத்து கேட்கின்றார். (ச-5)

## வழிகாட்டல் கருத்தரங்கு திகதி அறிவிக்கப்படும்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக முகாமைத்துவக் கற்கைகள், வணிகபீட புதுமுக மாணவர்களுக்கான வழிகாட்டல் கருத்தரங்குக்கான திகதி விரைவில் அறிக்கப்படும் என பீடாதிபதி பேராசிரியர் க. தேவராஜா அறிவித்துள்ளார். (ச)

## உதைபந்தாட்டம்

(கரவெட்டி)

மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக் கழகத்தின் வருடாந்த விளையாட்டு விழாவில் அழைக்கப்பட்ட யாழ்.மாவட்ட முன்னணிக் கழகங்களுக்கிடையில் நடைபெற்று வரும் அணிக்கு 7 பேர் கொண்ட உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று பிற்பகல் 3.30 மணிக்கு இளவாலை யங்ஹென்றிஸ் அணியை எதிர்த்து அல்வாய் மனோகரா அணியும் மற்றுமொரு போட்டியில் பிற்பகல் 4.30 மணிக்கு நாவாந்துறை கலைவாணி அணியை எதிர்த்து சக்கோட்டை சென்சேவியர் அணியும் மோதவுள்ளன. (ச-3,24)

## முழங்காவில் வெங்கடேசருக்கு இன்று கும்பாபிஷேகம்

(கிளிநொச்சி)

முழங்காவில் கிருஷ்ணா நகர் வெங்கடேசர் பெருமாள் ஆலய மகா கும்பாபிஷேகம் இன்று புதன்கிழமை காலை 11 மணிக்கும் 12 மணிக்கும் இடையில் இடம்பெறவுள்ளது.

இவ் ஆலயத்தில் உற்சவ மூர்த்தியாகிய வெங்கடேசப் பெருமாள் வன்னியில் ஏற்பட்ட இடப்பெயர்வின்போது தானும் மக்களுடன் சோந்து இடம்பெயர்ந்து அபயமளித்தார்.

தொடர்ந்து வவுனியா இராமநாதன் இடைத் தங்கல் முகாமிலும் எழுந்தருளி அருள்பாலித்தார்.

தற்போது முழங்காவிலில் மக்கள் மீள் குடியமர்ந்ததைத் தொடர்ந்து அடியவர்கள் ஆலயத்தைப் புனரமைத்து திருக்குடமுழுக்கு விழாவுக்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளனர். (ச-5)


நல்லூர் பெருந்திருவிழாவை முன்னிட்டு

HSDPA HUAWEI 7.2 MBPS MODEM
இனை ஒருவருட உத்தரவாதத்துடன் எம்மிடம் பெற்றுக்கொள்ள முடியும்
Rs - 5950/-

கொழும்பு விலையிலும் குறைவான விலையில்
2.7 , 2.8 Dual Core, 2.93 Core 2 Dou, 2.93 Core i3
hp BRANDED PC, hp LAP TOP
ஆகிய கணனிகளை நம்பமுடியாத விலைக்கழிவில் பெற்றுக்கொள்ள முடியும்.

இச்சலுகை 3ம் திகதியில் இருந்து ஆரம்பம்

மேலதிக விபரங்களை எமது அலுவலகத்தில் பெற்றுக்கொள்ள முடியும்.

NALIN information Technologies Pvt Ltd
PARAMESWARA JUNCTION
TP:0212221166,0777667974
(C-988)



முதன்முறையாக யாழ்நகரில்

வீரகேசரியின் 80ஆவது ஆண்டு விழாவை முன்னிட்டு

இசைமணி, பத்மஸ்ரீ டாக்டர் சீர்காழி கோவிந்தராஜனின் புதல்வர்
கலைமாமணி பத்மஸ்ரீ டாக்டர் சீர்காழி ஜி. சிவசிதம்பரத்தின்

இன்னிசைக்கச்சேரி

இடம் :
இந்துக்கல்லூரி விளையாட்டரங்கு
யாழ்ப்பாணம்

காலம் :
02.09.2010

நேரம் :
மாலை 6.00மணி



அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்!

இலங்கை போக்குவரத்துச் சபையின் இரவு இறுதிப் பேருந்து சேவைகள் யாவும் யாழ்.இந்துக் கல்லூரி வீதியூடாகச் செல்லும்.

ANNIVERSARY வீரகேசரி 80 YEARS SINCE 1930

(C-989)

# இன்று ஒரு தகவல்

## தாயின் கண்ணீர்

வயதான அம்மா ஒருத்தர் ஒருநாள் என்னுடன் தொலைபேசி யில் கதைத்தார்.

"ஐயா,நான் தினமும் 'இன்று ஒரு தகவல்' கேட்டுக் கொண்டிருக் கிறேன்.உங்களிடம் ஒருகேள்வி கேட்கவேண்டும்" என்றார்.

"என்ன?"என்று கேட்டேன்.

"எனக்குச் சொந்தமாக ஒரு நல்ல வீடு இருக்கிறது.வேண்டும் என்ற அளவிற்குப் பணம் இருக்கிறது. கணவரும் மிகவும் நல்ல வர்.ஓய்வு பெற்று வீட்டில் தான் இருக்கிறார். பிள்ளைகளெல்லாம் பெரியபெரிய உத்தியோகத்தில் இருக்கிறார்கள்.பணம் எல்லாம் கொண்டு வந்து கொடுக்கிறார்கள்.அப்படியிருந்தும் என் மனதில் நிம்மதியில்லை.வாழ்க்கையில் ஒரு நிறைவு இல்லையே" என்றார்.

"ஏன்?"என்று கேட்டேன்.

"அதைத்தான் நான் உங்களைக் கேட்கிறேன். ஏன் அப்படி?" என்றார்.

எனக்கு ஒன்றும் புரியவில்லை.சிறிது நேரம் குழம்பிப்போய் விட்டேன்.இருந்தாலும் அதை அவர்களிடம் காட்டிக் கொள்ளாமல் சாமர்த்தியமாக,

"என்னம்மா? உங்களுடைய மனதில் நீங்கள் ஏதோ ஒன்றை எதிர்பார்க்கிறீர்கள்.அது நிறைவேறவில்லை அப்படித்தானே?" என்றேன்.

"ஆமாம்"என்று சொன்னார்.

அதன் பின் அவரிடம் கொஞ்சம் மனம் விட்டுப் பேசும் போது, விட யம் தானாக வெளியே வந்தது.

அதாவது அவருடைய பிள்ளைகள் பெரிய பெரிய உத்தியோகத் தில் இருப்பதனால் அவசர அவசரமாக வந்து விட்டு ஓடுகிறார்க ளாம்."ஆசையாக அம்மா என்று கூப்பிட்டுக் கொண்டு உட்கார்ந்து கொஞ்ச நேரமாவது என்னிடம் பேசினால் என்மனம் எவ்வளவு நன்றாக இருக்கும்?"என்றார் அந்த அம்மா. இப்படி ஒரு ஏக்கம் அந்தத் தாயின் மனதில்.

இப்படி மகனுடைய அன்புக்காக மட்டுமே ஏங்கும் தாய்மார்கள் பலர் இருக்கிறார்கள் இந்த உலகத்தில். இதை நினைக்கும் போது ஒரு வெளிநாட்டு நாடோடிக்கதை ஞாபகத்துக்கு வருகிறது.

அதாவது, கடவுள் படைப்புத் தொழிலில் மிகவும் மும்முரமாக ஈடுபட்டுக் கொண்டிருந்தாராம்.மீன்களைப் படைத்தார். விலங்குக ளைப் படைத்தார்.அவருக்குத் திருப்தி ஏற்படவில்லை.அதன்பின் மனிதர்களைப் படைத்தார்.அப்பொழுதும் அவருக்கு மனநிறைவு ஏற்படவில்லை.கடைசியாக தன்னுடைய சக்தி முழுவதையும் பயன்படுத்தி குறையே இல்லாத ஒரு படைப்பை உருவாக்கினார். உன்னதமான ஒரு படைப்பு.அதுதான் பெண்.அதாவது தாய்.

இப்படி உருவாக்கி எல்லோரையும் இந்த உலகத்தில் விட்டு விட்டார்.அதற்குப்பின் சிறிது காலம் கழித்து தன்னுடைய தேவி யை அழைத்துக் கொண்டு இந்த பூலோககத்திற்கு வந்தார். தன் னுடைய குறையில்லாத படைப்பாகிய பெண்ணைப் பார்த்தார். ஏனம்மா உனக்கு இன்னும் ஏதாவது குறையிருந்தால் சொல்லு அதையும் நிவர்த்தி செய்து விடுகிறேன் என்றார்.

அந்த அம்மா பார்த்தார்.

"சுவாமி,எனக்கு நீங்கள் கொடுத்திருப்பது இரண்டு கை. என்னு டைய பிள்ளைகளுக்குச் சேவை செய்ய இந்த இரண்டு கைகள் போதாது. அதனால் இன்னும் இரண்டு கைகள் கொடுத்தால் நல்லது"என்றார்.

கடவுள் பார்த்தார்.

" அதனால் என்ன? அப்படியே செய்து விடலாம். இதோ அதற் கான வரம் கொடுத்து விட்டேன்"என்றார். அந்த அம்மாவுக்கு இப் பொழுது நான்கு கைகள் ஆகிவிட்டது.

நான்கு கைகளாலும் குழந்தைகளுக்குச் சேவை செய்ய ஆரம்பித்து விட்டார். கடவுள் திருப்தியாக திரும்பிப் போனார்.

அதன் பின் சிறிது காலம் கழித்து மறுபடியும் தேவியுடன் திரும்பி வந்தார்.

பெண்ணைப் பார்த்தார். இப்பொழுது சந்தோஷம் தானே என்றார். அதற்கு அந்த அம்மா," சந்தோஷம் தான். இருந்தாலும் இப்பொழுது எனக்கிருக்கும் இரண்டு கால்களும் போதவில்லை. இன்னும் இரண்டு கால்கள் இருந்தால் நன்றாக இருக்கும். ஓடியாடி பிள்ளைகளுக்காக வேலை செய்ய வேண்டியிருக்கிறது என்றார்.

'சரி' என்று சொல்லி நான்கு கால்களைக் கொடுத்து விட்டு திருப்தியாக புறப்பட்டார். மறுபடியும் சிறிது நாட்கள் கழித்து தேவி கடவுளிடம் சொன்னார். நீங்கள் என்னதான் முயற்சி செய்தாலும் முழுமையான ஒரு படைப்பை உருவாக்க முடியாதென்று தான் நினைக்கிறேன் என்றார்.

"அப்படியா சொல்கிறாய்? வா அந்தப் பெண்ணைப் பார்த் துவிட்டு வருவோம்."என்று புறப்பட்டு இங்கே வந்தார்.

இங்கே வந்து பார்த்தால், நான்கு கால்கள் நான்கு கையுடன் அந்தப் பெண் ஒரு சுவரில் சாய்ந்து உட்கார்ந்து அழுது கொண் டிருந்தார். இப்பொழுது தேவி அந்தப் பெண்ணைச் சுட்டிக்காட்டி கடவுளிடம் கேட்டார்:

"நீங்கள் அந்தப் பெண்ணுக்கு கையையும் கால்களையும் கொடுத்தீர்கள். சரி, அந்தக் கண்ணீரையும் எதற்காகக் கொடுத் தீர்கள்?" என்று கேட்டார்.

அதற்குக் கடவுள் சொன்னார்:

"கையை கொடுத்து நான் தான். காலையும் கொடுத்தது நான் தான். ஆனால் அந்தக் கண்ணீரைக் கொடுத்தது நானில்லை. அதைக் கொடுத்தது அந்த அம்மாவின் பிள்ளைகள்" என்றாராம்.

இன்றைக்கும் அப்படித்தான். பல பிள்ளைகள் அவர்களுடைய அம்மாவுக்கு கண்ணீரைத் தான் கொடுத்துக் கொண்டிருக்கிறார் கள். அம்மாவை மதிக்கும் பிள்ளைகள் தான் இன்று நல்ல படி யாக இருக்கிறார்கள். அதை ஞாபகத்தில் வைத்திருங்கள்

உதாரணம்.

வி.ஜி.பி. சகோதரர்கள் போன்றவர்கள். இந்தக் காலத்துப் பிள்ளை ஒருத்தன் அவனுடைய அம்மாவிடமும் நல்ல பிள்ளை யாக நடந்து கொள்வான். மனைவியிடம் நல்ல கணவனாக நட ந்து கொள்வான். மிகவும் சாமர்த்திய சாலி. ஒருநாள் நான் அவ னிடம் கேட்டேன்:

"ஏனப்பா... உன்னுடைய அம்மாவும் மனைவியும் சண் டைபோட்டுக் கொண்டிருந்தால் நீ எந்தப் பக்கம்? என்றேன். " வீட்டுக்கு வெளிப் பக்கம்" என்றான்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# இலங்கை வங்கியினால் முகாமைத்துவ பயிலுநர் தரங்களுக்கு விண்ணப்பங்கோரல்

(யாழ்ப்பாணம்)

இலங்கை வங்கியினால் வங் கித்துறையினூடாக தமது தொழி லில் முன்னேறுவதற்கு நாட்டம் கொண்ட தகைமையும் ஆர்வமும் கொண்ட இளைஞர் யுவதிகளிமி ருந்து முகாமைத்துவ பயலுநர் தரங் களுக்கு ஆட்சேர்ப்பதற்கு விண் ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இதற்கு விண்ணப்பிப்பவர்கள் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழக மொன்றில்பிரதானமாகவங்கியியல், நிதியியல், முகாமைத்துவம், வணிக நிர்வாகம், வர்த்தகம் , பொருளாதாரம் , சந்தைப்படுத்தல், மனித வள முகா மைத்துவம், கணிதம், புள்ளி விபர வியல் , தகவற் தொழில்நுட்பம் / கணனியியல் , பௌதிக விஞ்ஞா னம் , சமூக விஞ்ஞானம் , பொறி யியல் கட்டட நிர்மாணக்கலை , சட்டம், விவசாயம் அல்லது தொடர் புடைய ஏனைய துறையில் வகுப் புடன் பட்டமொன்றைக் கொண்டி ருத்தல் வேண்டும். அல்லது மேற் குறித்த துறைகளில் பட்டமொ ன்றை கொண்டிருப்பதோடு தொடர் புடைய துறையில் பட்டப்பின் படிப்பு தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

மேலும் மேற்குறித்த துறைக ளில் பட்டமொன்றை கொண்டிருப் பதோடு இலங்கை வங்கியாளர் நிறுவனத்தில் AIB/DBF தகைமை யை அல்லது அதற்குச் சமமான U.K தகைமையைக் கொண்டிருத் தல் வேண்டும். அல்லது CIMA/ ICA/ACCA/CFA உறுப்புரிமை ஆகியவற்றை கொண்டிருத்தல் வேண்டும். அல்லது சட்டத்தரணி யும் இதற்கு விண்ணப்பிக்கலாம்.

மேலும் இலங்கைப் பிர ஜையாக இருப்பதுடன்தெரிவு செய்யப்படும் விண்ணப்ப தாரிகள், சிறப்பு தொடர்பா டல் மற்றும் நபர்களுக்கி டையே தொடர்பு கொள்ளும் ஆற்றலுடன் குழுவாகஇணை ந்து பணியாற்றத்தக்க தலை மைத்துவப் பண்புகளை கொண்டிருத்தல் வேண்டும். அத்துடன் கணனி அறிவு விசேட தகுதியாக கருதப்படும். விண்ணப்ப முடிவுத் திகதிய ன்று 30 வயதிற்குட்பட்ட வராக இருத்தல் வேண்டும்.

தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரர் இரண்டு வருட பயிற்சியின் பின்பு தகுந்த தெனக் கருதின் நிரந்தர நிறை வேற்று உத்தியோகத்தர் தரத்திற்கு உள்ளீர்க்கப்படுவர்.

பயிற்சிக் காலத்தில் மாதாந்த கொடுப்பனவாக 25 ஆயிரம் ரூபா வழங்கப்படுவதுடன் நிரந்தர சேவை க்கு உள்ளீர்க்கப்பட்டால் கவர்ச்சி கரமான சம்பள பொதியுடன் ஏனைய அனுகூலங்களும் வழங்கப்படும். அத்துடன் நாட்டின் எந்த வொரு பாகத்திலும் பணியாற்ற ஆயத்த மாக இருத்தல் வேண்டும் எனவும் குறிப்பிடப்படுகிறது.

பொது அறிவு பகுப்பாய்வுத்திற மைகள் , ஆங்கிலமொழி ஆகியவற் றில் எழுத்துப் பரீட்சையின் பின்பு தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் நேர் முகப்பரீட்சைக்கு அழைக்கப்படு வர் எனவும் குறிப்பிடப்படுகிறது.

வங்கியினால் வெளியிடப்பட்ட மாதிரி விண்ணப்பப்படிவத்துக்க மைய விண்ணப்பத்தை தயாரித்து அத்துடன் பிறப்பு, கல்வி மற்றும் தொழில்சார் தகைமைச் சான்றி தழ்களின் போட்டோ பிரதிகளையும் இணைத்து (மூலப்பிரதிகள் அல்ல) எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக பிர தான முகாமையாளர் (வளங்கள் மற்றும் தொழில்சார் அபிவிருத்தி *இலங்கை வங்கி 26 ஆம் மாடி , தலைமைக்காரியாலயக் கட்டடம், இல.04, இலங்கை வங்கி மாவத் தை, கொழும்பு-01* என்ற முகவ ரிக்கு அனுப்பிவைக்கவேண்டும்என வும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ-4)

# இராசி பலன்

*01.09.2010*
*(ஆவணி 16, புதன்கிழமை)*
*சப்தமி காலை 6.48 மணிவரை*
*கார்த்திகை முற்பகல் 10.17 மணிவரை*
*இராகுகாலம் 12.05-1.35 மணிவரை*
*சுபநேரம் 4.35-6.05 மணிவரை*
*சிறி கிருஷ்ண ஜெயந்தி ஜன்மாஸ்டமி.*

**மேடம்** யோகமான நாள், யோசிக்காமல் செய்த காரியங்களில் கூட வெற்றி பெறு வீர்கள், வீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளும் வாய்ப்புண்டு, சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு.

**இடபம்** வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், தொழில் நலன் கருதி பயணம் ஒன்றை மேற்கொள்வீர்கள், திட்ட மிட்ட காரியமொன்றில் மாற்றம் செய்வீர்கள்.

**மிதுனம்** புதிய நட்பால் பொருள் விரயம் ஏற்படலாம், வியாபாரத்தில் மாற்றம் ஏற்படலாம், பக்குவமாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள்.

**கடகம்** வாழ்க்கைப் பயணத்திற்கு வழி காட்டுபவர்களைச் சந்தித்து மகிழ்வீர்கள், உத்தியோகமும், உயர்வும் வரும், பணம் பல வழிகளிலும் வந்து சேரலாம்.

**சிங்கம்** வீட்டை அழகுபடுத்துவதில் ஆர்வம் காட்டுவீர்கள், தொழில் முன்னேற்றப் பாதையை நோக்கிச் செல்லும், செல்வாக்கு மேலோ ங்கும், சிறப்பான நாள்.

**கன்னி** தொழிலில் இருந்த எதிர்ப்புக்கள் குறையும், குறைந்த செலவில் சில காரியங்கள் நடைபெறலாம், பிரயாணத்தின் மூலம் அனுகூலம் கிடைக்கும்.

**துலாம்** சில பிரச்சினைகளை கண்டும் காணா மலும் இருப்பது நல்லது, சேமிப்புக் கள் கரையக் கூடிய நிலை ஏற்படும், மனதில் கவலைகள் தோன்றி மறை யலாம், பயணத்தில் அவதானம் தேவை.

**விருச்சிகம்** நண்பர்கள் மூலம் நல்ல தகவல்கள் வந்து சேரும், பாடுபட்டதற்கேற்ற பலன் இன்று கிடைக்கும், தொழில் முன்னேற்றத்திற்காக புதியவர்களை இணைத்துக் கொள்வீர்கள்.

**தனுசு** பாக்கிகள் வசூலாகி பரவசப்படும் நாள், இனத்தார் பகைமாற எடுத்த முயற்சி வெற்றி பெறும், வருங்காலத் தைப் பற்றிய சிந்தனை மேலோங்கும், பேச்சில் வசியம் காணப்படும்.

**மகரம்** மனதிற்கினிய சம்பவங்கள் நடை பெறும் நாள், பிறர் ஒத்துழைப்பால் தொழில் முன்னேற்றம் காண்பீர்கள், பிள் ளைகளால் சிறு வருமானங்கள், உண்டு சொத்துக்ளால் இலாபம் கிட்டும்.

**கும்பம்** மனதிற்கினிய செய்திகள் வந்து ¼ Å, தாய்வழி ஆதரவு கிட்டும், வாகனத்தை பழுது பார்க்கும் எண்ணம் மேலோங்கும், மதிப்பும் மரியாதையும் உயரும் நாள்.

**மீனம்** சந்தித்தவர்களால் சந்தோசம் கிடைக் கும், ஆதரவு தருபவர்களின் எண்ணி க்கை அதிகரிக்கும், நேற்றைய பிரச்சி னை இன்று முடிவுக்கு வரலாம், பொதுநல ஈடுபாட்டால் புகழ் பெறுவீகள்.

வளவன்

# கனகரத்தினம் சுவாமிகளின் 82 ஆவது குருபூசைத்தினம்

(யாழ்ப்பாணம்)

கந்தர்மடம் குமாரசுவாமி வீதியில் அமைந்துள்ள வேதா ந்த மடத்தில் மடத்தின் ஸ்தா பகரும் பெரிய சாமி என்று அழைக்கப்படுபவருமான ஸ்ரீமத் கனகரத்தினம் சுவா மிகளின் வருடாந்த குருபூ சை நாளை வியாழக்கிழமை நடைபெறும்.

இது 1922 ஆம் ஆண்டு ஆவணி மாதம் மிருக சீரிட நட்சத்தி ரத்தில் சமாதியடைந்த சுவாமிக ளின் 88 ஆவது குரு பூசையாகும்.

அன்றைதினம்காலை10மணிக்கு தேவார இசைமணிதாவடியூர் கே.ஆர். திருஞானசம்பந்தரின் பண்ணி சைக் கச்சேரி இடம்பெறவுள்ளது.

அதனைத் தொடர்ந்து சுவாமி களின் சமாதிக்கு விசேட அபிஷேக ஆராதனைகளும் பூசையும் இடம் பெறவுள்ளது. (ஸ்ரீ-2)

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | சாவகச்சேரி |
|---|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 70 | 40 |
| உருளைக்கிழங்கு | 80 | 80 | 80 |
| பச்சைமிளகாய் | 60 | 80 | 80 |
| தக்காளி | 70 | 120 | 70 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 70 | 50 |
| கோவா | 70 | 80 | 70 |
| கரட் | 70 | 100 | 90 |
| பூசணி | 40 | 50 | 35 |
| புடோல் | 30 | 40 | 40 |
| வாழைக்காய் | 50 | 70 | 50 |
| சின்ன வெங்காயம் | 40 | 60 | 60 |
| பெரிய வெங்காயம் | 80 | 100 | 80 |
| பாகற்காய் | 80 | 100 | 80 |
| வெண்டிக்காய் | 40 | 70 | 40 |
| கருணைக் கிழங்கு | 80 | 80 | 60 |
| பயற்றங்காய் | 100 | 120 | 90 |
| லீக்ஸ் | 120 | 140 | 100 |
| பீற்றூட் | 20 | 50 | 40 |
| கறிமிளகாய் | 60 | 80 | 80 |
| முருங்கைக்காய் | 140 | 140 | 90 |
| போஞ்சி | 120 | 170 | 130 |
| கத்தரிதம்புள்ள | 50 | 50 | 50 |
| கீரை - 1 பிடி | 30 | 30 | 20 |
| தேசிக்காய் | 80 | 80 | 90 |
| தேங்காய் (ஒன்று) | 40 | 30 | 30 |




யப்பான் Joicep நிறுவனத்தின் உதவியுடன் இலங்கை குடும்பத்திட்ட சங்கத்தின் ஏற்பாட்டில் குடும்பநல மருத்துவமாதுக்கள் 107 பேருக்கு107 சைக்கிள் வழங்கும் வைபவம் நேற்று முன்தினம் திங்கட்கிழமை யாழ்.பிராந்திய சுகாதார திணைக்களத்தில் வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ. சந்திரசிறி தலைமையில் நடைபெற்றது.இதில் ஆளுநர் குடும்பநல மருத்துவ மாது ஒருவருக்கு சைக்கிள் வழங்குவதையும் , அதனைத் தொடர்ந்து யப்பான் நிறுவனத்தின் அதிகாரிகளுடன் நடைபெற்ற கலந்துரையாடலையும், இந் நிகழ்வில் கலந்து கொண்ட மருத்துவ மாதுக்களின் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம் (படங்கள்-என்-குமார்)

## மாவட்ட பணிப்பாளர் நியமனம்

(யாழ்ப்பாணம்)

புத்தூரைச் சேர்ந்த தில்லையம்பலவாணர் விமலன் மனித உரிமைகள் நிறுவனத்தின் தலைமைச் செயலகத்தினால் யாழ். மாவட்டத்திற்கான மனித உரிமைகள் நிறுவனத்தின் கல்வி மற்றும் கலாசார அலுவல்களுக்கான மாவட்ட பணிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் சமாதான நீதவானாகவும் பளை பிரதேச செயலகத்தில் நிகழ்ச்சித்திட்ட உதவியாளராகவும் கடமையாற்றிவருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ)

## தேசிய பாதுகாப்பு தின நூல் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில், எதிர்வரும் டிசம்பர் மாதம் 26 ஆம் திகதி தேசிய பாதுகாப்புத் தினத்தை நினைவு கூருவதற்கான செயற்பாடுகள் யாழ்.மாவட்ட செயலகத்தினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இத்தினத்தில் அனர்த்தம் தொடர்பான தகவல்களை உள்ளடக்கிய நூல் ஒன்று வெளியிடத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதற்கான ஆரம்ப நடவடிக்கைகளை முன்னெடுக்கும் முகமாக இம் மாதம் 9 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 10 மணிக்கு யாழ்.மாவட்ட செயலகத் தில் நடைபெறுமென யாழ்.மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ரூபினி வரதலிங்கம் அறிவித்துள்ளார்.(ஸ்ரீ-2)

## நல்லூர் மஹோற்சவத்தை முன்னிட்ட நிகழ்வுகள்

(நல்லூர்)

நல்லூர் முருகன் உற்சவ காலத்தையொட்டி நல்லூர் இளங்கலைஞர் மன்றத்தினால் தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் அனுசரணையுடன் துர்க்கா மணி மண்டபத்தில் நடைபெற்றுவரும் தெய்வீக இசையரங்கு நிகழ்வில் 18 ஆம் நாளான இன்று மாலை 6.30 மணிமுதல் 7.30 மணி வரை திருமதி விக்னேஸ்வரி நரேந்திரா (பாட்டு), ஏ.ஜெயராமன் (வயலின்), எஸ்.மகேந்திரன் (மிருதங்கம்),செல்வன் ரி.வரோதயன் (கடம்) ஆகியோர் வழங்கும் திருமுறைக்கச்சேரி இடம்பெறவுள்ளது.

☼ ☼ ☼

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் நல்லூர் கந்தசுவாமி கோயில் மஹோற்சவ காலத்தில் நல்லூர் நாவலர் மணி மண்டபத்தில் ஆத்மீக சிந்தனையுடன் நடைபெற்றுவரும் சமயச் சொற்பொழிவு மற்றும் கலைநிகழ்வுகளில் இன்று பிற்பகல் 3 மணி முதல் 6 மணிவரை கிரியைகளின் பயன்கள் என்னும் விடயம் பற்றி சைவப்புலவர் பொ.சந்திரவேல் சிறப்புச் சொற்பொழிவாற்றவுள்ளார்.

தொடர்ந்து அனலைதீவு மனோன்மணி அம்பாள், வட்டுக்கோட்டை கண்ணகி அம்பாள், தெல்லிப்பழை கோதரை அம்பாள் ஆகிய அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

☼ ☼ ☼

நல்லூர் கந்தன் உற்சவத்தையொட்டி நல்லூர் சைவமகா சபையினால் நல்லூர் திருஞானசம்பந்தர் ஆதீன் குருமூர்த்த மண்டபத்தில் நடைபெற்று வரும் வில்லிபாரதம் பற்றிய தெய்வீக தொடர் இசைப் பேருரையில் இன்று மாலை 6.30 மணிக்கு திரௌபதி கல்யாணம் என்னும் விடயம் பற்றி பிரம்மஸ்ரீ சிவ. வை.நித்தியானந்த சர்மா தொடர் இசைப் பேருரை நிகழ்த்தவுள்ளார். (ஸ்ரீ-4)

## மகாகும்பாபிஷேகம்

(பூநகரி)

முழங்காவில் கிருஸ்ணா நகர் வெங்கடேசப் பெருமாள் மகா கும்பாபிஷேகம் இன்று புதன்கிழமை காலை 9 மணி முதல் 12 மணி வரையான சுபவேளையில் பிரதம குரு சிவ ஸ்ரீ இரத்தினேஸ்வரக் குருக்கள் தலைமையில் நடைபெறவுள்ளது. (ஸ்ரீ-7)

## மருத்துவ சேவை

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்தியசாலையின் பொது வைத்தியநிபுணர் வைத்தியகலாநிதி கேதீஸ்வரன் வாரம் தோறும் வியாழக்கிழமைகளில் சாவகச்சேரி ஆதார வைத்திய சாலையில் சிகிச்சா சேவையை (கிளினிக்) நடாத்தி வருகின்றார்.

இச்சிகிச்சாசேவை மூலம் தென்மராட்சி பொதுமக்கள் நன்மையைப் பெற்றுக்கொள்ளலாம் என யாழ். பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-4)

## திடீர் மின்வெட்டுக்கள்! மக்கள் விசனம்

(இருபாலை)

கோப்பாய்,இருபாலை,கட்டப்பிராய் ஆகிய பிரதேசங்களில் நாளாந்தம் மாலை 6 மணிக்குப் பின்னர் திடீர் மின்வெட்டுக்கள் ஏற்படுவதனால் அப்பகுதி மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

எனவே இதனை நிவர்த்தி செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு மின்சார சபையிடம் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஸ்ரீ-4-136)

## கட்டாக்காலி நாய்களின் தொல்லையால் பெரும் சிரமத்துக்குள்ளாகும் நோயாளிகள்

(அல்வாய்)

பருத்தித்துறை மந்திகை ஆதார வைத்தியசாலையில் கட்டாக்காலி நாய்கள் ,பூனைகள் ஆகியவற்றின் தொல்லைகள் அதிக ரித்து நோயாளர்களுக்கும் வருகை தரும் பொது மக்களுக்கும் சிரமத்தை ஏற்படுத்துகின்றன.


இப்பிராணிகள் நோயாளர்களின் உணவுப் பொருட்களை உண்பதாலும் இழுத்துச் செல்வதாலும் இப்பகுதியில் இவைகளின் அட்டகாசம் அதிகரித்துக் காணப்படுகிறது.

இச்சூழ்நிலையில் கட்டாக்காலி நாய்களை நஞ்சூட்டிக் கொல்ல முடியாததினால், பருத்தித்துறை பிரதேசசபை ஊழியர்கள் உயிருடன் இவற்றினைப் பிடித்து அப்புறப்படுத்துவதற்கான நடவடிக்கையினை மேற்கொள்ள வேண்டுமென இங்குள்ள நோயாளிகளும் பொதுமக்களும் வேண்டுகோள் விடுக்கின்றனர் . (ஸ்ரீ-2-19)

## இசைக்கச்சேரியும் இசைப்பயிற்சிப்பட்டறையும்

(யாழ்ப்பாணம்)

யாழ் . பல்கலைக்கழக ஊழியர் சங்க ஏற்பாட்டில் மானிப்பாய் ஜங்கரன் மோட்டோஸ் ரம்னா ரவல்ஸ் நிறுவனத்தின் அனுசரணையுடன் தென்னிந் தியாவிலிருந்து வருகைதந்துள்ள கலைமாமணி திருமதி பூஷணி கல்யாணராமனின் இசைக் கச்சேரியும் இசைப்பயிற்சிப் பட்டறையும் இன்றும் நாளையும் நடைபெறவுள்ளது.




இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் என்.சண்முகலிங்கன் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

முதலாம் நாள் நிகழ்வான இன்று புதன் கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு கைலாசபதி கலையரங்கில் கலைமாமணி பூஷணி, கல்யாண ராமன் (பாட்டு) திருமதி கல்யாணி சங்கர் வயலின்) கும்பகோணம், சுவாமி நாதன் (மிருதங்கம்) சென்னைப் பல்கலைக்கழக முதுகலைமாணி நா. மாதவன் (கடம்), நுண்கலைமாணி சி.செந்தூரன் (முகர்சிங்) ஆகியோர் இணைந்து இசைக்கச்சேரி வழங்கவுள்ளனர்.

இரண்டாம் நாள் நிகழ்வான நாளை வியாழக்கிழமை மு.ப. 9.30 மணிக்கு மருதனார்மடம் இராமநாதன் நுண்கலைக் கழகத்தில் இசைப்பயிற்சிப்பட்டறை நடைபெறவுள்ளது.

இதில் இசைத்துறையைச் சார்ந்த அனைவரையும் கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். (ஸ்ரீ-4)

## வடிகால் புனரமைப்பு

(கொழும்புத்துறை)

குருநகர் கொண்டடி வீதியில் அமைந்துள்ள வடிகால் தற்போது யாழ். மாநகர சபையினால் புனரமைக்கப்பட்டு வருகின்றது.

நீண்ட நாட்களாக சேதமடைந்திருந்த மேற்படி வடிகால் அப்பகுதி மக்களின் கோரிக்கைக்கு அமைய தற்போது யாழ். மாநகர சபைப் பணியாளர்களினால் புனரமைக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஸ்ரீ-7-51)

## யாழ்.மாநகர சபையினால் வீதி புனரமைப்பு பணிகள்

(கொழும்புத்துறை)

குருநகரை அண்டியுள்ள ராஜேந்திரா வீதியின் குறுக்கு வீதி புனரமைப்புப் பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன.

யாழ்.மாநகரசபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசாவின் பணிப்பின் பேரில் துணை முதல்வர் து.இளங்கோவின் மேற்பார்வையில் இப்புனரமைப்புப் பணிகள் நடைபெறுகின்றன.

அத்துடன் குறித்த வீதி குன்றும் குழியுமாக கடந்த 42 வருடங்களாக புனரமைக்கப்படாமல் காணப்பட்டதாகவும் இதனால் இப்பகுதி மக்கள் பலத்த சிரமங் களை எதிர் நோக்கி வந்ததாகவும் யாழ்.மாநகர சபை முதல்வரிடம் விடுத்த கோரிக்கையையடுத்து இவ்வீதி புனரமைப்பு செய்யப்படுவதாகவும் குறிப்பிடப்படுகிறது. (ஸ்ரீ-4-51)

## செயலமர்வு திகதி மாற்றம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண பிராந்திய சுகாதார சேவைகள் அலுவலகத்தினால் எதிர்வரும் 4 ஆம் திகதி சனிக்கிழமை யாழ்ப்பாணக் கோட்டப் பாடசாலை அதிபர் மற்றும் ஆசிரியருக்கு நடத்தப்படவிருந்த மாணவர் உடல் உள மேம்பாடு தொடர்பான விழிப்புணர்வுச் செயலமர்வு எதிர்வரும் 6ஆம் திகதி திங்கட்கிழமை காலை 8.30 மணி முதல் பிற்பகல் 4.30 வரை யாழ். வலயக் கல்வி அலுவலகத்தின் முகாமைத்துவ மண்டபத்தில் நடைபெறும் என யாழ்ப்பாண வலயக் கல்விப்பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-4)

# கரைச்சி பிரதேச செயலகப்பிரிவில்

## மீள்குடியேற்றப்படவுள்ளோருக்கான பதிவுகள்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த தற்காலிகமாக வெளிமாவட்டத்தில் வசித்து வரும் கரைச்சிப்பிரதேச செயலகப்பிரிவுக் குட்பட்ட அனைவரும் தங்கள் தற்காலிக பதிவினை உரிய பிரதேச செயலகங்களில் நீக்கம் செய்து மீளக் குடியமர்விற்காக பின் வரும் அட்டவணையில் குறிப்பிட்டவாறு குறித்த திகதிகளில் கிராம அலுவலர் பிரிவு களுக்குட்டவர்கள் உரிய இடைத் தங்கல் முகாமிற்கு வருகை தந்து காலை 9 மணி தொடக்கம் மாலை 2 மணி வரை தங்களது மீளக் குடியமர்விற்கான பதிவுளை மேற் கொள்ளுமாறு கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் திருமதி றூபவதி கேதீஸ்வரன் அறி வித்துள்ளார்.

| வருகை தர வேண் டிய திகதி | பதியப்படவுள்ள கிராம அலுவலர் பிரிவு | இடைத்தங்கல் முகாம் |
|---|---|---|
| 04.09.2010 | பொன்னகர், பாரதிபுரம், மலையாள புரம், விவேகானந்தநகர், கிருஷ்ணபுரம், உதயநகர் கிழக்கு, உதயநகர் மேற்கு, அம்பாள்குளம், செல்வாநகர், அம்பாள் நகர் (சாந்தபுரம் கிராமம் தவிர்ந்தவர் கள்) | கிளி/மத்திய கல்லூரி |
| 11.09.2010 | வட்டக்கச்சி, சிவிக்சென்ரர், மாயவ னூர், மாவடியம்மன், இராமநாதபுரம், பன்னங்கண்டி | கிளி/ இராமநாத புரம் ம.வி |
| 18.09.2010 | கனகபுரம், திருநகர் தெற்கு, திரு நகர் வடக்கு, கணேசபுரம், ஜெயந்திநகர், பெரியபரந்தன், கிளிநகரம், ஆனந்த புரம், தொண்டமான்நகர், கனகாம் பிகைக் குளம், திருவையாறு, திருவை யாறு மேற்கு, இரத்தினபுரம், மருதநகர், உருத்திபுரம் வடக்கு, உருத்திரபுரம் கிழக்கு, உருத்திரபுரம் மேற்கு சிவநகர். | கிளி/மத்திய கல்லூரி |
| 25.09.2010 | வன்னேரிக்குளம், ஆனை விழுந் தான், புதுமுறிப்பு கண்ணகை புரம், ஸ்கந்தபுரம், அக்கராயன்குளம், கோணாவில், ஊற்றுப்புலம். | கிளி/மத்திய கல்லூரி |

இதேவேளை மேற்குறிப்பிட்ட திகதிகளிற் குப் பின்னர் அம்பாள்நகர், சாந்தபுரம் தவிர்ந்த ஏனைய கிராமசேவகர் பிரிவுகளில் மீள்குடியேற்றப் பதிவினை மேற்கொள்ப வர்களுக்கு எதுவித நிவாரணமும் வழங்கப் படமாட்டாதென அவர் மேலும் அறிவித்துள் ளார். (ஸ்ரீ-2)

# மேர்வின் குற்றவாளியில்லை! அவர் நடத்தியது நாடகம்!

## என்கிறார் மைத்திரிபால சிறிசேன

(கொழும்பு)

முன்னாள் பிரதியமைச்சர் மேர்வின் சில் வாவுக்கு எதிராக சுமத்தப்பட்டிருந்த சகல குற் றச்சாட்டுகளில் இருந்தும் அவர் விடுவிக்கப் பட்டுள்ளதாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அறி வித்துள்ளது.

டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டத்திற்கு சமுக மளிக்காத களனி பிரதேச சமுர்த்தி உத்தி யோகத்தர் ஒருவரை மரத்தில் கட்டி வைத்த சம்பவம் தொடர்பில் பிரதிய மைச்சருக்கு எதி ராக ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளது.

இதனையடுத்து அவர் பிரதியமைச்சர் பத வியில் இருந்தும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி யின் உறுப்பினர் பதவியில் இருந்தும் தற்காலிமாக நீக்கப்பட்டார்.

இதனை தொடர்ந்து ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியால் ஒழுக்காற்று குழுவொன்று நிய மிக்கப்பட்டு விசாரணைகள் இடம்பெற்று வந் தன.

இந்த நிலையில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அமைச்சர் மைத் திரிபால சிறிசேன, மேர்வின் சில்வா சகல குற்றச்சாட்டுகளில் இருந்தும் விடுவிக்கப்பட் டுள்ளதாக அறிவித்தார்.

சமுர்த்தி உத்தியோகத்தரை மரத்தில் கட்டிய சம்பவம் ஒரு நாடகம் என்று குறித்து சமுர்த்தி உத்தியோகத்தர் ஒப்புக்கொண்ட தாகவும் அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார். (ஸ்ரீ-2)

# மணல் விநியோகத்தில் ஈடுபடும் உழவியந்திர உரிமையாளர்கள் நேற்று வேலை நிறுத்தம்

(பொற்பதி)

வடமராட்சி கிழக்குப்பகுதியில் மணல் விநியோகம் செய்யும் உழவு இயந்திர உரி மையாளர்கள் நேற்று வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர். இதனால் யாழ் .குடாநாட்டிற் கான மணல் விநியோக நடவடிக்கை முற்றாக பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவ தாவது,

மணல் காட்டுப்பகுதியில் மணல் ஏற்று வதில் ஈடுபட்டிருந்த உழவு இயந்திர உரிமை யாளர்களுக்கு 2 மாதத்திற்கான கொடுப்ப னவு எதுவும் இதுவரை வழங்கப்படாத கார ணத்தினாலேயே மேற்படி ஊழியர்கள் இவ் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. மேலும் கடந்த வாரம் பெய்த அடை மழை காரணமாக சில நாட்கள் மணல் விநியோக நடவடிக்கை பாதிப்ப டைந்திருந்தது.

அத்துடன் இவ் வேலை நிறுத்தத்தினால் மேலும் இம் மணல் விநியோக நடவடிக்கை பாதிப்படைந்துள்ளது. இதனால் மணல் ஏற்று வதையே தொழிலாகக் கொண்டிருக்கும் 600க்கும் மேற்பட்ட கூலித்தொழிலாளர்கள் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளனர்.

எனவே சம்பந்தப்பட்டவர்கள் இந்த விட யத்தைக் கருத்தில் கொண்டு நடவடிக்கை எடுக்க வேண்டும் என உழவு இயந்திர உரி மையாளர்களும் கூலித்தொழிலாளர்களும் கோரிக்கை விடுக்கின்றனர். (ஸ்ரீ-7-64)

# இலங்கையர்களை கடத்தி படுகொலை செய்த மலேசிய பொலிஸ் உத்தியோகத்தர் கைது

இலங்கையர்களை கடத்தி படுகொலை செய்த மலேசிய பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரை அந்நாட்டு பொலிஸார் கைது செய்துள்ளனர். மூன்று இலங்கையர்களை கடத் தியதில் அதில் ஒருவரை படுகொலை செய் துள்ளதாகக் குறித்த பொலிஸ் உத்தியோகத்தர் மீது குற்றம் சுமத்தப்பட் டுள்ளது.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய மேலும் இருவரையும் பொலிஸார் சந்தேகத்தின் பேரில் கைது செய்துள்ளனர்.

கொல்லப்பட்ட இலங்கையரின் சடலம் கைவிலங்கிடப்பட்டு நிர்வாணமான நிலையில் சந்தேக நபரின் வீட்டுக்கு எதிரில் நின்ற வாகனமொன்றிலிருந்து மீட்கப்பட்டுள்ளது.

கடத்தப்பட்ட மற்றுமொரு இலங்கையர் கால் உடைந்த நிலையில் வாகனத்தில் இருந்ததாகவும் மேலும் ஒருவரை கடத்தல் காரர்கள் வீட்டில் மறைத்து வைத்திருந் ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மலேசிய பொலிஸார் நடத்திய திடீர்தேடு தலின் போது இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கப்பப் பணம் தொடர்பில் இணக்கப்பாடு எட்டும் முயற்சிகளின் போது குறித்த இலங்கையர் சித்திரவதை செய்யப்பட்டு படுகொலை செய்யப்பட்டுள் ளதாக மலேசியாவின் பிரதிப் பொலிஸ் அத்தியட்சகர் ரோஸ்லி ஹசன் தெரி வித்துள்ளார்.

கைது செய்யப்பட்ட பொலிஸ் உத்தியோ கத்தரே இந்தக்கடத்தல் மற்றும் படுகொலைச சம்பவத்தின் பிரதான சூத்திரதாரி என சந்தேகம் வெளியிடப் பட்டுள்ளது.

கடத்தப்பட்டவர்களிடமிருந்து கப்பம் பெற்றுக்கொண்டதன் பின்னர் சட லத்தை வீசி எறிவதற்கு சந்தேகநபர்கள் முயற்சித்திருக்க லாம் என பொலி ஸார் குறிப்பிட்டுள்ளனர்.

சம்பவத்தில் பாதிக்கப்பட்ட இலங்கையர்க ளின் ஆள் அடையாளங்கள் இதுவரையில் வெளியிடப்படவில்லை


எனினும் இவர்கள் அனைவரும் மூன்று நாட்களுக்கு முன்னர் மலேசிய விமான நிலை யமொன்றின் ஊடாக நாட்டுக்குள் பிரவேசித் துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தொழில் வாய்ப்பு அல்லது சுற்றுலா நோக்கத்திற்காக இவர்கள் மலேசியா விற்கு சென்றிருக்கலாம் என குறிப்பிடபடுகிறது.

கடத்தப்பட்ட ஏனைய இரண்டு இலங்கையர்களும் தற்போது வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (2-4)







யாழ்ப்பாணம் பொது நூலகத்தில் சிறுவர் பகுதியை நவீனமயப்படுத்துவது தொடர்பாக சிங்கப்பூர் சர்வதேச நிறுவக குழுவினருடன் மேற்கொண்ட கலந்துரையாடல் நேற்று முன்தினம் வடபிராந்திய ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி தலைமையில் யாழ். பொது நூலகத்தில் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. இக் கலந்துரையாடலில் ஆளுநர்,யாழ். மாநகர சபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா மற்றும் யாழ். மாநகரசபை ஆணையாளர் மு.செ.சரவணபவ ஆகியோர் மேடையில் அமர்ந்திருப்பதையும், இதில் கலந்துகொண்ட நூலகப்பணிப்பாளர்களையும் படங்களில் காணலாம்.

(படங்கள் :-என் குமார்)

# சட்டவிரோதக் குடியேற்றத் தளம் தாய்லாந்தெனக் குற்றச்சாட்டு

கனடாவுக்குச் சட்ட விரோதமாகச் செல்லும் நோக்கில் இலங்கையர்கள் பலர் தாய்லாந்தில் காத்திருப்பதாகக் கனேடிய ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளதாக இலங்கை அரசாங்க தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

கனடாவில் சட்டவிரோதமாக நுழைவதற்கு குடியேற்றவாசிகள் தாய்லாந்தை ஒரு தளமாகப் பயன்படுத்தி வருவதாகக் கனடாவின் தீ குளொப் அண்ட் மெயில்ஸ் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளதாக குறிப்பிடப்படுகிறது.

இரண்டு வாரகாலச் சுற்றுலா விசாவில் தாய்லாந்து செல்லும் இவர் கள் அறையொன்றுக்கு மாதாந்தம் 100 டொலர்களுக்கும் அதிகமான வாடகை கொடுத்து ஒரு சில மாதங்களுக்கு அங்கு தங்கியிருப்பதாகவும் அச்செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுற்றுலாப் பயணிகள் என்ற போர்வையில் தாய்லாந்தில் தங்கியிருக்கும் இவர்கள் அங்குள்ள முக்கிய இடங்களைப் பார்வையிடுவதில் குறைந்தளவே ஆர்வம் காட்டுவதாகவும் ஆனால் சட்டவிரோதக் குடியேற்றத் திற்கெனப் பெருந்தொகைப் பணத்தைச் செலவிடுவதாகவும் இதில் குறிப்பிடப்படுகிறது.

ஏற்கனவே கனடாவுக்கு 492சட்ட விரோதக் குடியேற்றவாசிகளுடன் சென்றடைந்த சன் சீ கப்பலை ஏற்பாடு செய்தவர்கள் மற்றொரு கப்பலைத் தற்போது ஏற்பாடு செய்து வருவதாக பாங்கொக் தமிழ்ச் சமூகத்தைச் சேர்ந்த ஒருவர் கூறியுள்ளதாகவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ-4)

## அறிவுறுத்தல் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

இவ்வாண்டு நடைபெற்ற க.பொ.த உயர் தரப்பரீட்சைக்கான விடைத்தாள் திருத்தும் பணியில் ஈடுபடும் உதவி பரீட்சகர்களுக்கான அறிவுறுத்தல் கூட்டம் இன்று புதன் கிழமை காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரை கொழும்பு றோயல் கல்லூரியில் நடைபெறவுள்ளதாக பரீட்சை ஆணையாளர் அனுர எதிரிசிங்க அறிவித்துள்ளார். (ஸ்ரீ-4-136)


இலங்கை மின்சார சபை - யாழ்.பிரதேச அலுவலகம்

## மின்தடை பற்றிய அறிவித்தல்

சுன்னாகம் மத்திய மின் நிலையத்தில் திருத்தவேலைகள் செய்யும் பொருட்டு கீழ்க்குறிப்பிடப்படும் இடங்களில் இன்று 01.09.2010 புதன்கிழமை மு.ப 11.30 மணி தொடக்கம் பி.ப 2.30மணி வரை

மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும்.

கரந்தன், நீர்வேலி, சிறுப்பிட்டி, கோப்பாய், இருபாலை, கல்வியங் காடு, நல்லூர், அரியாலை, தென்மராட்சிப் பிரதேசம். புன்னாலைக்கட்டுவன், அச்செழு புத்தூர், ஆவரங்கால், அச்சுவேலி, இடைக்காடு, வடமராட்சிப் பிரதேசம் முழுவதும். உரும்பிராய்,கோண்டாவில் மருத்துவபீடப்பிரதேசம் திருநெல்வேலிப் பிரதேசம், பட்டணப்பகுதி நீங்கலாக யாழ் மாநகரசபைப் பகுதி.


மின் பொறியியலாளர்,
யாழ் பிரதேசம்,
இலங்கைமின்சாரசபை,
சுன்னாகம்.

“சூழல் மற்றும் அபிவிருத்தி வேலைகளுக்கு கைகொடுக்கும் இலங்கை மின்சாரசபை”

(சி/986)


# சமாதான நீதவான்கள் மனித உரிமைகள் அமைப்பு யாழ்.மாவட்டத்தில் உதயம்

யாழ்.மாவட்டத்துக்கான சமாதான நீதவான்கள் மனித உரிமைகள் அமைப்பு கடந்த 28 ஆம் திகதி அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.இந்த நிகழ்வு சமாதான நீதவான்கள் மனித உரிமைகள் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் பேராசிரியர் ஜெயந்த களுபோவில தலைமையில் யாழ்ப்பாணம் கடற்கரை வீதியிலுள்ள வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கான கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.இந்த வைபவத்தில் யாழ்.மாவட்டத்திலிருந்து சுமார் நாற்பதிற்கும் அதிகமான சமாதான நீதவான்கள் கலந்து கொண்டனர்.



அன்றைய தினம் யாழ்.மாவட்டத்துக்கான பணிப்பாளர் சபை சமாதான நீதவான்கள் மனித உரிமைகள் அமைப்பின் நிறை வேற்றுப் பணிப்பாளர் பேராசிரியர் ஜெயந்த களுபோவில முன்னிலையில் தெரிவு செய்யப்பட்டது.

பணிப்பாளர் சபையின் விபரம் வருமாறு,

அமைப்பின் யாழ்.மாவட்ட நிர்வாகப் பணிப்பாளர்-சிவசுப்பிரமணியம் ஜெயச்சந்திரன்

மாவட்டப் பணிப்பாளர்-சுப்ரமணியம் ரத்ன சிங்கம்

தேசிய சர்வதேசப் பணிப்பாளர்-தாத பிள்ளை தருமரெட்ணம்

ஊடகப் பணிப்பாளர்-மரியநாயகம் பிரான் சிஸக்.

அரசியல்,சமூக சேவைப் பணிப்பாளர்-இராமநாதன் சாந்தன்.

திட்டப் பணிப்பாளர்-ஜெகதீச சிங்கம் சத்தியேந்திரன்.

பெண்கள்,சிறுவர் விவகாரப் பணிப் பாளர்- மரியகொரட்டி அன்ரன்.

கல்வி,கலாசாரப் பணிப்பாளர்-தில்லையம்பலவாணன் விமலன்.

நிதிப்பணிப்பாளர்-கோபாலப்பிள்ளை சந்திரசேகரம் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். பின்னர் யாழ்.மாவட்டத்தின் பிரதேச செயல கங்களுடன் இணைந்து பணிபுரிய பதினைந்து இணைப்பாளர்களும் தெரிவு செய்யப்பட்டனர்.

நிகழ்வில் பேராசிரியர் ஜெயந்த களுபோவில உரையாற்றுகையில்,உலகில் பிறந்த மனிதன் தனக்குரிய சகலவிதமான உரிமையையும் சாதி, சமய, குல ,கோத்திர வேறுபாடின்றி தனக்குச் சொந்தமான நாட்டுக்குள் அனுபவிக்க உரிமையுண்டு.

தான் விரும்பிய இடத்தில் குடியேறவும் வியாபாரம் செய்யவும் உரிமையுண்டு. குறிப்பாக இலங்கையில் சிறுபான்மையினர், பெரும் பான்மையினர் என்றோ, பௌத்தர், கிறிஸ்த வர், இந்துக்கள், இஸ்லாமியர் என்ற வேறு பாடின்றி வாழ்வதற்கும் உரிமைகளை அனு பவிப்பதற்கும் அவனுக்கு உரிமையுண்டு.

எமது நாட்டின் பிரஜை ஒருவருக்கு உரிமைகள் மறுக்கப்படும் போதோ அல்லது தவறாக தண்டிக்கப்படும் போதோ அல்லது சமூகத்தில் அநீதிகள் இடம்பெறும் போதே இந்த அமைப்பில் பணி புரியும் நாம் துணிவுடன் குரல் கொடுத்து அவர்களுக்குரிய சரியான தீர்வை பெற்றுக்கொடுக்க வேண்டம் என்றார். (ந)

## ஜேர்மனியில் புலம் பெயர் தமிழர்கள் மூவருக்கு எதிராக சட்ட நடவடிக்கை

(கொழும்பு)

ஜேர்மனியில் வாழும் புலம் பெயர் த மூவருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர்கள் என்கிற சந்தேகத்திலேயே அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

வி.எஸ்.விஜேகணேந்திரா (வயது 35), எம்.சசிதரன் (வயது 33) மற்றும் ரி.கோணே ஸ்வரன் (வயது 39) ஆகியோரே இம்மூவரும் ஆவர்.

இவர்கள் கடந்த மார்ச் மாதம் கைது செய்யப்பட்டு, தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் ஜேர்மனிய அலுவலகத்தை Tamil coordination Committee (TCC) என்ற பெயரில் மிக நீண்ட காலமாக நடத்தி ஜேர்மனியில் வாழும் தமிழர்களிடம் இருந்து நிதி மற்றும் பொருட்கள் ஆகியவற்றை திரட்டி புலிகளின் தலைமைப் பீடத்துக்கு அனுப்பிவைத்திருக்கின்றனர்என்று இவர்களுக்கு எதிரான குற்றப்பத்திரத்தில் விளக்கமாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது . (ஸ்ரீ-2)

## மீன்பிடி பயிற்சி நெறி அங்குரார்ப்பண நிகழ்வு

யாழ். கடற்றொழில் மற்றும் கடலோ ட்டு எந்திரவியல் கல்லூரியினால் மீன் பிடி பயிற்சி நெறி அங்குரார்ப்பண நிகழ்வு இன்று புதன்கிழமை காலை 8.30 மணிக்கு யாழ். திருமறைக்கலாமன்ற கலைத்தூது மண்டபத்தில் நடைபெற வுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ.சந்திரசிறி கலந்து சிறப்பிப்பதுடன் ஓஷியன் பல்கலைக்கழக தலைவர் பேராசிரியர் ரஞ்சித் செனரட்ன உரையாற்றவுள்ளார். (ஸ்ரீ-4)

# மீள் குடியேற்றம் தொடர்பான கலந்துரையாடல்

(பளை)

இதுவரை மீள்குடியேற்றம் செய்யப்படாமல் உள்ள பச்சிலைப்பள்ளி மேற்குப் பிரதேச கிராமங்களான கிளாலி, முகமாலை, இத்தாவில், வேம்போடுகேணி, இந்திராபுரம் ,அரசர்கேணி, கச்சார் வெளி, அல்லிப்பளை மற்றும் ஏனைய பிரதேசங்களான இயக்கச்சி, முகாவில்,கோவில்வயல், சங்கத்தாவயல் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த ஆலயங்களின் நிர்வாகிகள்,கிராம அபிவிருத்தி சங்கங்கள்,சனசமூக நிலையங்கள்,மாதர் சங்கங்கள்,விளையாட்டுக் கழகங்கள் போன்றவற்றின் நிர்வாகிகள் மற்றும் முக்கியஸ்தர்கள் ஆகியோர்களுக்கிடையிலான கலந்துரையாடல் எதிர்வரும் 4 ஆம் திகதி சனிக்கிழமை காலை 10 மணிக்குபளை மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இதில் குறிப்பிட்ட பிரதேசங்களில் கண்ணிவெடிகள் அகற்றப்பட்டு மீள்குடியமர்வை துரிதப்படுத்துவது தொடர்பாக கலந்துரையாடப்படவுள்ளதால் குறிப்பிட்ட அனைவரையும் தவறாது சமுகமளிக்குமாறு பச்சிலைப்பள்ளி மேற்குப் பிரதேச மக்கள் ஒன்றியச் செயலாளர் அறிவித்துள்ளார்.(ஸ்ரீ-4)

# பருத்தித்துறை நகரசபைக்குட்பட்ட வீதிகள் புனரமைக்கப்படவுள்ளது

## வலம்புரிச் செய்திக்கு நடவடிக்கை

பருத்தித்துறை நகர சபைக்குட்பட்ட தும்பளை ,நெல்லண்டைக் கிழக்குப்பகுதிக ளில் உடையார் வீதி (நெல்லண்டை வீதி), தும்பளை வீதி,யக்கோவளை வீதி,ஒரு தானை வீதி(வக்கமோடை வீதி, எல்லை வீதி ஆகிய வீதிகள் புனரமைப்புச் செய்யப்படவுள்ளதாக பருத்தித்துறை நகர சபைச் செயலாளர் அ.அ. நடராசா தெரிவித்துள்ளார்.

இவ்வீதி அபிவிருத்தித் திணைக்களத்தின் மூலம் இவ்வருடம் புனரமைப்பு செய்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவருவதாக அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை இவ்வீதிகளை புனரமைப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கோரி கடந்த 26ஆம் திகதி வலம்புரி செய்தி வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ)

# பொலிஸாரின் நடமாடும் சேவை

(பூநகரி)

ஜெயபுரம் வடக்குப் பகுதியில் பொலிஸ் பகுதியினரின் நடமாடும் சேவை கடந்த சனிக்கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் ஜெயபுரம் வடக்கு பொது நோக்கு மண்டபத்தில் பொலிஸ் அத்தியட்சகரின் தலைமையில் நடைபெற்றது.

இந் நடமாடும் சேவையில் ஜெயபுரம் வடக்கு தெற்கு மற்றும் பல்வராயன் கட்டு ஆகிய கிராம சேவைகள் பிரிவைச் சேர்ந்த மக்கள் கலந்துகொண்டு தமது முறைப்பாடுகளையும் பொலிஸாரிற்கு தெரிவித்தனர்.

இதில்காணாமல் போனவர்கள் தொடர்பாகவும் இடம்பெயர்வின் போது தொலைந்த பொருட்கள் தொடர்பாகவும் மற்றும் தேசிய அடையாள அட்டை எடுப்பதற்கான விடயங்கள் தொடர்பான முறைப்பாடுகள் யாவும் பொலிஸாரினால் ஏற்றுக்கொள்ளப்பட்டு இதற்கு துரித நடவடிக்கை எடுப்பதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

(ஸ்ரீ-7)

# சங்கமித்தை வந்திறங்கியதாக கருதப்படும் மாதகல் சம்பில்துறை

## பெருமளவு தென்பகுதி மக்கள் விஜயம்

மாதகல் பிரதேசத்தில் அமைந்துள்ள சம்பில் துறைக்கு பெருந்தொகையான தென்பகுதி மக்கள் வருகை தருகின்றனர்.

மாதகலில் அமைந்துள்ள வரலாற்று பிரசித்தி பெற்றதும் சிங்கள மக்களால் சங்கமித்தை வந்திறங்கிய இடம் என புகழப்படுவதுமான சம்பில்துறைக்கே பெருமளவு தென்பகுதி மக்கள் வருகை தருகின்றனர்.

மாதகல் கடற்கரை ஓரமாக அமைந்துள்ள இப்பிரதேசம் முன்னைய கால படகுத்துறை என்பதோடு யுத்த காலத்தில் இப்பிரதேசம் உயர்பாதுகாப்பு வலயமாக பிரகடனப்படுத்தப்பட்டு தற்போது மக்கள் செல்வதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளது.

இங்கு அமைக்கப்பட்டுள்ள அழகிய தூபி புத்தசிலை என்பனவற்றையும் சிவன் ஆலயத்தினையும் தென்பகுதி மக்கள் மற்றும் அயல் கிராம மக்கள் ஆகியோர் பெருமளவில் வருகை தந்து பார்வையிட்டு வணங்கி செல்கின்றனர்.

சம்பில் துறைக்கு சென்ற வருடம் மஹிந்த ராஜபக்ஷ, பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க ஆகியோரின் மனைவிமார் வருகை தந்தனர். அத்தோடு இப்பிரதேசத்தை அழகுறவிருத்தி செய்தனர்.

மாதகல் பிரதேசத்திற்கு வருகை தரும் தென்பகுதி மக்கள் இங்குள்ள கடற்கரை, கோயில்கள், விவசாய நிலங்கள் என்பவற்றையும் பார்வையிட்டு செல்கின்றமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-2)

# பரந்தன், உமையாள்புரத்தில் கிணற்றிலிருந்து பெருந்தொகை ஆயுதங்கள் மீட்டெடுக்கப்பட்டுள்ளன

பரந்தன், உமையாள்புரம் கிராமத்தில் வைரவர் கோவிலுக்கு அருகில் உள்ள கிணறொன்றிலிருந்து பெருந்தோகையான ஆயுதங்கள் மற்றும் வெடிமருந்துகளை பொலிஸ் அதிரடிப்படையினர் மீட்டுள்ளனர்.

இவ்வாறு மீட்கப்பட்டுள்ள ஆயுதங்களின் பெறுமதி கிட்டத்தட்ட ஐம்பது இலட்சம் ரூபாய் வரை இருக்கும் என பொலிஸ் அதிரடிப்படையின் சிரேஷ்ட அதிகாரிளெயாருவர் தெரிவித்துள்ளார்.

எம்.16 ரக துப்பாக்கிகள், 56 ரக ஆயுதங்கள்- 8, ஆர்.பி.ஜி.ஆயுதம் ஒன்று, ஆர். பி.ஜி. ரவைகள் -11 அதற்கான சார்ஜர்கள் 17, எம்.ஜி.எம்.ஜி.எம். ரவைகள்- 3956, விமானங்களை தாக்கியழிக்கக்கூடிய 12.7 ரக ஆயுதத்திற்கான ரவைகள்-3701,56 ரக துப்பாக்கிக்கான ரவைகள்- 9715, ஜி.பி.எம்.ஜி.ரவைகள் -2928, காலால் செயற்படுத்தக் கூடிய ஆயுதத்திற்கான ரவைகள்- 43,69 மில்லிமீற்றர் ரவைகள்-75,பல்வேறு வகையான மோட்டார் குண்டுகள் ஒரு தொகை, வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட கைக்குண்டுகள்-156,கிளேமோர் குண்டுகள்-19 மற்றும் இதுவரையிலும் இனங்காணப்படாத பல்வேறு தோட்டாக்கள் பலவும் மீட்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.(ஸ்ரீ)

# 01.09.2010

## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள் நிகழ்வுகள்



- 1715- பிரான்சின் அரசன் பதினான்காம் லூயி 72 ஆண்டுகள் ஆட்சியின் பின்னர் இறந்தான். இவனே நீண்ட காலம் ஆட்சி புரிந்த ஐரோப்பிய அரசன்.
- 1752 - விடுதலை மணி பிலடெல்பியாவை வந்தடைந்தது.
- 1862- அமெரிக்க உள்நாட்டுப் போர்: கூட்டமைப்புப் படைகள் பின் வாங்கிச் சென்ற அமெரிக்க படைகளை வேர்ஜீனியாவின் சாண்டிலி என்ற இடத்தில் தாக்கினர்.
- 1894 - அமெரிக்காவில் மினசோட்டாவில் இடம்பெற்ற காட்டுத்தீயில் 400 பேர் கொல்லப்பட்டனர்.
- 1897 - வட அமெரிக்காவின் முதலாவது சுரங்கத் தொடருந்து சேவை பொஸ்டனில் ஆரம்பிக்கப்பட்டது.
- 1914 - ரஷ்யாவின் சென் பீட்டர்ஸ்பேர்க் நகரம் பெட்ரோகிராட் எனப் பெயர் மாற்றப்பட்டது.
- 1914 - கடைசி பயணிக்கும் புறா சின்சினாட்டி மிருகக்காட்சிச்சாலையில் இறந்தது.
- 1923-டோக்கியோ மற்றும் யொகோஹாமாவில் இடம்பெற்ற நில நடுக்கத்தில் சுமார் 105,000 பேர் கொல்லப்பட்டனர்.
- 1928-அகமெட் சோகு அல்பேனிய நாட்டை முடியாட்சியாக அறிவித்துத் தன்னை அதன் மன்னராக அறிவித்தார்.
- 1939-இரண்டாம் உலகப் போர்: நாசி ஜேர்மனி போலந்தைத் தாக்கி போரை ஆரம்பித்து வைத்தது.
- 1951 - ஐக்கிய அமெரிக்கா, அவுஸ்திரேலியா மற்றும் நியூசிலாந்து ஆகியன தமக்கிடையே பாதுகாப்பு ஒப்பந்தத்தை (ஆன்சஸ் ஒப்பந்தம்) செய்து கொண்டன.
- 1961 - எரித்திரிய விடுதலைப் போர் ஆரம்பமானது. ஹமீட் இட்ரிஸ் அவாட்டெ என்பவர் எதியோப்பியக் காவல்துறை மீது துப்பாக்கிச் சூடு நடத்தினார்.
- 1969 - அல் கடாஃபி புரட்சியின் மூலம் லிபியாவின் ஆட்சியைக் கைப்பற்றினார்.
- 1970 - ஜோர்தான் மன்னர் உசேன் கொலை முயற்சி ஒன்றில் இருந்து தப்பினார்.
- 1972 - ஐஸ்லாந்தில் இடம்பெற்ற உலகக் சதுரங்கப் போட்டியில் அமெரிக்கரான பொபிஃபிஷர் ரஷ்யரான பொரிஸ் ஸ்பாஸ் கியை வென்று உலகக் கிண்ணத்தை வென்றார்.
- 1979 - நாசாவின் பயணியர் 11ஆளில்லா விண்கலம் சனி கோளை 21,000 கி.மீ தூரத்தில் அடைந்தது. இதுவே முதன் முதலில் சனியை அடைந்த விண்கலம் ஆகும்.
- 1981 - மத்திய ஆபிரிக்கக் குடியரசில் இடம்பெற்ற இராணுவப் புரட்சியில் அதிபர் டேவிட் டாக்கே பதவியில் இருந்து அகற்றப்பட்டார்.
- 1983 - பனிப்போர்: சோவியத் ஒன்றியத்தினுள் அத்துமீறி நுழைந்த கொரிய பயணிகள் விமானம் ஒன்று சுட்டு வீழ்த்தப்பட்டதில் அதில் பயணஞ் செய்த 269 பேரும் கொல்லப்பட்டனர். இறந்தவர்களில் அமெரிக்க காங்கிரஸ் உறுப்பினர் லோரன்ஸ் மாக்டொனால்ட்டும் ஒருவர்.
- 1984 - யாழ்ப்பாணம் திக்கத்தில் இடம்பெற்ற கண்ணிவெடித் தாக்குதலில் 20 இலங்கை இராணுவத்தினர் கொல்லப்பட்டனர்.
- 1985 - அமெரிக்க, பிரெஞ்சு கூட்டு முயற்சியில் டைட்டானிக் கப்பலின் எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்டன.
- 1991 - உஸ்பெகிஸ்தான், சோவியத் ஒன்றியத்தில் இருந்து வெளியேறி விடுதலையை அறிவித்தது.
- 2004 - ரஷ்யாவில் பெஸ்லான் நகரப் பாடசாலை ஒன்றில் தீவிலவாதிகள் நூற்றுக்கணக்கான பள்ளி மாணவர்களைப் பணயக் கைதிகளாக்கிய நிகழ்வு இடம்பெற்றது.
- 2007 - மன்னாரில் பாசித்தென்றலில் இலங்கை இராணுவத்தினர் நடத்திய கிளைமோர் தாக்குதலில் 8 பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்டனர்.

### பிறப்புகள்

- 1895 - செம்பை வைத்தியநாத பாகவதர், கர்நாடக இசைக் கலைஞர் (இ. 1974).
- 1970 - பத்மா லட்சுமி, அமெரிக்க நடிகை

### இறப்புகள்

- 1961 - ஈரோ சாரினென், கட்டிடக்கலைஞர் (பி. 1910)

### சிறப்பு நாள்

- லிபியா -புரட்சி நாள் (1969)
- சிங்கப்பூர் -ஆசிரிய நாள்
- சிலவாக்கியா -அரசமைப்பு நாள்
- உஸ்பெகிஸ்தான்-சுதந்திரதினம் (1991)



**1980ஆம் ஆண்டு உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத் தாபகர் தனிநாயகம் அடிகளார் இறந்தார் (பி.1913)**

# ஈழத்தவர் வரலாறு


22

## 4. சிங்கை நகர் அரசு

## (கி.மு 5 ஆம் நூற்றாண்டிலிருந்து கி.பி. 1621 ஆம் ஆண்டு வரை)

கலாநிதி க.குணராசா
செங்கை ஆழியான்

உத்தரதேசத்தைத் (வடவிலங்கை) தக்கண தேசத்தின் (தென்னிலங்கை) ஆதிக்கத்தினுள் வைத்திருக்க விருப்பு எழுந்தது. அதனால், கி.மு.முதலாம் ஆம் நூற்றாண்டில் அல்லது அதற்கு முன்னர், தென்னிலங்



மட்பாண்டத்தில் எழுதப்பட்ட பிராமி எழுத்துக்கள்

கையிலிருந்து, ஈழ மண்டலத்தின் மீது பெரும் படையெடுப்பொன்று நிகழ்ந்திருக்க வேண்டும். அந்தக் கால கட்டத்தில், கந்தரோடை எனப்படும் கதிரமலையே ஈழ மண்டல ஆட்சியாளனின் தலை நகரமாக இருந்திருக்க வேண்டும்.

கந்தரோடையில் கிடைத்த மட்பாண்ட ஓடொன்றில் பொறிக்கப்பட்டுக்கிடைத்த பிராமி எழுத்துச் சாசனத்தின் வாசகம் பின்வருமாறு அமைந்துள்ளது. "தஹ பத" - தத்தவின் பாத்திரம், இதன் காலம் கி.மு.நூற்றாண்டு என்று எழுத்தின் அடிப்படையில் கூறலாம். கந்தரோடையில் நிகழ்ந்த அகழ்வாராச்சிகளின் மூலம் கிடைத்த பௌத்த சின்னங்கள், இப்பகுதியில் பௌத்த மக்கள் நிலை கொண்டிருப்பதைச் சுட்டுகின்றன.

எனவே, தென்னிலங்கை ஆட்சியாளர் கதிரமலையைக் கைப்பற்றியதும் அப்பிரதேசத்தில் வாழ்ந்தோரில் ஒருபகுதியினர் தொண்டமானாற்றைக் கடந்து வல்லிபுரப்பகுதியில் ஏற்கனவே குடியிருந்தோருடன் இவர்களும் சேர்ந்து குடியேறிக் கொண்டனர்.

வல்லிபுரப்பகுதியிலும் அவர்களால், அமைதியாகத் தொடர்ந்து வாழ முடியவில்லை. கி.பி.1ம் நூற்றாண்டில் அநுராதபுரத்திலிருந்து சிங்கள இராச்சியத்தை ஆண்ட வசப என்ற மன்னன் வல்லிபுரம் பிரதேசத்தை வெற்றி கொண்டு தன் அமைச்சன் ஒருவனை அப்பகுதியை நிர்வகிக்க நியமித்தான்.

வல்லிபுரத்திலிருந்து கி.பி. முதலாம் அல்லது இரண்டாம் நூற்றாண்டைச் சேர்ந்த ஒரு பொற்சாசனம் கிடைத்துள்ளது. இச் சாசனம் பல வகையாலும் முக்கியத்துவம் வாய்ந்தது. கி.பி. முதலாம் இரண்டாம் நூற்றாண்டிலே யாழ்ப்பாணப்பகுதி நாகதீவு எனப் பெயர்



பிராமிய கல்வெட்டு

பெற்றிருந்ததையும் அக்காலத்தில் அநுராத புரத்திலிருந்து சிங்கள இராச்சியத்தை ஆண்ட வசப மன்னனுடைய (கி.பி. 67-111) ஆதிக்கத்திற்கு உட்பட்டு மன்னனின் அமைச்சன் இசிகிரயன் என்பவனால் அது நிர்வகிக்கப்பட்டது என்பதையும் வல்லிபுரப் பிரதேசத்தில் பௌத்தம் பரவியிருந்தது என்பதையும் இச்சாசனம் அறிவிக்கின்றது.

கந்தரோடையிலும்வல்லிப்புரப்பகுதியிலும் தொல்லியலாய்வின் பேறாகக்கிடைத்த சாசனங்கள் இப்பகுதிகளில் பௌத்தம் நிலை பெற்றிருந்தது என்பதை நிறுவுகின்றன. தமிழ் நாட்டின் பௌத்தம்பரவியகால வேளையில் வடவிலங்கைத் தமிழர் பலரும் பௌத்தத்தை தழுவியிருப்பர். இத்திராவிடத் தமிழ்ப் பௌத்தர்கள் கால கதியில் தமது முந்தைய சமயத்திற்கு மாறியிருப்பர் அல்லது இவ்விடங்களை விட்டு இடம்பெயர்ந்திருப்பர் என ஊகிக்கமுடியும்.

எனவே கி.மு. 3 ஆம் நூற்றாண்டிலிலும் கி.பி. 1 ஆம் நூற்றாண்டிலும் வடவிலங்கையில் பெரும்பாலும் சிங்கள மன்னர்களது ஆதிக்கம் நிலவியது. (தொடரும்)

# தொல்காப்பியப் பதிப்பு வரலாற்றில் ஈழத்து அறிஞர்கள்

01

செம்மொழி மாநாட்டு ஆய்வுக்கட்டுரை

ஸ்ரீ.பிரசாந்தன்
விரிவுரையாளர்,
ஸ்ரீஜெயவர்த்தனபுரப் பல்கலைக்கழகம்.

1. முன்னுரை

தமிழுக்குச் செம்மொழித் தகுதியைப் பெற்றுக்கொடுத்த முதன்மைக் காரணங்களுள் தொல்காப்பியமும் ஒன்றாகும். இத் தொல்காப்பியத்தை, சுவடிகளிலிருந்து அச்சுவாகனமேற்றிப் பாதுகாத்தமையானது தமிழ் மொழி வரலாற்றில் குறிப்பிடத்தக்க முக்கியத்துவம் உடையதாகும். தொல்காப்பியப் பதிப்பு வரலாறானது 1847 ஆம் ஆண்டு வெளிவந்த மழவை மகாலிங்கையரின் எழுத்து நச்சினார்க்கினியப் பதிப்போடு தொடங்குகின்றது. அது முதலாக, மூலப்பதிப்புகளாக, உரைப் பதிப்புகளாக, உரைவளப் பதிப்புகளாக, ஒப்பியல் பதிப்புகளாக, மொழிபெயர்ப்புப் பதிப்புகளாகத் தொல்காப்பிய நூலானது பல்வகைமைப் பதிப்புகளைக் கண்டுள்ளது.

தொல்காப்பியத்துக்கு உரையெழுதியோர் பலராயினும், இளம்பூரணர், பேராசிரியர், சேனாவரையர், நச்சினார்க்கினியர், தெய்வச்சிலையார், கல்லாடனார், பெயர் விவரம் அறியப் பெறாத பழைய உரைகாரர் ஆகிய எழுவரையுமே மரபுரையாசிரியர்கள் எனக் கொள்வது மரபு.

தொல்காப்பியத்தை விளங் கிக் கொள்ள இவ்வுரையாசிரியர்களின் உரை முயற்சிகள் சிறந்த வாயில்களாக விளங்கு கின்றன. எனவே, இம் மரபுரையாசிரியர் களின் உரைகளிற்பல நூல்களாக அச்சிடப்பட்டமையானது தொல்காப்பியப் பதிப்பு வரலாற்றில் மிகுந்த முக்கியத்துவம் உடையது. இப் பெறுமதி மிக்க பதிப்புப் பணியில் ஈழத்து அறிஞர்கள் சிலரும் விருப்போடு ஈடுபட்டுள்ளனர்.

இந்த ஈழத்து அறிஞர்களின் தொல்காப்பியவியற் பதிப்புகளையும் அவற்றின் சிறப்புகளையும் இக் கட்டுரை ஆராய்கின்றது.

**2. தொல்காப்பியமும் ஆறுமுகநாவலரும்**

ஈழத்தில் சிறப்புற்று விளங்கிய மரபுத் தமிழ் குருகுலக் கல்விப் போதனையில் தொல்காப்பியம் மிகச் சிறந்த இடத்தைப் பெற்றிருந்துள்ளது. இத்தமிழ் மரபின் ஓர் உன்னத ஆளுமையாக உருவாகிய ஆறுமுகநாவலரும் இவ்வழியில் தொல்காப்பியத்தில் நிரம்பிய புலமை கொண்டவராக விளங்கி, தமது மாணாக்கர்களுக்குத் தொல்காப்பியத்தை உரைகளுடன் போதித்துள்ளார். இவ்வாறு, பாடஞ்சொல்லிவந்த அனுபவத்தின் துணையோடு அவர் தொல்காப்பியச் சுவடிகளைப் பரிசோதிப்பதிலும் ஈடுபட்டுள்ளார். நாவலரால் பரிசோதிக்கப்பெற்ற சொல்லதிகாரம் சேனாவரையம் நூல், சி.வை.தாமோதரம்பிள்ளையால் முதலில் வெளியிடப்பெற்றது. சேனாவரையத்தின் மிக மூத்த பதிப்பாக இதுவே விளங்கித் திகழ்கின்றது. இப்பதிப்பானது பின்பு 'ஆறுமுகநாவலர் பதிப்பு' எனும் பெயரில் 1934 இல் சிதம்பரம் சைவப்பிரகாச வித்தியாசாலையின் பரிபாலகராக விளங்கிய பொ.பவானியம்மையால் பதிப்பிக்கப்பெற்றுள்ளது.

சேனாவரையப் பதிப்புக்காகச் சுவடிகளைப் பரிசோதித்த நாவலர் மிகத் தெளிவான முறையில் பாடங்களை நிருணயம் செய்து வழங்கியுள்ளாரென அறிய முடிகிறது. சூத்திரங்களுக்குப் பொருள் கொள்ளுதலின் போது ஏற்பட்ட ஐயங்கள், மயக்கங்களை நாவலர் தமது சிறந்த தொல்காப்பியப் புலமையினூடாகத் தீர்த்து வழங்கியமை தாமோதரம்பிள்ளையின் பதிப்புச் செம்மைக்கு மிகவும் பயன் செய்துள்ளதெனலாம். நாவலரின் வாழ்க்கை நிறைவடைந்த பின்னர், தாம்மேற்கொண்ட தொல்காப்பியப் பதிப்பு முயற்சிகளின் போது, தமக்கு ஏற்பட்ட ஐயங்களைத் தீர்க்க நாவலர் போன்ற ஒரு பேரறிஞர் இல்லாதிருந்த நிலையை தாமோதரம்பிள்ளை குறிப்பிட்டுள்ளார்.

"…. அப்படிச் சிறந்துளோர் தற்காலத்தில ரென்பது யான் கூறவேண்டியதில்லை. 'விடியலவெங்கதிர் காயும வெயமல கலறை'என்னும் ஓர் வாக்கியத்தையும் ஓர் பரிபாடற் செய்யுளையும் சரியாய்ப் பிரித்துணர்தற்கு எத்தனை புலவரிடம் கொண்டு திரிந்தேன்? எனக்கு வந்த மறுமொழிகளை வெளியிட்டுச் சொன்னால் மிகவும் வெட்கக்கேடென்று அறிக. அவை ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் பெருமான் மகத்துவத்தை நன்கு விளக்கின"

இதன் மூலம் சுவடிகளைப் பரிசோதனஞ் செய்யும் பொழுது ஏற்படவல்ல ஐயங்கள் மற்றும் விளங்காப் பகுதிகளை மூலத்தின் பொருள் உள்ளவாறு சிறக்குமாறு நாவலர் தீர்த்து வைத்தமை புலனாகின்றது.

தொல்காப்பியப் பதிப்பு வரலாற்றில் நாவலர் பெறும் இடத்திற்கு அவரின் 'தொல்காப்பியச் சூத்திர விருத்தி'ப் பதிப்பும் முக்கியமானதொரு காரணமாகும்.

தொல்காப்பியத்தின் பொதுப்பாயிரம் சிறப்புப்பாயிரம் நூல் மரபு முதல் நூற்பா ஆகியவற்றுக்குச் சிவஞான முனிவர் விரிவாக எழுதிய விருத்தியுரையாகிய 'தொல்காப்பியச் சூத்திர விருத்தி' முதன் நாவலரால் 1868 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் பதிப்பிக்கப் பெற்று வெளியிடப்பெற்றது.

**3.தொல்காப்பியப் பதிப்பு வரலாற்றில் சி.வை. தாமோதரம்பிள்ளை**

தொல்காப்பியப் பதிப்பு வரலாற்றில் மிக முக்கியமான பதிப்பாசிரியர் சி.வை. தாமோதரம்பிள்ளை எனலாம். இவரின் தொல்காப்பியப் பதிப்பு முயற்சி சொல் அதிகாரம் - சேனாவரையம் பதிப்போடு தொடங்குகின்றது.

இப்பதிப்பு உள்ளடங்களாக இவராலே பின்வரும் நான்கு தொல்காப்பிய நூல்கள் பதிப்பிக்கப்பெற்றன.

01. தொல்காப்பியம்- சொல்லதிகாரம் - சேனாவரையம் (1868) சென்னை: கலாரத்நாகரவச்சுக்கூடம்

02-தொல்காப்பியம்-பொருளதிகாரம்-நச்சினார்க்கினியம்(1885) சென்னை: வித்தியாநுபாலன யந்திரசாலை.

03.தொல்காப்பியம்-எழுத்ததிகாரம்-நச்சினார்க்கினியம்(1891).

04. தொல்காப்பியம்- சொல்லதிகாரம்-நச்சினார்க்கினியம்(1892) சென்னை: வித்தியாநுபாலன யந்திரசாலை. (தொடரும்)

# சட்டவிரோத ஆட்கடத்தலை கட்டுப்படுத்துவதற்கான புதிய நடைமுறைகள் வரவேற்கத்தக்கது

## அமெரிக்காவில் அறிவிப்பு

(கொழும்பு)

சட்டவிரோத ஆட்கடத்தல் நடவடிக்கைகளை கட்டப்படுத்தும் நோக்கில் இலங்கையினால் அறிமுகம் செய்யப்பட்ட புதிய நடைமுறைகள் வரவேற்கத்தக்கதென அமெரிக்கா அறிவித்துள்ளது.

சட்டவிரோத ஆட்கடத்தல்காரர்களை கண்டு பிடித்து தண்டிப்பதற்கு இலங்கையின் புதிய நடைமுறைகள் வழிகோலும் என இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் பெட்ரிக்கா புட்டினாஸ் தெரிவித்துள்ளார்.

சட்டவிரோத ஆட்கடத்தல் தொடர்பான விழிப்புணர்வு நடவடிக்கை ஒன்றை ஆரம்பித்து வைத்து உரையாற்றிய போது அவர் இதனைத் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையர்கள் சட்டவிரோதமான முறையில் வெளிநாடுகளுக்கு செல்வதனை தடுப்பதற்காக வெளிவிவகார அமைச்சும் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகமும் எடுத்துள்ளதாக தெரிவிக்கப்படும் நடவடிக்கைகள் பாராட்டுக்குரியவை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இது குறித்து மக்களை தெளிவுபடுத்தும் விபரணச் சித்திரமொன்றை அமெரிக்காவை மையமாகக் கொண்டு இயங்கி வரும் எம்.ரீ.வி. நிறுவனம் தயாரித்து வெளியிடத் தீர்மானித்துள்ளது.

இந்தவிழிப்புணர்வு நடவடிக்கைகளில் இலங்கை தேசிய கிரிக்கெட் அணியின் தலைவர் குமார் சங்ககாரவும் பங்கேற்றார். (ஸ்ரீ-2)

# கிழக்கு நிலைமைகள் குறித்து ஐ.நா. குழுவினர் நேரில் ஆராய்வு

(கொழும்பு)

கிழக்கின் நிலைமைகள் குறித்து ஐக்கிய நாடுகள் அமைப்பின் விசேட குழுவினர் நேரில் கண்காணிப்பு நடத்தியுள்ளனர்.

யுத்தம் நிறைவடைந்து ஓராண்டு பூர்த்தியாகியுள்ள நிலையில் கிழக்கின் பாதுகாப்பு நிலைமைகள் குறித்து ஐக்கிய நாடுகள் அதிகாரிகள் குழு கண்காணிப்பு நடத்தியுள்ளது.

கிழக்கு மாகாணத்தின் முக்கிய பிர தேசங்களுக்குச் சென்று இந்த கண்காணிப்புப் பணி நடத்தப்பட்டுள்ளது.

திருகோணமலை, மட்டக்களப்பு மற்றும் அம்பாறை ஆகிய மாவட்டங்களுக்கு ஐக்கிய நாடுகளின் அதிகாரிகள் விஜயம் செய்துள்ளனர்.

கிழக்கு மாகாணத்தில் பணிகளை நிறைவு செய்துள்ள ஐக்கிய நாடுகளின் நிறுவனங்கள் தொடர்பில் மேற்பார்வை செய்யப்பட்டுள்ளது.

உரிய முறையில் அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டனவா என்பது தொடர்பில் ஆராயப்பட்டுள்ளது. (ஸ்ரீ-2)

# முஸ்லீம் காங்கிரஸ் அரசுக்கு ஆதரவளிக்க எடுத்த தீர்மானம் ஓர் அரசியல் பெருந்துயரம்

## ஜனநாயக மக்கள் முன்னணி தெரிவிப்பு

(கொழும்பு)

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி அரசாங்கத்திற்கு ஆதரவளிக்க எடுத்த தீர்மானம் ஓர் அரசியல்பெருந்துயரமாக கருதப்பட வேண்டுமென ஜனநாயக மக்கள் முன்னணி கட்சி சுட்டிக்காட்டியுள்ளது.

இலக்குடன் கூடியவலுவான ஓர் எதிர்க்கட்சியாக இருந்திருந்தால், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் விலகிச் செல்வதனை தடுத்திருக்கலாம் என ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோகணேசன் தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியில் இணைந்து கொண்டமைக்கான பொறுப்பினை ஒற்றுமையிழந்த பிரதான எதிர்க்கட்சி என்ற ரீதியில் ஐக்கிய தேசியக் கட்சியும் ஏற்றுக் கொள்ள வேண்டுமென அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் எதிர்நோக்கிய நெருக்கடி நிலைமையை எம்மால் புரிந்து கொள்ள முடியும் என அவர் தெரிவித்துள்ளார்.

கட்சியின் ஒற்றுமையை கருத்திற் கொண்டு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ள தாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

கொள்கை அடிப்படையில் இணக்கப்பாட்டை ஏற்படுத்த தாம் எடுத்த முயற்சிகள் பலனளிக்கவில்லை என அவர் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# அரசியல் சாசன திருத்தங்கள் தொடர்பில் ஏனைய கட்சிகளின் கருத்துக்களும் அவசியம்

## சீலரத்ன தேரர் தெரிவிப்பு

(கொழும்பு)

உத்தேச அரசியல் சாசனத் திருத்தங்கள் தொடர்பில் ஏனைய கட்சிகளின் கருத்து கோரப்படவேண்டுமென ஜனசெத்த பெரமுன கட்சியின் தலைவர் பத்தரமுல்லே சீலரத்ன தேரர் தெரிவித்துள்ளார்.

ஆளும் கட்சியின் உத்தேச அரசியல் சாசனத் திருத்தங்கள் தொடர்பில் ஜனாதிபதி ஏனைய கட்சிகளினதும் கருத்துக்களை கேட்டறிய வேண்டுமென அவர் குறிப்பிட்டுள்ளார்.


கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது வேட்பு மனுத் தாக்கல் செய்த சீலரத்ன தேரர் இறுதி நேரத்தில் ஜனாதிபதிக்கு ஆதரவளிப்பதாகத் தெரிவித்து தேர்தலிலிருந்து வாபஸ் பெற்றுக்கொண்டார்.

குறிப்பிட்ட சில சிறிய அரசியல் கட்சிகளிடமேனும் ஜனாதிபதி கருத்துக்களை கோர வேண்டுமென அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஜனாதிபதியின் தவணைக் காலம் நீடிக்கப்பட்டமை வரவேற்கத்தக்கது என்ற போதிலும் ஜனாதிபதி மீதான மக்கள் நன்மதிப்பு வீழ்ச்சி அடைந்தால் அதற்கு எவ்வாறான நடவடிக்கை எடுக்கக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றதென அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

17 ஆவது திருத்தச் சட்ட மூலம் முழுமையாக அமுல்படுத்தப்பட வேண்டுமென அவர் குறிப்பிட்டுள்ளதோடு, விருப்பத் தெரிவு முறையிலான தேர்தல் நடத்தப்பட வேண்டும் எனவும் இந்த முறைமை இரத்து செய்யப்பட்டால், சிறுபான்மை மக்கள் அதிகம் பாதிக்கப்படக் கூடுமெனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ஸ்ரீ-2)

# நல்லூரான் திருவடிக்கு இன்று 18ஆம் திருவிழா




படங்கள் -அரவிந்

## மயிலேறி வந்திடுவாய்

அன்பின் ஊற்றாய் விளங்கிடும் கந்தனே
அறிவின் ஒளியாய் நாம் விளங்கிடவே
கல்வியின் கண்களாய் உயர்ந்திடவே
உன்னை நினைத்து தவமிருக்கையில்
உலகில் உயர்ந்த மானிடனாய் வளர
உன்பாதம் பணிந்து நிற்கின்றோம்
மயிலேறி வந்திடுவாய் குமரனே

இராஜேந்திரம் ஷோபா
யா/சாவகச்சேரி இந்துக்கல்லூரி

## நலமே அருள் முருகா!

நல்லூர் உறையும் நாதனே! நாளும்
பல்லோர் நாடித் தொழுதிடும் - வல்லோனே
வள்ளி தேவ குஞ்சரி மணாளனே!
வள்ளலே நலமே அருள்!

ப.மகேந்திரதாசன்
நாயன்மார் கட்டு

## வினைகள் அகற்றியே வேதனை தீர்ப்பாய்

வெள்ளமென துனதடியவர் திரண்டார்
வினைகளகற்றியே வேதனை தீர்ப்பாய்
உள்ளமுருகியே உயிர்பிழிந்தழுவார்
உற்றவர் பெற்றவர் யாவரும் இழந்தார்
தெள்ளமுதே தெய்வயானையின் திருவே
தினம் தினம் உன் தலம் தேடி கைகுவிப்பார்
அள்ளிடவே வரும் துயர் களைவோனே
ஆரமுதே பள்ளி எழுந்தருளாயே

செ. பவானி- வண்ணார் பண்ணை

## சோமஸ்கந்தனே வருக!

நல்லூர் கந்தனே சோமஸ்கந்தன்
தமிழ் மக்கள் மகிழ்ந்திட - வருக
ஒற்றுமையை ஓங்கச் செய்து
ஓர் தாயின் மக்களாக - வருக
மனங்களில் இன்பம் நிலவ
மாண்புடன் தமிழர் வாழ்ந்திட - வருக
துன்பங்கள் நீங்கி இன்பம் பெருக
சிரிப்புடன் சோமஸ் கந்தனே - வருக

லேனுஜா.கோபாலன்
யா/வட்டு இந்துக் கல்லூரி


வள்ளியோடு தெய்வானையுமாய்
வடிவமர்ந்த சுந்தரா... வந்தருள்வாய் வரம் தருவாய்



சீமாட்டி புடவைக்கடல்

இல. 15, மின்சார வீதி நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
கிளை-மங்கை சில்க்ஸ்
மொடேன் மாக்கற்
இல-122, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
T.P- 021 222 2196 fax-021 222 2102

# அரசாங்கத்தின் உத்தேச அரசியல் சாசன திருத்தங்களை ஏற்றுக்கொள்ள முடியாது

## ஜே.வி.பி.தெரிவிப்பு

ஆளும் கட்சியினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள உத்தேச அரசியல் சாசனத் திருத்தங்களை ஏற்றுக் கொள்ள முடியாது என ஜே.வி.பி. கட்சி தெரிவித்துள்ளது.

அரசாங்கத்தின் இந்த ஜனநாயக விரோத அரசியல் சாசனத் திருத்தங்களுக்கு எதிராக மக்கள் வீதியில் இறங்கி போராட்டங்களை நடத்த வேண்டுமென கட்சி கோரிக்கை விடுத்துள்ளது.

அரசாங்கத்தின் இந்த நடவடிக்கை நாட்டின் ஜனநாயகத்தை நிரந்தரமாக குழி தோண்டி புதைப்பதற்கு நிகரானதென தெரிவிக்கப்பட்டுள்ளது. எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 8 ஆம் திகதி புதன்கிழமை பாராளுமன்றில் இந்த உத்தேச அரசியல் சாசனத் திருத்தம் சமர்ப்பிக்கப்படும் தினத்தன்று தமது போராட்டம் ஆரம்பமாகும் என ஜே.வி.பி.யின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

அரசாங்கம் தீர்மானமிக்கதோர் நிலையை எய்தியுள்ளதாகவும் மக்கள் துரித கதியில் நடவடிக்கை எடுக்கவேண்டுமெனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த அரசியல் சாசனத் திருத்தங்களினூடாக ஆளும் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களின் உரிமையும் நசுக்கப்படும் எனவும் இதனால் குறித்த யோசனைத் திட்டத்திற்கு எதிராக வாக்களிக்குமாறு ஆளும் கட்சி உறுப்பினர்களிடம் கோரவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பாராளுமன்றில் இயங்கும் சிறிய கட்சிகள் எனதம்மைசிலர் அடையாளப்படுத்திய போதிலும் எவராலும் எதிர்பார்க்க முடியாத அழுத்தங்களை தமது கட்சியினால் பிரயோகிக்க முடியும் என அவர் தெரிவித்துள்ளார்.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை இல்லாதொழிக்க வேண்டுமென முதலில் ஜே.வி.பி. கட்சியே வலியுறுத்தியதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

உத்தேச அரசியல் சாசனத் திருத்தங்களுக்கு ஆதரவளித்தால் ஆளும் கட்சி உறுப்பினர்களும் பாதிப்புக்களை எதிர்நோக்க நேரிடலாம் என அவர் தெரிவித்துள்ளார்.

அரசியல் சாசனத் திருத்தங்கள் தொடர்பிலான அரசாங்கத்தின் பொறியில் சிக்காத ஒரே கட்சியாக ஜே.வி.பி. திகழ்கின்றதென அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (2-4)

## சொற்பொழிவு

(யாழ்ப்பாணம்)

வதிரி உல்லியனொல்லை அருள்மிகு கண்ணகை அம்மன் ஆலய உற்சவ காலத்தையொட்டி நடைபெற்றுவரும் சிறப்பு சொற்பொழிவில் இன்று புதன்கிழமை மாலை 6.15 மணிமுதல் 7.15 மணிவரை ''காலமும் கருத்தும்'' என்னும் விடயம் பற்றி வவுனியா மாவட்ட தமிழ்ச் சங்க தலைவரும் வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியால ஆசிரியருமான தமிழருவி த.சிவகுமாரன் சொற்பொழிவாற்றவுள்ளார். (2-4)

# உத்தேச அரசியல் சாசனத் திருத்தம் குறித்து எந்தத் தகவல்களும் தெரியாது

## தமிழ்த்தேசியக் கூட்டமைப்புத் தெரிவிப்பு

உத்தேச அரசியல் சாசனத் திருத்தங்கள் தொடர்பிலான எந்தத் தகவல்களும் தமக்குத் தெரியாது என தமிழ் தேசியக் கூட்டமைப்பு கட்சி அறிவித்துள்ளது.

உத்தேச அரசியல் சாசனத் திருத்தங்கள் தொடர்பிலான பேச்சுவார்த்தைகளுக்கு அரசாங்கம் அழைப்பு விடுக்கவில்லை என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிரேமசந்திரன் தெரிவித்துள்ளார்.

தமிழ் மக்கள் தொடர்பான அரசாங்கம் கரிசனை காட்டவில்லை என்பதே இவ்வாறான நடவடிக்கைகளின் மூலம் புலப்படுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

உத்தேச அரசியல் சாசனத் திருத்தங்கள் தொடர்பில் தமது கட்சி எவ்வித தெளிவுமின்றி காணப்படுவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளதோடு, ஏனைய கட்சிகளுக்கு இது குறித்து அறிவிக்கப்பட்டதா என்பது தமக்கு தெரியாது எனவும் தமக்கு இந்த விடயங்கள் குறித்து அறிவிக்கப்படவில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (2-4)

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

**செவ்வரத்தை (சப்பாத்துசெடி)**

Botonical Name - Hibiscus rosa - sinensis
Family - Malvaceae
Engl - Shoe flower plant
Sinh - Sapattu - mal

இது பல கிளைகளுடன் படர்ந்தாற்போல வளரும் ஒருவகைப் பெருஞ்செடி. இது நாலாபக்கங்களிலும் படர்ந்து அடர்த்தியாகவிருக்கும். கிளைத்தண்டுகள் பெரும்பாலும் கொடி போலவே அதிகம் நீண்டு பூமியை நோக்கி வளர்ந்து நுனி மாத்திரம் மேல்நோக்கி இருக்கும். முதிர்ந்த கிளைகளும் புதிய இனம் கிளைகளும் முறையே சாம்பல் நிறமாகவும் மங்கிய கருஞ்சிவப்பாகவுமிருக்கும். இலை சுமார் 6 - 12 செ.மீ நீளமும் 4-6செ.மீ அகலமும் உள்ளதாகவிருக்கும். அதிகம் இலேசாகவில்லாமல் சிறிது கனமுள்ள இலைகள் ரம்பவாய் போன்ற ஓரமுடையதாகவும், அடிப்பாகம் அகன்றும், நுனிப்பாகம் குறுகியும் இருக்கும். நல்ல சிவப்பு நிற பூக்களாக 5 இதழ்களோடு காணப்படும். காய்கள் காணப்படமாட்டாது. பல வாண்டுகள் வரை உயிர்வாழும்.

**பரம்பலும், இனவிருத்தியும்**

எல்லாவகை மண்ணிலும் நன்கு செழித்து வளரும் தன்மையுடையது. தண்டுத் துண்டங்களை வைத்து பயிராக்கலாம்.

**மருத்துவப்பயன்கள் :**

இதன்பூக்கள் இருதயத்தை வலுவூட்டுகிறது. ஒரு நாளைக்கு 4 - 10 பூக்களை அப்படியே மென்று உண்ணலாம். அத்துடன் மலச்சிக்கலை போக்கும் தன்மை கொண்டது.

♦ 3கிராம் இலை, 20 கிராம் தேங்காய்ப்பூ, 100 கிராம் கோதுமைமாவுடன் சேர்த்து அடை தயாரித்துண்ண மலச் சிக்கலையும் , வறட்சியையும் போக்கும், உடலிற்கு குளிர்ச்சியைக் கொடுக்கும்.

♦ செம்பரத்தைபூவில் ஏழுவகைகள் உண்டு. குறிப்பாக இரண்டு வகை செவ்வரத்தைப் பூக்கள்தான் மருத்துவக் குணம் வாய்ந்தவை. அவற்றில்ஒன்று கொடை செவ்வரத்தை பூ. மற்றையது குத்துச் செவ்வரத்தை பூ.

குத்துச் செவ்வரத்தைப் பூவை விடியற் காலையில் எடுத்து 10 கிராம் அளவு வெறும் வயிற்றில் பூக்களை மென்று விழுங் கவும். தண்ணீர், பால், தேனீர் எதுவும் அருந்தக் கூடாது. 30 நிமிடங்கள் கழித்து சூடில்லாது பால், மோர், தயிர் ஆகியன உட்கொள்ளலாம்.

பால்வினை நோய்களுக்கு 10 கிராம் செவ்வரத்தம் பூக்களை 50 கிராம் பசுந்தயிரில் பூக்களைகிள்ளிப் போட்டு மூடிவைத்து ஒரு மணிநேரம் கழித்து உட்கொள்ளவும்.

♦ சிறுநீர் எரிச்சலுக்கு 200 கிராம் செவ்வரத்தம்பூவை 200கிராம் பனங்கற்கண்டுடன் சேர்த்து நன்றாக மைபோல அரைத்து 2 லீற்றர் தண்ணீர் சேர்த்து அடுப்பிலேற்றி சிறு தீயில் கொதிக்க விடவும். 500 மில்லி அளவு சுண்டியதும் இறக்கி 200 கிராம் தேனை ஊற்றி கலக்கி மூடிவைக்கவும். 30 மில்லி அளவு தினம் 3 வேளை எடுக்கவும்.

**♦ இரத்த சுத்திக்கு**

200 கிராம் செவ்வரத்தை பூவை விடியற் காலையில் எடுத்து சுத்தம் செய்து நிழலில் உலர்த்தவும். இதனுடன் 200 கிராம் கற்கண்டை சேர்த்து இடித்து போத்தலில பத்திரப் படுத்தவும். காலை, மதியம், இரவு அரை தேக்கரண்டியளவு உட்கொண்டுவரவும். 40 நாட்களில் நல்லபலன் கிடைக்கும்.

**♦ முடி உதிர்வதை தடுக்கும் மருந்து எண்ணெய் :**

| | |
|---|---|
| செவ்வரத்தைபூ | 200 கிராம் |
| கறிவேப்பிலை | 25 கிராம் |
| கசகசா | 25 கிராம் |
| கரிசாலை இலை | 50 கிராம் |
| தேங்காய் எண்ணெய் | 600 கிராம் |



ஒரு மண்பானையில் தேங்காய் எண்ணையை ஊற்றிவைக்கவும். காலையில் உதிர்த்த செவ்வரத்தம் பூவை பால்விட்டு மைபோல அரைத்து பானையில் போடவும். கறிவேப்பிலையை மோர்விட்டரைத்து போடவும். கசகசாவை இளநீர் விட்டரைத்து போடவும். கரிசாலை இலையை தண்ணீர் விடாமல் அரைத்து போடவும். பானையை அடுப்பில் வைத்து சிறுதீயாக எரிக்கவும். நீர்சுண்டி தைலம் போன்ற பதத்தில் வரும்போது இறக்கி ஆறவிட்டு கண்ணாடி புட்டியில் மாற்றவும். தினமும் தலையில் தடவி எட்டு நாட்களுக்கு ஒருமுறை தலை முழுகிவரலாம். இதனால் முடி உதிர்வது தீருவதுடன் கண்புகைச்சல், கண்ணரிச் சல் ஆகியனவும் தீரும்.

**♦ கண்ணரிவு, நீங்குவதற்கு....**

செவ்வரத்தம் பூ 100 கிராம்
சோற்றுக்கற்றாழைச் சோறு 50 கிராம்
(Aloe jel)
தேங்காய் எண்ணெய் 300 கிராம்.

புதிய செவ்வரத்தைப் பூவை பால்விட்டு வெண்ணெய் பதமாக அரைத்துக் கொள்ளவும். எல்லாவற்றையும் பானையில் போட்டு காய்ச்சி இறக்கவும். 10 சொட்டுக்கள் உச்சியில் தடவிக் கொள்ளவும். கண்களை மூடி, மூடிய கண்கள் மேல் எண்ணெயை இலேசாக தடவிக்கொள்ளவும் கண் எரிவு நீங்கும்.

♦ குழந்தைகட்கு ஏற்படும் கணைச்சூடு நீங்க, 100 செவ்வரத்தம் பூவினை எடுத்துக் கொண்டு பூவைப்போல் ஆறுபங்கு தண்ணீர் சேர்த்து ஒரு பங்காக காய்ச்சி நன்கு பிசைந்து வடிகட்டி நாட்டுச் சர்க்கரை சேர்த்து சாப்பிட கொடுத்துவர வேண்டும்.

**♦ செவ்வரத்தம் பூ சர்பத் :**

தேவையான அளவு செவ்வரத்தம் பூக்களை நீரில் கொதிக்கவிடவும். சீனியையும் சேர்க்கும் முன் பூக்களின் சாயம் இறங்கியதும் பூக்களை எடுத்துவிட்டு, சீனியை சேர்த்து ஒன்றாகக் காய்ச்சவும். சூடு ஆறியதும் எலுமிச்சைச் சாறு பிழிந்து ஊற்றி சர்பத் தயாரித்து பருக உடலெரிவு, கண்ணரிச்சல், சிறுநீர்கடுப்பு தீரும்.

**♦ செவ்வரத்தைப் பூ கோப்பி**

தேவைக்கேற்ப பால் (பசும்பால்), தேவைக் கேற்ப செவ்வருத்தி பூ இதழ்கள், மற்றும் சீனி ஆகியவற்றை எடுத்துக் கொள்ளவும். அண்ணளவாக பால் 250 மில்லிக்கு 25 செம்பருத்தி பூ, சீனி 50 கிராம். ஏலம் 4 அல்லது 3 எடுத்துக் கொள்ளவும்.முதலில் பாலுடன் 150மில்லி தண்ணீர் ஊற்றி பூவின் இதழ்களைப் போட்டு அதன் பின் சீனி போட்டு கொதிக்கவிட வேண்டும். நன்கு கொதித்து பூவின் சாறு மண்ணிறமாக வந்ததும் பூவினை வடிகட்டி வடிதட்டில் பிழிந்துவிட்டு ஏலக்காயை பொடிசெய்து இதில் இட்டு குடிக்க வேண்டும்.

இதனால் இரத்தவிருத்தி உண்டாகும். இதயம் பலப்படும், வெள்ளை சாய்தல் நீங்கும். உடலிற்கு இது ஓர் சிறந்த ஊட்டமுள்ள கோப்பியாகும். காலை, இரவு குடித்துவரலாம்.

**♦ செவ்வரத்தை இலை சூப்**

| | |
|---|---|
| செவ்வரத்தை இலை | 1 கப் |
| தேங்காய் | பாதி |
| வெங்காயம் நறுக்கியது | 1சிறிய கப் |
| பெருஞ்சீரகம் | 1/4 தேக்கரண்டி |
| தக்காளி | 4 |
| உள்ளி | 6 பல் |
| இஞ்சி | 1 துண்டு |
| சீரகம், மிளகு (தூள்) | 1/2 தேக்கரண்டி |
| எலுமிச்சம்பழம் | 1 |
| மஞ்சள் | 1 துண்டு |
| மல்லி | 3 தேக்கரண்டி |
| சீரகம் | 1/4 தேக்கரண்டி |

செவ்வரத்தை இலையை அலசிவிட்டு பொடியாக அரிந்து கொள்ளவும். அரிசி களைந்த நீரில் வெங்காயம் பாதி அளவு, மஞ்சள் பொடி தக்காளி இரண்டு நீளவாக்கில் அரிந்து போடவும். மல்லியை மசிய அரைத்து போடவும். சீரகம், இஞ்சி துண்டு, உள்ளி, இலைகளை விழுதாக அரைத்து, வாணலியில் எண்ணெய் ஊற்றி சிறிது பெருஞ்சீரகம் தூள் செய்து போட்டு சிவந்ததும் வெங்காய், தக்காளி அரைத்த விழுதை போட்டு வதக்கி வாசனை வந்ததும் அரிசி நீரில் போட்டு கொதிக்கவிடவும். ஒரு கொதி வந்ததும் செவ்வரத்தம் கீரையை போட்டு பசுமைமாறாமல் வேகவைத்து இறக்கவும். எலுமிச்சம்பழம் பிழிந்து சூப்பில் ஊற்றி, மிளகு, சீரகப்பொடி தூவி உப்பு போட்டு வதக்கி குடிக்கவும், இதனால் உடற்சூடு தணியும். வெள்ளை சாய்தல் தீரும் கண் ஒளி பெறும்.

டாக்டர் திருமதி விவியன் சத்தியசீலன் (M.D.C.S.)
சிரேஷ்ட விரிவுரையாளர், சித்தமருத்துவத்துறை,
யாழ். பல்கலைக்கழகம், கைதடி.

# வேண்டிய வரங்களை அள்ளித்தரும் வட்டக்கச்சி ஸ்ரீரங்கநாதப் பெருமாள்

வன்னி பெருநிலப் பரப்பிலே கிளிநொச்சி மாநகரத்திற்கு கிழக்கே வட்டக்கச்சி என்ற இடத்தில் மம்மில் குளக்கரையிலே ஸ்ரீரங்க நாதப் பெருமாள் ஆலயம் அமைந்துள்ளது.

இவ்வாலயத்தின் கருங்கல்லால் ஆன கருவறையிலே நின்றகோலத்திலே அரங்க நாத சுவாமிகள் ஸ்ரீதேவி, பூமிதேவி சகிதம் காட்சி கொடுக்கின்றார். தெற்கு நோக்கிய கரு வறையிலே ஸ்ரீநாராயண சுவாமிகள் லஷ்மி தேவி சகிதம் லஷ்மி நாராயணர் வடிவிலே அனந்த சயனத்திலே காட்சி கொடுக்கிறார்.

இவ்வாலயத்திலே மூன்று வேளை பூசை சிறப்பாக நடைபெறுவதோடு ஞாயிறு தோறும் விஷேட பூசைகள், பஜனை, பகவத்கீதை மற் றும் சொற்பொழிவு என்பன சிறப்புற நடை பெறுகின்றன.


மாதந்தோறும் ஏகாதசி விழா இடம்பெறுவ தோடு வைகுந்த ஏகாதசி விழா மிகவும் சிறப் பாக நடைபெறுகிறது. மார்கழி மாதம் 30 நாட் களும் அதிகாலையில் திருப்பாவை திருவிழா நடைபெறுகின்றது.

மம்மில் குளத்திலே நீராடி பகவானை வேண்டி வழிபடும் பக்தர்கள் வேண்டிய வரங் களை பெறுகின்றார்கள். நாட்டின் நாலா பக்கங்களிலிருந்து கல்விமான்கள், ஆன்மீக வாதிகள் ஆலயத்திற்கு வருகை தந்து போரில் நொந்து போன மக்களுக்கு ஆறுதல் கூறு வது மட்டுமல்ல ஆன்மீக வளர்ச்சிக்கு உதவு கிறார்கள்.

அந்த வகையிலே அவர்கள் பாக்கியம் செய்தவர்கள். ஊர்மக்கள் இம்முறை பகவா னுடைய திருவிழா செய்யப்பட வேண்டும் என்று மிக்க ஆவல் கொண்டு ஆண்டு தோறும் நடைபெறும் பிரமோற்சவத்தை நடாத்திய வண்ணம் இருக்கிறார்கள். கடந்த 24 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமான திருவிழாவில் இன்றையதினம் தேர்த்திருவிழா மிகவும் சிறப்பாக நடைபெறு கின்றது.

மு.தியாகராசா
வட்டக்கச்சி.

கீதை சொன்ன கண்ணன் வண்ணத் தேரில் பவனி வரும் அருங்கொள்ளைக் காட்சி யைக் காண பல பகுதிகளிலும் இருந்து பக் தர்கள் வருகை தருவார்கள். அன்றை தினம்



சிறப்பு பேருந்துகள் கிளிநொச்சியிலிருந்து வட்டக்கச்சி ஸ்ரீ ரங்கநாதர் ஆலயம் வரை போக்குவரத்து ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

இப்புனித பூமியிலே நீங்கள் காலடி வைத்தால் அதனால் ஏற்படும் மாற்றத்தை அன்றே உணர்வீர்கள். ஒருமுறை தரிசனம் கிடைத்தவர்கள் மறுமுறை தரிசனம் காண ஆவலுறும் உணர்வு பெற்றே திரும்புவார் கள். கண்ணனைக் காண வாரீர் அவனருள் பெறவும் வாரீர்.

## டெங்கு நுளம்பைக் கட்டுப்படுத்த பி.ரி.ஐ நுண்ணங்கி பாவனை இன்று முதல் ஆரம்பம்

(கொழும்பு)

டெங்கு நுளம்பு பெருக்கத்தை கட்டுப் படுத்துவதற்காக இன்று முதல் பி.ரி.ஐ பக்ரீ ரியா நுண்ணங்கி பயன்படுத்தப்படவுள்ளது.

உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்டுள்ள இந்த நுண்ணங்கியை டெங்கு நுளம்பு பெருக்கத்தை கட்டுப்படுத்துவதற்கு பயன் படுத்துவதற்குத் தேவையான சகல ஏற்பாடு களையும் சுகாதார அமைச்சு மேற்கொண் டுள்ளது.

இந்த நுண்ணங்கி முன்னோடியாக பேலியகொட மற்றும் மட்டக்குளி பிரதேசங்க ளில் பயன்படுத்தப்படவுள்ளமை குறிப்பிடத் தக்கது. (ஸ்ரீ-2)

## புதையல் தோண்டிய ஐவர் கைது

அம்பாறை மாவட்டத்தின் பொத்துவில் பிரதேசத்தில் புதையல் தோண்டிய வெலிமடை, எம்பிலிப்பிட்டிய, லக்கல ஆகிய பிரதேசங் களைச் சேர்ந்த ஐவர் பொலிசாரால் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார்கள்.

புதையல் தோண்டுவதற்குப் பயன்படுத் தப்பட்ட உபகரணங்களும் பொலிசாரால் கைப்பற்றப்பட்டுள்ளன. (ஸ்ரீ-2)

## மாகாணசபை தேர்தலில் வாக்களிக்க முடியாத நிலையில் 14 ஆயிரம் இடம்பெயர்ந்த குடும்பங்கள்

### கபே அமைப்பு தெரிவிப்பு

(கொழும்பு)

எதிர்வரும் மாகாணசபை தேர்தலில் போட்டியிட முடியாத நிலையில் 14 ஆயிரம் இடம்பெயர்ந்த குடும்பங்கள் உள்ளதாக சுயாதீனமானதும், நேர்மையானதுமான தேர்தல் கண்காணிப்புக்குழு தெரிவித்துள் ளது.

இது தொடர்பில் அதன் பணிப்பாளர் கீர்த்தி தென்னக்கோன் தெரிவித்துள்ளதா வது; வாக்காளர்களை பதிவு செய்யும் நட வடிக்கைகளை தேர்தல் திணைக்களம் ஆரம் பித்து மூன்று மாதங்கள் கடந்துள்ள நிலை யிலும் இடம்பெயர்ந்த தமிழ் மக்கள் யாரும் தம்மை பதிவுசெய்யாததால் 14 ஆயிரத்து 184 குடும்பங்கள் தமது வாக்களிக்கும் தகமை களை இழந்துள்ளன.

கடந்த ஜுன் மாதம் முதலாம் திகதி வாக் காளர்களை பதிவு செய்யும் நடவடிக்கைகளை தேர்தல் திணைக்களம் மேற்கொண்டிருந்த போதும் இன்றுவரை வடக்கு - கிழக்கு பகுதி களில் 10 வீதிமான மக்களே கிராம சேவை யாளர் பிரிவுகளில் தம்மை பதிவு செய்துள் ளனர் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ)

## சீனாவில் யுனான் பிராந்திய ஆளுநர் இலங்கைக்கு விஜயம்

சீனாவின் யுனான் பிராந்திய ஆளுநர் கிவிங் குவன்ரொன் தலைமையிலான தூதுக் குழுவொன்று இலங்கைக்கு விஜயம் செய் துள்ளது.

கொழும்பில் இன்று நடைபெறவுள்ள வர்த்தகக் கண்காட்சியில் கலந்துகொள்ள வதற்காகவே இத்தூதுக்குழு விஜயம் செய் துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மின் சக்தி, உயர்கல்வி, விவசாயம் மற் றும் தொலைத்தொடர்பாடல் ஆகிய துறை களில் சீன - இலங்கை அரசாங்கங்களுக்கிடை யிலான 4 முக்கிய உடன்படிக்கைகள் இந்த விஜயத்தின் போது கைச்சாத்திடப்படவுள்ளன.

இதேவேளை இத்தூதுக்குழுவினர் பிரத மர் டீ.எம்.ஜயரத்னவைச் சந்தித்து இரு நாட் டுப் பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்தி விவகாரங்கள் தொடர்பாகவும் கலந் துரையாடியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஸ்ரீ-2)

## கிருஷ்ணஜெயந்தி பெருவிழா

(யாழ்ப்பாணம்)


ஈவினை அருள்மிகு ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலயத்தின் கிருஷ்ணஜெயந்தி பெருவிழா இன்று புதன்கிழமை மாலை 3 மணிக்கு விசேட பூஜைகளைத் தொடர்ந்து 5 மணிக்கு ஸ்ரீதேவி பூமாதேவி சமேத புஜங்கசயன பெருமா னுக்கு விசேட அபிடேக ஆராதனைகள் இடம் பெற்று சுவாமி வீதி உலாவரும் காட்சி இடம் பெறவுள்ளது.

தொடர்ந்து உறியடி உற்சவமும் இடம் பெறவுள்ளது. (ஸ்ரீ-4)

## பெண்ணின் உடலில் ஆணி அடித்து துன்புறுத்திய சவுதி தம்பதியர் கைது

இலங்கைப் பணிப்பெண்ணான ஆரிய வதியின் உடலில் 24 ஆணிகளை அடித்துக் கொடூரமாகச் செலுத்தி துன்புறுத்திய தம்பதி யர் சவுதி அரேபிய பொலிஸாரால் கைது செய் யப்பட்டுள்ளதாக அந்நாட்டுத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இவ் பணிபுரிந்த வீட்டுச் சொந்தக்காரரான 35 வயது ஆணையும் 29 வயதான அவரது மனைவியையுமே இவ்வாறு சவுதி அரேபிய பொலிஸார் கைது செய்துள்ளனர். கைது செய் யப்பட்ட தம்பதியினர் தமது குற்றத்தை ஒப்புக் கொண்டுள்ளதாகவும் கூறப்படுகிறது. (ஸ்ரீ-2)



அராலி மேற்கு சனசமூக நிலைய மலரும் மலர்கள் முன்பள்ளி விளை யாட்டு விழா கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

இதில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட ஆசிரிய வாண்மை விருத்தி நிறுவகப் பணிப்பாளர் பா.தனபாலன் மங்கல விளக்கேற்றுவதையும் அருகில் முன்பள்ளி ஆசிரியை திருமதி ச.சிவரஞ்சினி, பிரதேச சபை பொறுப்பதிகாரி ப.மகேசன் மற்றும் கிராம உத்தியோகத்தர் யு.எஸ். அசோகரத்தினம் ஆகியோர் நிற்பதையும் படத்தில் காணலாம்.

## இ.போ.சபையின் அசௌகரியங்கள் குறித்து முறையிட தொலைபேசி இலக்கம்

(கொழும்பு)


இ.போ. ச.பயணிகள் முகம் கொடுக்கும் அசௌகரியங்கள் குறித்து முறைப்பாடு செய்வதற்கு அவசர அழைப்பு இலக்கம் ஒன்றை இலங்கை போக்குவரத்துச் சபை அறிமுகப்படுத்தியுள்ளது.

இதற்கமைய பயணிகள் தமது முறைப் பாடுகளையும் யோசனைகளையும் 0117 555555 என்ற இலக்கத்தின் ஊடாக அறிவிக் குமாறு இ.போ. தலைவர் எம்.பி. பந்துசேன தெரிவித்துள்ளார்.

இத்தொலைபேசி இலக்கத்திற்கு அறிவிக் கப்படும் முறைப்பாடுகளுக்கு அரை மணி நேரத்தில் தீர்வு முன்வைக்கப்படும் எனவும் அவர் கூறினார். (ஸ்ரீ-2)

## முன்னாள் அமைச்சர் லக்ஷ்மன் ஜயகொடி கொழும்பில் காலமானார்

(கொழும்பு)



முன்னாள் அமைச்சர் லக்ஷ்மன் ஜயகொடி நேற்று முன்தினம் மாலை கொழும்பில் காலமானார்.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்காவின் ஆட்சியில் 1994முதல் 2000ஆம் ஆண்டு வரை பௌத்த அலுவல்களுக்கான அமைச்சராகப் பணி புரிந்த இவருக்கு இறக்கும் போது வயது 80.

கண்டி திருத்துவக்கல்லூரியிலும் கொழும்பு ஆனந்தாக்கல்லூரி யிலும் கல்வி பயின்ற இவர் காலமாகும் முன்னர் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் சிரேஷ்ட ஆலோசகராக இருந்தார்.

இலங்கைக் கிரிக்கெட் சபையின் தலைவராகவும் இருந்துள்ள இவர் மேல்காண சபை உறுப்பினர் சந்தன ஜயகொடியின் தந்தை ஆவார். (ஸ்ரீ)

# தமிழின் பெரும்புகழை இலங்க வைத்த பேரறிஞர் தனிநாயகம் அடிகளார்

## இன்று பேரறிஞர் தனிநாயகம் அடிகளாரின் 30 ஆவது ஆண்டு நினைவுதினம்

ஈழமணித் திருநாட்டிலே ஈழத்தமிழர் வரலாற்றில் 20 ஆம் நூற்றாண்டில் மூவர் புகழ் பூத்த நாயகர்களாக விளங்குபவர்களில் ஒருவர் நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர், மற்றவர் தமிழ்த்தாது தனிநாயகம் அடிகள், அடுத்தவர் பன்மொழி வல்லுநர் தாவீது அடிகள் ஆவார்கள்.

"அரசியல் ரீதியாக ஈழத்தமிழினத்துக்கு தனித்துவம் உண்டு. தனித்து நிற்கச் சக்தி படைத்தவன் தமிழன்" என்று உலக அரங்கில் தமிழினத்திற்கு வரலாற்றுக் கலாசார இடத்தைக் கொடுத்த நாயகம் தனிநாயகம் அடிகள்!

முற்றும் துறந்த முனிவனுக்குத் தமிழ் மேல் கொண்ட அதீத காதலைத் துறக்க முடியவில்லை. இதற்கு அடிகளின் அமுதவுரையே தக்க சான்றாகும். வேலணையில் நடைபெற்ற திருக்குறள் மகாநாட்டில், "எனது கண்கள் பஞ்சடைந்து போகிறது. கால்கள் நடக்க மறுக்கின்றன. ஆனால் தமிழ் "என்றார். தமிழ்கூறும் நல்லுலகில் வழக்கிலிருந்தஇன்பத்தமிழ் மொழியை அகிலத்தில் அரியாசனம் ஏற்றி சக்தி வாய்ந்த உலகமொழிகளுடன் அரியாசனம் பெற வழிசமைத்த பெருமைக்குரியவர் தனிநாயகம் அடிகளே என்றால் அது மிகையாகாது.

"என்னை நன்றாக இறைவன் படைத்தனன், தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே" என்பது திருமூலரின் திருவாக்கு. இதற்கு தனிநாயகம் அடிகள் இலக்கணமாகத் திகழ்ந்தார்.இன்று (01.09.2010) இவர் இறைபதமடைந்து 30 ஆண்டுகள் உருண்டோடினாலும் கன்னித் தமிழுக்கும், கத்தோலிக்க திருமறைக்கும் தனிநாயகம் அடிகள் ஆற்றிய மாபெரும் பணியை காலமெல்லாம் நன்றிப்பெருக்குடன் இவ்வுலகில் கடைசித் தமிழன் வாழும்வரை நினைவுகூரக் கடமைப்பட்டுள்ளான்.

வெளிநாட்டவரும் தமிழ் அன்னையின் அமிழ்ந்து சுவைத்துத் தலை வணங்க வேண்டுமென்ற பாரதியின் கனவை உலகத் தமிழாய்வின் தந்தை தனிநாயகம் நனவாக்கினார். இவரால் தமிழினம் பெருமையுற்றது. ஈழநாடு இணையற்ற புகழையீட்டியுள்ளது.

யாழ்.புனித பத்திரிசியார் கல்லூரி அன்னை தான் ஈன்ற சான்றோர்களாகிய நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர்,பன்மொழி மேதை தவத்திரு தாவீது அடிகள்,உலகம் போற்றும் தமிழ்த்தூத் தனிநாயகம் அடிகள் ஆகியோரால் இமயத்தின் உயரப் புகழாரம் பெற்றாள்.

"நேற்று என்பது உடைந்த பானை, நாளை என்பது மதில் மேல் பூனை, இன்று என்பது மீட்கும் வீணை" என ஒரு அறிஞர் கூறியுள்ளார். சொல்லின் வேந்தன் தனிநாயகம் அடிகள் தரணியில் தமிழுக்கும், திருமறைக்கும் ஆற்றிய மாபெரும் பணியை நாம் மீட்டுப் பார்ப்பது சாலவும் சிறந்தது.

பசுந்தீவு எனப்படும் நெடுந்தீவில் ஆசிரியத்திலகம் ஸ்ரனிஸ்லாஸ் கணபதிப் பிள்ளைக்கும் உத்தம வாழ்க்கைத் துணைவி சிசில் இராசம்மாவுக்கும் கருவிலே திருவுடையவராக சேவியர் தனிநாயகம் 1913 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 2 இல் பிறந்தார். இவர் யாழ்ப்பாணம் புனித பத்திரிசியார் கல்லூரியில் படிக்கும் காலத்தில் கல்வியிலும் , தெய்வ ஞானத்திலும்,ஒழுக்கத்திலும் விளையாட்டுத்துறையிலும் அதி சிறந்த மாணவனாகத் திகழ்ந்தார். தனிநாயகம் அடிகள் உலகைத் துறந்து குருவத்துவப் பயிற்சிபெறும்பொருட்டு 1931 தொடக்கம் 1934 ஆம் ஆண்டு வரை கொழும்பு புனித பேணாட் குருமடத்தில் இணைந்து படித்தார்.

தவத்திரு தாவீது அடிகளாரின் நெறிப்படுத்துதலினாலும் இந்தியாவின் முதலாவது சுதேசி ஆயர் றோச் ஆண்டகையின் ஆதரவும் அரவணைப்பும் கிடைத்ததினாலும் குருத்துவ சிறப்புப் பயிற்சியையும் குருத்துவக் கல்வியையும் உரோமாபுரியில் ஊர்பான் பல்கலைக்கழகத்தில் பெற்று 1938 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 19 ஆம் திகதி குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டார்.

இவர் 25 வயதில் திருமறைக் கலாநிதிப் பட்டம் பெற்று தமிழ், ஆங்கில மொழிகளில் முதுகலைமாணி (M.A) மற்றும் இலக்கிய முதுமாணி(M.Litt)பட்டங்களையும் லண்டனில் கல்வியியல் கலாநிதி (Ph.D.) ப் பட்டத்தையும் பெற்றார். வத்திக்கான் திருநகரில் 43 நாடுகளைச் சேர்ந்த குருத்துவ மாணவர்களுடன் படித்ததினால் இவருடைய பன்னாட்டு சமூக உறவு வலுப்பெற்றது.

இவர் தூத்துக்குடியில் ஆயர் றோச் ஆண்டகையின் கீழ் 1940 ஆம் ஆண்டு தொடக்கம் 1945 வரை ஆசிரியராகவும், விரிவுரையாளராகவும், குருத்துவப் பணியாளராகவும் மும்முரமாக உழைத்தார். ஆங்கில மொழிச் சூழலில் இவர் உருவாக்கப் பட்டிருப்பினும் பண்டிதர் குருசாமியிடம் இவர் முறையாகத் தமிழ்பயின்று தமிழில் அதீத புலமை பெற்றார்.

"பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும் நற்றவானிலும் நனிசிறந்தனவே" பாரதியின் கூற்றை உய்த்துணர்ந்த தனிநாயகம் அடிகள் இலங்கைப் பல்கலைக்கழகத்தில் கல்வித்துவ விரிவுரையாளராக 1951 ஆம் ஆண்டு தொடக்கம் 1961 ஆம் ஆண்டு வரை கற்பித்தலில் ஈடுபட்டார். இவர் மேற்குலக நாடுகளில் மலாயாப் பல்கலைக்கழகத்தில் 1961 தொடக்கம் 1969 வரை பேராசிரியராக இருந்து இந்தியக் கலைகள் -கலைத்துறைப் பீடாதிபதியாக பணிபுரிந்தார். 1970 தொடக்கம் 1971 வரை பேராசிரியராக பாரீஸ் பல்கலைக்கழகத்தில் இந்தியக் கலைகள் துறையில் கடமையாற்றினர்.1971 தொடக்கம் 1972 வரை நேப்பிள்ஸ் பல்கலைக்கழகத்திலும் சேவையாற்றினார்.

தமிழ்தூது தனிநாயகம் அடிகள் 15 மொழிகளில் வல்லுநராகவும் 30 மொழிகளில் பரீட்சையமுடையவராகவும் மொழிப் புலமையினால் சொல் வேந்தராகவும் திகழ்ந்தார். இது இறைவன் இவருக்கு அளித்த சிறப்புக் கொடையாகும்.உலகிலு-----ள்ள செம் மொழிகளில் தமிழ்மொழியும் ஒன்று என்ற உண்மையை இன்று தான் நவீன மொழி யியலாளர்கள் ஏற்றுக்கொண்டு அங்கரித் துள்ளனர். ஆனால் இற்றைக்குப் பல ஆண்டுகளுக்கு முன்னரே தமிழின் செம்மொழி அந்தஸ்தைப் பற்றி தனிநாயகம் அடிகளார் வலியுறுத்தி வந்துள்ளார். மொழியிலாளர்கள் வகுத்துள்ள செம்மொழி அந்தஸ்துப் 'பெறுவதற்கான 11 கோட்பாடுகளுக்கும் தமிழ் தகுதியுடையது என்பதை முன்னோடியாக அகிலம் முழுவதும் தரிசித்து அறிவித்து வந்தார்.



**இவரின் நூல்கள் தமிழில்**

❖ ஒன்றே உலகம் (பிரயாணக் கட்டுரைகள்)
❖ தமிழ்த்தூது (கட்டுரைத் தொகுப்பு)

**இவரின் நூல்கள் ஆங்கிலத்தில்:**

❖ தமிழ்ப்பண்பும் நாகரீகமும் (லண்டன்)
❖ வெளிநாடுகளில் தமிழ்மொழி (மலாயா)
❖ தமிழ் கற்பதற்கான கைநூல் (மலாயா)

**துரை ஆரோக்கியதாசன்**

❖ இயற்கையும் புலமையும் - தமிழ் இலக்கியங்களில் (பம்பாய்)
❖ கார்த்தூசியன் குருகுலம் (அமெரிக்கா)
❖ வேறு பல நூல்களில் ஆராய்ச்சிக் கட்டுரைகள்

சங்க இலக்கிய ஆய்வு பற்றிய தனிநாயகம் அடிகளின் நூலை திறனாய்வு செய்த பேராசிரியர் கமில்சுவலபில் பின்வருமாறு கூறியுள்ளார். "பழந்தமிழ் இலக்கியங்களைப்பற்றி இதுவரை எழுதப்பட்டவை அனைத்தையும் இந்நூல் பலவகையிலும் விஞ்சி நிற்கின்றது" என்றார்.

பிரதம ஆசிரியராக - தமிழ்க் கலாசாரம் (ஆங்கிலம்) முத்திங்கள் வெளியீடு -1952 - 1967,தமிழ் போர்த்துக்கீய அகராதி -1969, தமிழ்க்கலை வர்த்தமானி -1969, தனிநாயகம் அடிகள் பல பிரபல சொற்பொழிவுகளையும் ஆற்றியுள்ளார்.

அவற்றில் 1953 இல் அவர் உருவாக்கிய அனைத்துலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றமே மணி மகுடமாக மிளிர்கின்றது.

## முதலாம் தர அனுமதிக்கான தற்காலிக பெயர்ப்பட்டியல்களை காட்சிக்கு வைக்கும் பணிகள்

அடுத்த வருடம் முதலாம் தரத்திற்குப் பிள்ளைகளைச் சேர்த்துக்கொள்வதற்கான தற்காலிகப் பெயர்ப் பட்டியல்கள் காட்சிக்கு வைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதற்கமைய ஆட்சேபனைகளையும் மேன்முறையீடுகளையும் முன்வைக்கப் பெற்றோருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது. தற்காலிக பெயர்ப்பட்டியல் காட்சிப்படுத்தப்பட்ட தினத்திலிருந்து இரண்டு வாரங்களுக்குள் ஆட்சேபனைகளும் மேன்முறையீடுகளும் முன்வைக்கப்பட வேண்டுமெனத் தேசியப் பாடசாலைகள் பணிப்பாளர் ஸ்ரீலால் நோனிஸ் தெரிவித்தார். அடுத்த ஆண்டு முதலாம் தரத்திற்குப் பிள்ளைகளைச் சேர்த்துக் கொள்வதற்கான நேர்முகப் பரீட்சைகள் முடிவடைந்த சில பாடசாலைகளில் ஏற்கனவே தற்காலிகப் பெயர்ப்பட்டியல்கள் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

அத்துடன் பெற்றோரின் ஆட்சேபனைகளும் மேன்முறையீடுகளும் குறித்த பாடசாலை அதிபருக்குப் பதிவுத் தபாலில் அனுப்பப்பட வேண்டும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. அனேகமான பாடசாலைகளில் நேர்முகப் பரீட்சைகள் முடிவடைந்துள்ளதால் ஏனைய பாடசாலைகளிலும் அடுத்த இரண்டு வாரங்களுக்குள் பெயர்ப்பட்டியல்களைக் காட்சிக்கு வைக்க எண்ணியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (ஸ்ரீ-2)

## தமிழினியை தொடர்ந்தும் தடுத்து வைக்க உத்தரவு

தமிழீழ விடுதலைப்புலிகளின் முன்னாள் மகளிர் அரசியல்துறை பொறுப்பாளர் தமிழினி எனப்படும் சிவனா சுப்பிரமணியத்தை தொடர்ந்தும் விளக்கமறியலில் தடுத்து வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

கொழும்பு பிரதான நீதிமன்ற நீதவான் பிரதான நீதவான் ரஸ்மி சிங்கப்புலி நேற்று இந்த உத்தரவை பிறப்பித்தார்.

பொலிஸ் தடுப்புக் காவலில் உள்ள தமிழினி தொடர்பில் நேற்று புலனாய்வுத் துறையினர் நீதிமன்றத்தில் அறிக்கை ஒன்றை சமர்ப்பித்துள்ளனர்.

அதில் தமிழினியை விசாரணை செய்த போது அவர் தமிழீழ விடுதலைப்புலிகளின் பல்வேறு பயங்கரவாத நடவடிக்கைகள் தொடர்பில் தகவல்களை வெளியிட்டுள்ளதாக அவர்கள் தெரிவித்துள்ளனர் . இதனையடுத்தே நீதவான் தடுப்பு காவல் உத்தரவை நீடித்தார்.

தமிழினி 2009 ஆம் ஆண்டு மே மாதம் 20 ஆம் திகதியன்று வவுனியா செட்டிக்குளம் தடுப்பு முகாமில் வைத்து கைது செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-2)

## அபிவிருத்தித் திட்டங்களினால் காணிகளை இழந்தவர்களுக்கு காணிகள் வழங்கப்பட வேண்டும்

### ஜனாதிபதியிடம் கருணா கோரிக்கை

(கொழும்பு)


அபிவிருத்தித் திட்டங்களினால் காணிகளை இழந்தவர்களுக்கு காணிகளை வழங்குமாறு பிரதி மீள்குடியேற்ற அமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.


அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தித் திட்டங்களினால் பெரும் எண்ணிக்கையிலானோர் காணிகளை இழந்துள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பருவப் பெயர்ச்சி மழை ஆரம்பமாகுவதற்கு முன்னர் புதிய காணிகளை வழங்குமாறு ஜனாதிபதியிடம் தாம் கோரியதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

திருகோணமலை மாவட்டத்தில் இடம்பெயர்ந்து வாழும் சகல மக்களையும் டிசம்பர் மாத இறுதிக்குகள் மீள்குடியேற்ற முடியும் என அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார். (ஸ்ரீ-4)






# நல்லை நகர் ஆறுமுக நாவலர் நல்லையம் பதிக்குச் செல்லும் காட்சி














யாழ்ப்பாணம் நாவலர் மண்டபத்தில் வைக்கப் பட்டிருந்த நாவலர் சிலையை நல்லூர் நாவலர் மணிமண்டபத்தில் பிரதிஷ்டை செய்வதற்காக எடுத்துச் செல்லப்படும் காட்சியைப் படங்களில் காணலாம்

அமைச்சர் கே.என்.டக்ளஸ்தேவானந்தா தலை மையில் நேற்றுக்காலை நடந்த இந்நிகழ்வில் சமயப் பெரியார்கள் உட்படப் பெருந்திரளானோர் கலந்து கொண்டனர்.

நாவலர் சிலை ஊர்வலமாக எடுத்துச் செல்லப் பட்டு நாவலர் மணிமண்டபத்தில் பிரதிஷ்டை செய் யப்பட்டது.

# ராமர்கோவில் பற்றி விரைவில் தீர்ப்பு;

## அயோத்தியில் மீண்டும் பதற்றம்

## 50 ஆயிரம் மத்திய படை விரைகிறது

உத்தர பிரதேச மாநிலம் அயோத்தியில் இருந்த பாபர் மசூதி 1992 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 6 ஆம் திகதி இந்து அமைப்புகளால் இடிக்கப்பட்டது.பின்னர் அதில் சிறிய அளவில் ராமர் கோவிலையும் அமைத்தனர்.

பழங்காலத்தில் இந்த இடத்தில் ராமர் கோவில் இருந்ததாகவும் அதனால் தான் பாபர் மசூதியை இடித்ததாகவும் இந்து அமைப்புகள் கூறி வந்தன.

அந்த இடத்தில் மீண்டும் பாபர் மசூதி கட்ட வேண்டும் என்று முஸ்லிம்களும் ராமர் கோவில் கட்ட வேண்டும் என்று இந்துக்களும் வற்புறுத்தி வருகின்றனர்.இதற்கிடையே பிரச்சினைகளுக்குரிய இந்த இடம் இந்துக்களுக்குச் சொந்தமா?அல்லது முஸ்லிம்களுக்குச் சொந்தமா என்பது குறித்து அலகாபாத் மேல் நீதிமன்றில் வழக்குத் தொடரப்பட்டது.இந்த வழக்கு விசாரணை முடிந்து விரைவில் தீர்ப்புக் கூறப்பட இருக் கிறது.

எதிர்வரும் 30 ஆம் திகதி தீர்ப்புக் கூறப் படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. பிரச்சினைக்குரிய இடம்யாருக்கு சொந்தம் என்று நீதிமன்றம் அறிவித்தாலும் எதிர்த் தரப்பினர் உடனே போராட்டத்தில் குதிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.பாபர் மசூதி இடிக்கப் பட்ட போது அயோத்தி உட்பட உத்தர பிரதேசத்தில் பல இடங்களிலும் நாட்டில் பல்வேறு இடங்களிலும் கலவரம் ஏற்பட்டது. இதேபோல தீர்ப்பு வரும் போது கலவரம் ஏற்படலாம் என எதிர் பார்க்கப்படுகிறது. எனவே உத்தர பிர தேசத்தில் இப்போதே பதற்றம் தொற்றிக் கொண்டுள்ளது.

கலவரம் ஏதும் ஏற்படாமல் தடுக்க உத்தரபிரதேச அரசு விரிவான ஏற்பாடுகளை இப்போதே செய்யத் தொடங்கி உள்ளது. அயோத்தி, கான்பூர், வாரணாசி, பிரெய்லி, மொராதாபாத், மீரட், மதுரா ஆகிய இடங்கள் பதற்றம் நிறைந்த பகுதியாக கண்டறியப் பட்டுள்ளது.எனவே இங்கு பாதுகாப்பைப் பலப்படுத்த உள்ளனர்.பாதுகாப்பு பணிக்காக 50ஆயிரம் மத்திய பொலிஸாரை அனுப்பும் படி உத்தரபிரதேச அரசு கேட்டுள்ளது.(ஸ்ரீ)

# பாக். வெள்ள நிவாரண நிதியுதவியை 25 மில். டொலராக உயர்த்தியது இந்தியா

(புதுடில்லி)

பாகிஸ்தான் வெள்ள நிவாரண நிதியை 25 மில்லியன் டொலாராக இந்திய மத்திய அரசு உயர்த்தியிருக்கிறது.

இது குறித்து மக்களவையில் நேற்று தானாக முன்வந்து அறிக்கை ஒன்றை வாசித்த நிதியமைச்சர் பிரணாப் முகர்ஜி பாகிஸ்தானுக்கு வெள்ள நிவாரண நிதியாக 5 மில்லியன் அமெரிக்கா டொலர்கள் அளிக் கப்படுமென ஏற்கனவே அரசு அறிவித் திருந்தது.

80 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு பேரழிவு ஏற்பட்டுள்ள பாகிஸ்தானுக்கு அதிக அளவில் நிவாரண உதவிகள் தேவைப் படுகிறது.

இதைக் கருத்தில் கொண்டு இந்தியா அளிக்கும் நிவாரண நிதி 25 மில்லியன் அமெரிக்க டொலராக உயர்த்தப்படுகிறது.

மொத்த நிவாரண நிதித் தொகையில் ஐ.நா.வின் ஒத்துழைப்புடன் மேற்கொள் ளப்படும் பாகிஸ்தான் மழை நிவாரணப் பணிகளுக்கு 20 மில்லியன் அமெரிக்க டொலர்கள் ஒதுக்கப்படும்.

எஞ்சிய 5 மில்லியன் அமெரிக்க டொலர்கள் பாகிஸ்தான் நிவாரணப் பணி களுக்கான உலக உணவுத் திட்டத்தின் மனித நேய நடவடிக்கைகளுக்கு வழங்கப் படுமென பிராணப் முகர்ஜி தெரிவித்தார். (ஸ்ரீ-2)

# மாவோயிஸ்ட் தாக்குதலில் பீகாரில் 8 பொலிசார் பலி

(பாட்னா)

பீகாரில் மாவோயிஸ்ட் தீவிரவாதிகளுடன் நடந்த துப்பாக்கி சண்டையில் 8 பொலிசார் கொல்லப்பட்டனர். 3 பேரை மாவோயிஸ்ட்கள் கடத்திச் சென்றுவிட்டனர். பொலிசார் வைத்திருந்த 35 துப்பாக்கிகளையும் அள்ளிச் சென்றுவிட்டனர்.

பீகார் மாநிலம் லக்கிசராய் மாவட்டத்தில் மலைப்பகுதியில் அமைந்துள்ள ராம்தல்நகர் கிராமத்தில் மாவோயிஸ்ட்களின் நடமாட்டம் இருப்பதாக பொலிசுக்கு இரகசியத் தகவல் கிடைத்தது. இதையடுத்து பீகார் ஆயுதப் படை பொலிஸ் மத்திய பொலிஸ் மற்றும் அதிரடிப் படை வீரர்கள் அடங்கிய கூட்டுக் குழுவினர் அந்த கிராமத்துக்கு கடந்த 29 ஆம் திகதி விரைந்தனர்.


பொலிசை நோக்கி மாவோயிஸ்ட்கள் துப்பாக்கியால் சுட்டனர். இதையடுத்து பொலிசுக்கும் மாவோயிஸ்ட்களுக்கும் இடையே கடும் துப்பாக்கி சண்டை மூண்டது. இந்தச் சண்டையில் 8 பொலிசார்கள் கொல்லப் பட்டனர்.

மேலும் 10 பேர் காயம் அடைந்தனர். பொலிசாரிடம் இருந்து 35 துப்பாக்கிகளை பறித்துக் கொண்ட மாவோயிஸ்ட்கள் 3 பொலிசாரையும் கடத்திச் சென்றுவிட்டனர். (2)

# விஜயகாந்த் முதல்வர் என்பது காமெடிக்குரிய விடயம்

## அமைச்சர் நெப்போலியன் தெரிவிப்பு

(பெரியகுளம்)




தே.மு.தி.க.தலைவர் விஜயகாந்த் தமிழகத்தில் அடுத்த முதல்வர் நான் தான் என கூறுவது நகைப்பிற்குரியது என மத்திய இணை அமைச்சர் நெப்போலியன் பேசி னார்.

வடுகபட்டியில் நடந்த திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் கலந்து கொண்ட மத்திய இணை அமைச்சர் நெப்போலியன் பேசுகையில், பொதுவாக சினிமா நடிகர் களை பார்ப்பதற்கு மக்கள் மத்தியில் ஆர்வம் வரும், திருமணவிழா உள்ளிட்ட விசேடங் களில் கலந்து கொள்ளும் போது கூட்டம் அதிகமாக இருக்கும். இந்த மாதிரியான கூட்டங்களை பார்த்துதான் தே.மு.தி.க. தலைவர் விஜயகாந்த் , தமிழகத்தில் அடுத்த முதல்வர் நான்தான் என கூறியிருப்பார்.

தே.மு.தி.க. 2005 இல் ஆரம்பிக்கப்பட்டு கடந்த சட்டசபை தேர்தலில் 234 தொகு திகளில் போட்டியிட்டு ஒரு தொகுதியை பிடித் தது. வரும் சட்டசபை தேர்தலில் விஜயகாந்த் நாங்கள் நான்கு அல்லது பத்து தொகுதியை பிடிப்போம் என பேசினால் அது ஏற்புடைய தாக இருக்கும்.

அதை விட்டு தமிழகத்தில் அடுத்து நான் தான் முதல்வர் என பேசி வருவது நகைப்புக்கானது. அவருடைய கல் லூரியிலே அவர் முதல்வராவது முடியாது, ஏனென்றால் கல்வித்தகுதி வேண்டும் என்றார். (ஸ்ரீ-2)



கிருஷ்ண ஜெயந்தியை முன்னிட்டு உத்தரபிரதேச மாநிலம் மதுராவில் உள்ள கிருஷ்ணர் கோயில் மின்விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டுள்ளது.

# பாரதச் செய்திகள்

# அடிக்கடி வெளிநாடு செல்ல அமைச்சர்களுக்குத் தடை

## மன்மோகன்சிங் உத்தரவு

(புதுடில்லி)

மத்திய மாநில மந்திரிகள் வெளிநாடுகளுக்கு செல்வது சமீப காலமாக அதிகரித்துள்ளது. சில மந்திரிகள் குறிப்பாக சரத்பவார், அனந்த சர்மா ஆகியோர் அடிக்கடி வெளி நாடு செல்வது தெரியவந்தது. அமைச்சர்களின் வெளிநாட்டு மோகத்தை கட்டுப்படுத்த பிரதமர் மன்மோகன் சிங் அதிரடி நடவடிக்கை எடுத்துள்ளார்.

அவரது உத்தரவின் பேரில் மத்திய மாநில மந்திரிகள் வெளிநாடு செல்வதை முடக்க புதிய விதி முறைகள் சேர்க்கப்பட்டுள்ளன. அதன்படி மத்திய மாநில மந்திரிகள் தங்களது தனிப்பட்ட பயணம் குறித்தும் பிரதமர் அலுவலகத்திடம் முன் கூட்டியே தகவல் கொடுத்து ஒப்புதல் பெற வேண்டும். தனிப்பட்ட பயணம் பற்றிய முழு விபரங்களையும் தரவேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளது.

மத்திய மாநில மந்திரிகள் வெளிநாட்டுக்கு செல்வதை தவிர எந்த திகதியில் திரும்பி வர உள்ளனர் என்பதையும் சரிபார்த்து கண் காணிக்க பிரதமர் மன்மோகன்சிங் உத்தர விட்டுள்ளார்.

இது தவிர வெளிநாட்டுக்கு போகும் ஒவ்வொரு தடவையும் இதற்கு முன்பு எத்தனை தடவை வெளிநாட்டுக்கு சென்று வந்துள்ளார் என்ற தகவலையும் மந்திரிகள் கொடுக்க வேண்டும் என்றும் பிரதமர் அறிவுறுத்தியுள்ளார்.

மேலும் குறிப்பிட்ட ஒரே நாட்டுக்கு எந்த மந்திரியாவது அடிக்கடி சென்று வந்தால் அது பற்றி தன் கவனத்துக்கு கொண்டு வருமாறும் பிரதமர் மன்மோகன்சிங் உத்தரவிட்டுள்ளார். பிரதமரின் இந்த உத்தரவு அமைச்சரவைச் செயலகம் மூலம் அனைத்து மந்திரிகளுக் கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ-2)

# குழந்தை வரத்திற்கு குண்டுமணி அர்ச்சனை

(திண்டுக்கல்)



சிவப்பு மற்றும் கறுப்பு வண்ணங்களுடன் சிறிய உருண்டை வடிவில் குண்டு மணி இருக்கும். பொதுவாக குழந்தைகள் விளையாடுவதற்கு மட்டுமே இதனை பயன்படுத்துவதைப் பார்த்திருப் போம்.ஆனால் கேரளா மாநிலம் குருவாயூ ரில் குழந்தை வரத்திற்கான பூசையில் இதற்கு தனி உண்டு.

திண்டுக்கல் மாவட்டம் பழனியில் அரிய வகை கைவினைப் பொருள் விற்பனையில் ஈடுபட்டுள்ள வையாபுரி மன்னாடியார் கூறுகையில், கேரள மாநிலம் பாலக்காடு மற்றும் தமிழ் நாட்டில் பழனி ஆகிய இடங்களில் அரிய வகை கைவினைப் பொருட்கள் விற்பனை செய்து வருகிறேன். பல ஆண்டுகளாக குழந்தை இல்லாத தம்பதியர் குருவாயூர் கோயிலில் பூசை செய்வது வழக்கம் .

இதில் குண்டுமணி அர்ச்சனைக்கு முக்கிய இடம் உண்டு. முன்னதாக பாத்திரத்தில் குண்டுமணிகளை நிரப்பி வைப்பர். இரு கைகளும் சேர்த்து முடிந்தளவு குண்டு மணிகளை அள்ளியபின் குழந்தை வரம் குறித்த கோரிக்கையை மனம் உருகி வேண்டுவர். பின்னர் அதே பாத்திரத்தில் விட்டு விடுவார் கோயில் மட்டுமின்றி கோகுலாக்ஷ்டமி (கிருஷ்ண ஜெயந்தி நாட்களில் சிலர் வீடுகளிலும் இதுபோன்ற பூசைகள் நடத்துவதை வழக்கமாகக் கொண் டுள்ளனர்.

கேரளாவில் மட்டுமின்றி தமிழகத்திலும் சில பகுதிகளில் இந்த அர்ச்சனை முறை காணப்படுகிறது எனவே குண்டுமணியை மொத்தமாக வாங்கி வந்து ஒரு கிலோ 150 ரூபாய்க்கு விற்பனை செய்கிறோம். இவ்வாறு அவர் கூறினார். (ஸ்ரீ-2)

வாய்ப்பு ஒருவரை பலமுறை தாண்டிச் சென்றுவிட்டாலும், நல்வாய்ப்பு ஒருநாள் அவரை கண்டுபிடித்தே தீரும். ~செனேகா

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

## நல்லூர் முருகன் அழைத்தான் நாவலன் விரைந்தான்

நல்லைநகர் ஆறுமுகநாவலரின் சிலை நேற்றைய தினம் நல்லூர் மணிமண்டபத்தில் மீளவும் பிரதிஷ்டை செய்யப்பட்டது.

இந்த நிகழ்வு நிறைவடைந்து நாவலர் மணி மண்டபத்தை விட்டு வெளியேறிய போது ஓர் அன்பர் எம்மை இடைமறித்தார்.

தற்போது சுவிட்சர்லாந்தில் இருக்கும் ஊடக வியலாளர் என்று தம்மை அறிமுகப்படுத்திக் கொண்ட அவர் "எனக்கு ஒரு சந்தேகம்" என்றார். "என்ன சந்தேகம்" என்றோம்.

ஆறுமுக நாவலரின் சிலையை ஏன் இங்கிருந்து நாவலர் மண்டபத்துக்கு எடுத்துச் சென்றார்கள்? இப்போது ஏன் அவரைக் கொண்டு வந்து வைக்கிறார்கள்? இதுதான் அவரின் சந்தேகம்.

முருகனைக் காட்டி எல்லாம் அவரின் வே(ல்)லை. இன்று மாலை அவர் கார்த்திகைக் கந்தனாக ...ளிவீதி வருவார். விசாரித்துப் பாருங்கள் என்று ...றிவிட்டு அங்கிருந்து புறப்பட்டோம்.

அந்த அன்பரின் சந்தேகம் எம்மை சிந்திக்க வைத்தது. 1985ஆம் ஆண்டு நாவலர் சிலையை நல்லூர் மணிமண்டபத்தில் இருந்து எடுத்துச் சென்று நாவலர் மண்டபத்தில் வைத்தார்கள். இருபத்தைந்து வருடங்களின் பின்னர், மீளவும் நாவலரின் சிலையை நேற்றைய தினம் எடுத்து வந்தார்கள்.

காலைப் பொழுது நாவலரை கண்டு விட வேண்டும் 'என்ற விருப்பில் ஆதவன் எழுவதும் பின்னர் நாவலருக்கு தன் கதிர்கள் சுட்டு விடுமோ என்று எண்ணி முகில் கூட்டங்களுக்குள் மறைவதுமான அற்புதமான காலநிலை.

வீதி எங்கும் மகர தோரண கும்பங்கள் நல்லூர்க் கந்தனிடம் போகின்றோம் என்ற விருப்பை வெளிப்படுத்துவதுபோல நாவலர் சிலையிலும் ஒரு தேயஸ்து.

ஆறுமுக நாவலனே! இருபத்தைந்து ஆண்டு ... நீ பிரிந்திருந்தது போதும். காலம் கனிந்து ...டது. ஒருகணம் ஆறுமுகசுவாமி வாசலில் ...யுயர்ந்து நிற்கும் இராஜ கோபுரத்தையும் பார்த்துவிட்டு வா என்று முருகன் அழைப்பது போல இருந்தது அந்தக் காட்சி.

ஆறுமுக நாவலனும் பிரிவுத்துயர் தாங்காதவராய் கந்தா, முருகா போதுமடா என்று கூறுவது போல கந்தப்பெருமானின் திருவீதியைச் சுற்றி வலம்வர,

நாவலனே! கண்குளிர காவடி ஆட்டத்தைப் பார். பிரிவுத்துயரை ஆற்றிக்கொள். போய் அமர்ந்து கொள் என்று வேலவன் கட்டளையிட் டது போல நிகழ்வுகள் நடந்தன.

ஆறுமுகநாவலரின் சிலை மணிமண்டபத்தை அடைந்தபோது அரோகரா என்ற கோசத்துடன் அடியார் கூட்டம் ஆனந்தக் கண்ணீர் சொரிந்த அற்புதத்தை பார்த்தபோது நெஞ்சம் நெகிழ்ந்தது.

கார்த்திகை நாளில் ஆறுமுக நாவலர் சிலை மணிமண்டபத்தில் அமர,

ஆறுமுகசுவாமி வாசலில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட இராசகோபுரத்தில் வேலனின் திருக்கரம் யந்திரத் தகட்டை பிரதிஷ்டை செய்ய எல்லாமே நல்லூர்க் கந்தனின் திருவருளால் நடந்தேறின.

மணிமண்டபத்தில் நாவலர் சிலையை பிரதிஷ்டை செய்தபின்னர் இவற்றையெல்லாம் ஏற்பாடுசெய்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் ஒரு வார்த்தை மட்டும் கூறினார்.

"கூட்டு முயற்சியால் நடந்தேறிய நல் நிகழ்வு இது" என்பதே அவரின் வார்த்தை.

ஆம், தமிழர்கள் ஒன்றுபட்டால் எதனையும் சாதிக்கலாம் என்பதை முருகன் உணர்த்தியிருக்கின்றான்.

தமிழர்கள் ஒன்றுபடுவோம்; திட்டமிடுவோம்; செயல்படுத்துவோம்; பாடம் புகட்டுவோம். எங்கள் இனம் நாதியற்றுப் போகவோ, நாவலன் காத்த தமிழ் வீண்பட்டுப்போகவோ நல்லூர்க் கந்தன் இருக்கையில் எமக்கு என்ன குறை? வாருங்கள் தமிழர்களே சுயநலம் களைந்து மதியுகம் அமைப்போம்.

## அந்தகார இருள் சூழ்ந்த வேளையில் அவதரித்த கண்ணபிரான்

அகிலமெல்லாம் தூங்கும் வேளையில் ஞானிகள் விழிப்புடன் இருக்கிறார்கள் எனக் கீதையில் கண்ணபிரான் கூறுகிறார். எங்கும் இருள் சூழ்ந்திருக்கும்போது எங்காவது ஒளிதெரிந்தால் எவ்வளவு ஆனந்தமாயிருக்கும். இந்தவிதமாகவே ஆவணி மாதத்துக் கிருஷ்ணபட்ச அட்டமித் திதியில் நள்ளிரவு வேளையில் உலகின் அஞ்ஞான இருளகற்றவென கண்ணபிரான் அவதரித்தார்.

கோகுலத்திலே பிறந்து மாடுமேய்க்கும் கோகுலன் எனும் நாமத்துடன் தெருவிலே தீராத விளையாட்டுப் பிள்ளை கண்ணனாகவும் குழல் ஊதுபவனாகவும் போர்க்களத்திலே அர்ச்சுனனுக்குப் பார்த்தசாரதியாகத் தேரோட்டினவனும் திரௌபதையின் மானங்காத்த ஆபத்பாந்தவனாகவும் குசேலர் போன்ற பக்தர்களுக்கு இரட்சகனாகவும் பீஷ்மருக்கு முத்திகொடுத்த பெருஞானியாகவும் கீதை உபதேசத்தினால் உலகின் அஞ்ஞான இருளகற்றி மெய்ஞ்ஞானப் பேரொளி விளங்கவைத்த கிருஷ்ண பரமாத்மாவாகவும் கண்ணபிரான் கோகுலாஷ்டமியில் அவதரித்தார்.

**இன்று கிருஷ்ண ஜயந்தி தினமாகும்**

உலகில் அதர்மங்கள் அழியவும் தர்மங்கள் தழைக்கவும் யுகங்கள்தோறும் தாம் அவதாரம் எடுப்பதாக கீதோ உபதேசத்தில் கண்ணபிரான் அருளுகின்றார். உலகில் தீயோரிடமிருந்து நல்லோரைக் காப்பதற்காகவும் நவக்கிரகங்களால் ஏற்படும் கோளாறுகள் களையவும் தசாவதாரங்கள் எடுத்து நம்பினோர்க்கு நல்லருள் புரிபவராக திகழும் கிருஷ்ணபரமாத்மா,

நவக்கிரகங்களில் சூரியனாக இராம அவதாரமாகவும் சந்திரனாக கிருஷ்ண அவதாரமாகவும் செவ்வாயாக நரசிம்ம அவதாரமாகவும் புதனாக கல்கி அவதாரமாகவும் வியாழனாக வாமன அவதாரமாகவும் சுக்கிரனாகப் பரசுராம அவதாரமாகவும் கூர்ம அவதாரமாக சனீஸ்வரனாகவும் வராக அவதாரமாக இராகுவாகவும் மச்சாவதாரமாக கேதுவாகவும் விளங்கி மக்களுக்கு கிரக வழிபாட்டில் நல்லருள் புரிபவராக கண்ணன் நல்வழி காட்டியாக விளங்குகின்றார்.

சிறுகுழந்தையாக இருந்தபோதே பல லீலைகள் செய்தும் தன் தாயாருக்கு உலகம் முழுவதையும் வாய்க்குள் காட்டியும் பிரமதேவருக்கே தான் பசுவாகவும் கன்றாகவும் காட்சி கொடுத்தும் பாண்டவர்களுக்குத் தன் சுயரூபத்தைக் காட்டியும் எல்லாவற்றுக்கும் மேலாக கீதையிலே அர்ச்சுனனுக்கு தானே எல்லாமாக உள்ளதாக தமக்குள் இந்த அண்டசராசரங்களும் அடங்கிய விஸ்வரூபக் காட்சிகொடுத்தும் உலகின் அஞ்ஞான இருளகற்றி மெய்ஞ்ஞான ஒளிகாண வழிகாட்டியவன் கலியுக பரமாத்மாவான கண்ணபிரானை கிருஷ்ண ஜயந்தி நன்னாளில் வழிபட்டு நாமும் நற்கதி அடைவோமாக.

நிர்வைமணி

## 50 ஆயிரம் வீடுகள் அமைக்கும் திட்டம் விரைவில் ஆரம்பமாகும் - நிருபமா ராவ்

(வவுனியா)

வடக்கு கிழக்கு மாகாணங்களில் இடம்பெயர்ந்து மீள் குடியேறிய மக்களுக்கு இந்தியா பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களை நடைமுறைப்படுத்தவுள்ளது. அதில் 50 ஆயிரம் வீடுகள் அமைக்கும் வேலைத்திட்டம் விரைவில் ஆரம்பமாகும் என இந்தியவெளிவிவகார அமைச்சின் செயலாளர் நிருபமா ராவ் வவுனியாவில் தெரிவித்தார்.

மதவாச்சி - மன்னார் மற்றும் ஓமந்தை - பளை ரயில் பாதைகளையும் இந்தியா புனரமைத்துமக்களுடைய போக்குவரத்து வசதிகளை ஏற்படுத்தும். அதற்கு மேலாக இடம்பெயர்ந்த மக்களுக்கு வீடுகளைக் கட்டிக்கொள்ள சீமெந்து கட்டிடப் பொருட்களும் இந்தியாவினால் வழங்கப்படும் எனவும் அவர் சொன்னார். அத்துடன் விவசாய நடவடிக்கைகளுக்கு தேவையான உபகரணங்கள் விதைகள் கூட வழங்கப்படும். இவை அனைத்தும் இலங்கை அரசின் ஊடாகவே வழங்கப்படும்.

செட்டிக்குளம் கதிர்காமர் நிவாரணக் கிராமம் மற்றும் இந்திய கண்ணிவெடி அகற்றும் நிறுவனத்தினரால் கண்ணிவெடிகள் அகற்றப்பட்டு வரும் ஓமந்தை மகிழங்குளம் பிரதேசத்திற்கும் இந்தியக் குழுவினர் நேற்று செவ்வாய்க்கிழமை விஜயம் மேற்கொண்டனர். முன்தாக மாவட்ட செயலகத்தில் அரச அதிபர் திருமதி பி.எம்.எஸ். சாள்ஸை சந்தித்து மாவட்ட நிலைமை குறித்து நிருபமா ராவ் கேட்டறிந்தார். (ச-5)

## மேன் முறையீடுகள் பரிசீலிக்கப்பட்டு இடமாற்றங்களை இரத்துச்செய்ய முடிவு

## தமிழர் ஆசிரியர் சங்கம் அறிவிப்பு

வன்னி மாவட்டப்பாடசாலைகளுக்கு வழங்கப்பட்ட ஆசிரிய இடமாற்றங்கள் யாவும் தற்காலிகமாக ஒத்திவைக்கப்பட்டுள்ளன. அதேசமயம் ஆசிரியர்களால் மேற்கொள்ளப்பட்ட மேன் முறையீடுகள் யாவும் வலயமட்ட இடமாற்றசபை பரிசீலனைகள் சில காரணங்களால் இரத்து செய்யப்பட்டுள்ளதாக இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் த.மகாசிவம் தெரிவித்துள்ளார்.

நேற்று யாழ். கல்வி வலய முகாமைத்துவ மண்டபத்தில் வடமாகாண கல்விச் செயலாளர் எல். இளங்கோவன் தலைமையில் ஆசிரியர் இடமாற்றம் மேன் முறையீடுகள் தொடர்பான கலந்துரையாடல் நடைபெற்றது. இக்கலந்துரையாடலில் மாகாணக்கல்விப் பணிப்பாளர், மாகாண மேலதிக கல்விப்பணிப்பாளர், மாகாண கல்வி அமைச்சின் பிரதிக்கல்விப்பணிப்பாளர், யாழ்ப்பாண மாவட்ட மாகாண மேலதிக கல்விப்பணிப்பாளர், யாழ்ப்பாண மாவட்டத்தின் ஐந்து வலயங்களின் கல்விப்பணிப்பாளர்களும், இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கப் பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர்.

அங்கு எடுக்கப்பட்ட முடிபுகள் தொடர்பாக இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் த. மகாசிவம் தெரிவிக்கையில்,

1. இடமாற்றப்பட்ட ஆசிரியர்களின் மேன் முறையீடுகள் பரிசீலிக்கப்பட்டு கீழ்வரும் காரணங்களை உடைய பொருத்தமானவர்களுக்கு இடமாற்றத்தை ரத்துச் செய்வதாக தீர்மானிக்கப்பட்டுள்ளது. அவையாவன,

❖ சேவை நியமன நிபந்தனைகளுக்கு முற்றிலும் முரணாக இடம்பெற்ற இடமாற்றங்கள்.

❖ ஏற்கனவே கஷ்டப்பிரதேசப் பாடசாலைகளில் கடமையாற்றியவர்கள்.

❖ வெளிமாவட்டத்தில் சேவையாற்றியவர்கள்.

❖ கணவன் அல்லது மனைவி (குடும்பம்) பிரிக்கப்பட்டு வழங்கப்பட்ட இடமாற்றங்கள்.

❖ கர்ப்பிணித்தாய்மார்களு ம், பாலூட்டும் தாய்மார்களும். இருதய நேயாளர்களும், இரத்த அழுத்த நோயாளர் களும்.

2. ரத்துச் செய்யப்பட்ட இடமாற்றங்களுக்காக சம்பந்தப்பட்ட வலயங்களில் இருந்து சம எண்ணிக்கையான புதிய ஆசிரியர் இடமாற்றப்பட்டியல் ஒன்றும் வலயங்களில் இடமாற்ற சபைகளால் தயாரிக்கப்பட்டு வழங்கப்பட்டுள்ளன. இவ் ஆசிரியர்களும் முதலாம் பந்தியில் குறிப்பிடப்பட்ட காரணங்களுக்கு உட்பட்டால் அவர்களும் தகுந்த ஆதாரங்களுடன் மாகாண இடமாற்ற சபைக்கு தமது மேன்முறையீடுகளை வலயங் களின் கல்விப்பணிப்பாளர்களுக்கூடாக பதிவுத் தபாலில் மாகாணக் கல்விப் பணிப்பாளருக்கு அனுப்பி அதன் பிரதியை இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்க யாழ். மாவட்டச் செயலாளர் என். நகுலன், இலங்கை தமிழர் ஆசிரியர் சங்க தலைமை அலுவலகம், 40, நாயன்மார் வீதி, நல்லூர், யாழ்ப்பா ணம் என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கோரப்படுகின்றனர்.

3. இடமாற்றம் செய்யப்பட்டு இதுவரை மேன்முறையீடு செய்யாத ஆசிரியர்களும் விரும்பின் மேன்முறையீடு செய்ய அனுமதிக்க வேண்டும் என இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் முன்வைத்த கோரிக்கையை வடமாகாணக்கல்வி அமைச்சுச் செயலாளர் ஏற்றுக்கொண்டுள்ளதால் குறித்த ஆசிரியர்களும் மேன்முறையீடு செய்ய முடியுமென த. மகாசிவம் தெரிவித்துள்ளார்.

4. இம் மேன்முறையீடுகளில் திருப்தியீனம் காணப்பட்டால் அவர்களும் மாகாண மேன்முறையீட்டுச் சபைக்கு மேன் முறை யீடு செய்யமுடியுமென இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங் கப் பொதுச் செயலாளர் த.மகாசிவம் அறிவித்துள்ளார். (ச-2)

## சுவாமி விவேகானந்தரின் அருள்வாக்கு



நீ இறைவனிடம் கொள்ளும் அன்பிற்குத் தடையாக எதுவும் குறுக்கிடாதபடி பார்த்துக்கொள். அவனிடம் அன்புகொள். அன்பு கொள். அன்பு கொள்.

உலகம் கூறுவதைப் பொருட்படுத்தாமல் இறைவனிடம் பக்தி செலுத்து. உலகம் என்ன வேண்டுமானாலும் சொல்லிக் கொள்ளட்டும்.

மனத்தையும் உடம்பையும் ஆரோக்கியமாகவும் தூய்மையாகவும் வைத்துக் கொள்ளவேண்டும். இறைவனை அணுக உதவும் கருவிகளாக அவற்றை ஆக்கிக் கொள்ள வேண்டும். இதைத்தவிர வேறு எந்த உபயோகமும் அவற்றிற்கு இல்லை. நாம் விலகியிருக்கும் அளவிற்கு இறைவன் நம்முள் வருகிறான். சிறிய "நான்" என்பதை விட்டுவிடு. பெரிய "நான்" மட்டும் வாழ இடம்கொடு.

# சுலோவாகியா நாட்டில் 7 பேரை சுட்டுக்கொன்ற இராணுவ வீரர்

சுலோவாகிய நாட்டில் டேவினஸ் காநோவா வெஸ் என்ற இடத்தில் குழந்தைகள் பாடசாலை உள்ளது. அதில் மேல் மாடியில் குடியிருப்புகள் உள்ளன. நேற்று முன்தினம் அங்கு சுமார் 50 வயது மதிக்கத்தக்க நபர் புகுந்தான்.

அங்குள்ள ஒரு வீட்டுக்குள் புகுந்து அவன்தான் வைத்திருந்த 2 கைத்துப்பாக்கிகளால் அங்கிருந்தவர்களை சரமாரியாக சுட்டான்.

அதில் 7 பேர் துப்பாக்கி குண்டு பாய்ந்து பரிதாபமாக இறந்தனர். அவர்களில் 4 பேர் பெண்கள் என்றும் 3 பேர் ஆண்கள் எனவும் கொல்லப்பட்டவர்களில் 5 பேர் வீட்டிற்குள் பிணமாக கிடந்ததாகவும் தெரிவிக்கின்றது.

அத்துடன் ஒருவர் வீட்டுக்கு வெளியே கிடந்தார். காயம் அடைந்தவரை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு அங்கு சிகிச்சை பலனின்றி அவர் பரிதாபமாக இறந்தார்.

இதற்கிடையே துப்பாக்கி சத்தம் கேட்டதை தொடர்ந்து கீழ்தளத்தில் உள்ள பாடசாலையின் ஆசிரியை மார்தா வோஷ்ட்ரான் கோவா பொலிஸுக்கு தகவல் கொடுத்ததில் உடனே பொலிஸார் அங்கு விரைந்து வந்தனர்.

சம்பவம் நடந்த வீட்டை சுற்றி வளைத்தனர். இதை தொடர்ந்து வெளியே வந்த அந்த நபர் தான் வைத்திருந்த துப்பாக்கியால் தன்னைச் சுட்டு தற்கொலை செய்து கொண்டார்.

அவர் யார்? என்றும் எதற்காக இவர்களைச் சுட்டுக் கொன்றார் எனத் தெரியவில்லை. ஆனால் அவர் முன்னாள் இராணுவ வீரர் என தெரியவந்துள்ளது. முன்னதாக வீட்டை விட்டு வெளியே வந்த அவரை கைது செய்ய பொலிஸார் முயன்றனர்.

ஆனால் அவர் பொலிஸாரை நோக்கி துப்பாக்கியால் சுட்டார். இதில் ஒரு பொலிஸ் தலையில் குண்டு பாய்ந்து காயம் ஏற்பட்டது. மேலும் 3 வயது சிறுவனும் காயம் அடைந்தான். அதன் பின்னர் தான் அவர் தற்கொலை செய்து கொண்டார் என பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ஸ்ரீ-2)

# என்னுடைய பிறப்புச் சான்றிதழை நெற்றியில் ஒட்டிக் கொள்வதா?

## ஒபாமா காட்டம்




(வோஷிங்டன்)

நான் முஸ்லிமா கிறிஸ்தவனா என்பதை தெரிவிப்பதற்காக என்னுடைய பிறப்பு சான்றிதழை நெற்றியில் ஒட்டிக் கொண்டு அலைய முடியாதென அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா தெரிவித்துள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதிக்கான தேர்தல் நடந்த போது ஒபாமா முஸ்லிம் என எதிர்க்கட்சியினர் பிரசாரம் செய்தனர். அமெரிக்காவில் 18 சதவீத மக்கள் ஒபாமாவை முஸ்லிம் என நினைத்து கொண்டிருப்பதாக சமீபத்திய ஆய்வு ஒன்று தெரிவித்துள்ளது.

இது குறித்து ஒபாமா குறிப்பிடுகையில் , சிலர் வேண்டுமென்றே இது போன்ற செய்திகளை பரப்புகின்றனர். நான் கிறிஸ்தவன் என்பதை நிரூபிப்பதற்காக என்னுடைய பிறப்பு சான்றிதழை நெற்றியில் ஒட்டிக் கொண்டு அலைய முடியாது. தொலைக்காட்சி மற்றும் பத்திரிகைகளால் பரப்பப்படும் இது போன்ற தவறான செய்திகளுக்காக நான் வாழ்நாள் முழுவதும் வருத்தப்பட்டு கொண்டிருக்க தயாரில்லை என தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)



பாரிஸில் பிரான்ஸ் ஜனாதிபதி சர்கோஷி, எகிப்து ஜனாதிபதி ஹோஸ்னி(இடது) முபாரக்கை சந்தித்து பேசிய பின் இருவரும் கைகுலுக்கினர்.

# மியன்மாரில் மீண்டும் இராணுவ ஆட்சியே ஏற்படுமென எதிர்வுகூறல்

(யாங்கூன்)


மியான்மார் நாட்டில் நவம்பர் மாதம் நடைபெறவுள்ள தேர்தலுக்காக வேட்பாளர்களை தேர்வு செய்வதில் ஜனநாயக கட்சிகள் பின் தங்கிவிட்டன. இதனால் இராணுவ அரசே மீண்டும் ஆட்சியைக் கைப்பற்றும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

மியான்மார் நாட்டில் இராணுவ ஆட்சி நடக்கிறது. ஜனநாயக தலைவர் ஆங்சாங் சூகி 20 ஆண்டுகளாக வீட்டுச் சிறையில் வைக்கப்பட்டுள்ளார். அவர் தேர்தலில் போட்டியிட முடியாதவாறு பல்வேறு குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளன. மியான்மார் ஜனநாயக கட்சியும் தேசிய ஜனநாயக படை ஆகிய கட்சிகள் 200 வேட்பாளர்களை மட்டுமே தேர்வு செய்துள்ளன.

ஆளும் ஐக்கிய மேம்பாட்டு கட்சி கூட்டணி ஆயிரத்து 200 வேட்பாளர்களை களத்தில் இறக்கியுள்ளது. கடுமையான சட்ட திட்டங்கள், விதிமுறைகள் குறிப்பிட்ட காலத்துக்குள் வேட்பாளரை தேர்வு செய்ய வேண்டும் என்ற நிபந்தனை போதுமான நிதியின்மை போன்ற காரணங்களால் ஜனநாயக கட்சிகள் அதிக அளவில் வேட்பாளர்களை தேர்வு செய்ய முடியாமல் பின் தங்கி விட்டன. எனவே நவம்பர் 7 ஆம் திகதி நடைபெறவுள்ள தேர்தலில் இராணுவ அரசு மீண்டும் ஆட்சியை கைப்பற்றும் என்பதில் சந்தேகமில்லை. (ஸ்ரீ-2)




# எரிமலை சீற்றத்தினால் மக்கள் வெளியேற்றம்



(கபன்ஜகே)

இந்தோனேசியாவில் நானூறு ஆண்டுகளுக்குப் பின் எரிமலை ஒன்று கடும் புகையைக் கக்கத் தொடங்கியதை அடுத்து ஆயிரக்கணக்கான மக்கள் கிராமங்களை விட்டு வெளியேற்றப்பட்டு, தற்காலிகக் கூடாரங்களில் தங்க வைக்கப்பட்டு வருகின்றனர்.

இந்தோனேசியாவின் சுமத்ரா தீவின் வடபகுதியில் உள்ளடங்கிய இடத்தில் சினபுங் என்ற எரிமலை அமைந்துள்ளது. இது கி.பி. 1600 இல் அக்னிக் குழம்பைக் கக்கியது.

அதன் பின் கடந்த மூன்று நாட்களாக கடும் புகையை வெளியிடத் தொடங்கியுள்ளது. மொத்தம் 2 ஆயிரத்து 460 மீற்றர் உயரம் கொண்ட இந்த எரிமலையின் புகை மற்றும் சாம்பல் 2ஆயிரம் மீற்றர் உயரம் வரை பரவியுள்ளது. மேலும், அருகிலுள்ள வயல் வெளிகளிலும் சாம்பல் படிந்து வருகிறது. எரிமலை புகையைக் கக்கத் தொடங்கிய உடனே அரசு அதன் அருகில் இருந்தவர்களை வெளியேறும் படி உத்தரவிட்டது. எரிமலையைச் சுற்றி ஆறு கி.மீ.தூரத்துக்கு அபாயப் பகுதியாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் நேற்று முன்தினம் மூவாயிரம் பேர் தங்கள் கிராமங்களை விட்டு எரிமலையிலிருந்து 20 கி.மீ. தொலைவிலுள்ள கபன்ஜகே என்ற இடத்தில் அரசு அமைத்துள்ள தற்காலிகக் கூடாரங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இதுவரை மொத்தம் 21 ஆயிரம் பேர் கூடாரங்களுக்கு வந்து சேர்ந்துள்ளனர்.எரிமலை கக்கும் புகை வான்வெளியில் மிக அதிக உயரத்துக்குப் பரவ ஆரம்பித்திருப்பதால் விமான நிறுவனங்கள் அப்பகுதி அருகில் செல்ல வேண்டாம் என தங்கள் விமானிகளுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளன. கபன்ஜகேயில் உள்ள அரசு கூடாரங்களில் பகலில் தங்கும் மக்கள் கொள்ளைக்காரர்கள் கிராமங்களைச் சூறையாடுவர் என்பதால் இரவு நேரங்களில் மீண்டும் தங்கள் வீடுகளுக்குத் திரும்பி விடுகின்றனர். (2)

# அன்னை தெரேசாவுக்கு அஞ்சல் முத்திரை வெளியிடுகிறது அமெரிக்கா



(வோஷிங்டன்)

அன்னை தெரேசாவை கௌரவிக்கும் வகையில் அமெரிக்க அஞ்சல் துறை அவருக்கு இம்மாதம் 5 ஆம் திகதி அஞ்சல் முத்திரையொன்றை வெளியிடுகிறது. மனிதாபிமான நடவடிக்கைகளுக்காக 1979 இல் நோபல் பரிசு பெற்ற அன்னை தெரேசாவுக்கு அஞ்சல் முத்திரை மூலம் பாராட்டு தெரிவிக்கவுள்ளதாக அமெரிக்க அஞ்சல்துறை வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வோஷிங்டனில் இம்மாதம் 5 ஆம் திகதி நடைபெறும் விழாவில் இந்த அஞ்சல் முத்திரை வெளியிடப்படவுள்ளது.

கொலராடோவில் ஓவியர் தோமஸ் பிளாக்ஷிர் வரைந்த அன்னை தெரேசாவின் உருவப்படம் இந்த அஞ்சல் தலையில் இடம்பெற்றிருக்கும். அமெரிக்க அஞ்சல்துறை ஒவ்வொரு ஆண்டும் பிரபலமான நபர்கள், இடங்கள், நிறுவனங்களை கௌரவிக்கும் வகையில் நினைவு அஞ்சல் முத்திரைகளை வெளியிடுகிறது. (ஸ்ரீ-2)



பாகிஸ்தான் கிரிக்கெட் வீரர்களின் ஊழலை கண்டித்து லாகூரில் வீரர்களுக்கெதிராக ஆர்ப்பாட்டம் நடத்திய அந்நாட்டு கிரிக்கெட் ரசிகர்கள்.



யாழ்ப்பாணத்துக்கு நேற்று விஜயம் செய்த அமைச்சர் விமல் வீரவன்சவிடம் அமைச்சர்களான டக்ளஸ் தேவானந்தா, வீடமைப்புத் திட்டத்திற்கான நிகழ்வில் கலந்து கொண்டு பயளாளிகளுக்கு ஆவணங்களைக் கையளிப்பதையும் நிகழ்வில் கலந்து கொண்ட பயனாளிகள் மற்றும் பிரமுகர்களையும் யாழ்.நூலகத்திற்குச் சென்ற விமல் வீரவன்ச நூல்களைப் பார்வையிடுவதையும் படங்களில் காணலாம்.

# வடக்கு, கிழக்கு மக்களுக்கு...

யாழ்ப்பாணத்துக்கு நேற்று விஜயம் மேற்கொண்ட இந்திய வெளியுறவுச் செயலாளர் நிருபமா ராவ் யாழ்.துரையப்பா விளையாட்டரங்கில் வைத்து தெரிவு செய்யப்பட்ட குடும்பங்களுக்கு இந்திய வீட்டுத் திட்ட உதவிகளை வழங்கி வைத்தார்.

அத்துடன் யாழ்.மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற யாழ்.நிலைமைகள் தொடர்பான சட்டதிட்டம் மற்றும் யாழ். பொது நூலகத்தில் நடைபெற்ற பொது அமைப்புகளுடனான சந்திப்பிலும் அவர் கலந்து கொண்டார்.

இதில் யாழ்.பொது நூலகத்தில் நடைபெற்ற பொது அமைப்புக்களுடனான சந்திப்பில் இந்திய வெளியுறவுச் செயலர் நிருபமா ராவ் உரையாற்றுகையில்,

வடக்குக் கிழக்கு மக்களுக்கு திறந்த மனத்துடன் உதவிகளை இந்திய அரசு தொடர்ந்தும் வழங்கும். நான் இங்கு முன்பு தூதராகக் கடமையாற்றிய போது இருந்த இலங்கையிலும் பார்க்கப் பாரிய மாற்றம் ஏற்பட்டுள்ளது.

வடக்குக் கிழக்கில் சிறுவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தி அவர்களுக்கான சிறந்த எதிர்காலத்தை ஏற்படுத்துவதற்கான சகல உதவிகளையும் இந்தியா வழங்கும்.

ஐக்கிய இலங்கைக்குள் சகலருக்கும் சம உரிமை வழங்கப்பட வேண்டும் என்பதை இந்தியா தொடர்ந்தும் வலியுறுத்தி வருவதாக அவர் குறிப்பிட்டார்.


இதேவேளை வடக்கில் 50 ஆயிரம் வீடுகள் அமைக்கும் திட்டத்திற்கான ஊழியர்கள் வடக்கு மாகாணத்திலிருந்தே நியமிக்கப்படுவர் என நிருபமா ராவ் தெரிவித்தார்.

யாழ்.செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற கூட்டத்திலேயே இதனைக் கூறினார்.

வீடமைப்புத் திட்டத்திற்கு இந்தியத் தொழிலாளர்ளே அழைத்து வரப்படவுள்ளதாகச் செய்தி வெளியாகியுள்ளமை தொடர்பாக கருத்துக் கூறும்போதே அவர் இதனைத் தெரிவித்தார். (ச-5)

# மரண அறிவித்தல்

## பொன்னையா செல்லையா



மீசாலை கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னையா செல்லையா நேற்று முன்தினம் (30.08.2010) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் அமரர்களான பொன்னையா இராசம்மா தம்பதியரின் அன்பு மகனும், சரஸ்வதியின் அன்புக் கணவரும், விமலறோஜினி (சாந்தி-சுவிஸ்), பாஸ்கரன் (அப்பன்-சுவிஸ்), குமுதறோஜினி (மாலா-ஜேர்மனி), ஜீவறோஜினி (ஜீவா-சுவிஸ்), நீலறோஜினி (கோகிலா), சுதாகரன் (சுதன்-லண்டன்), கிருபாகரன் (டயலொக் Telecom-யாழ்.) ஆகியோரின் அன்புத் தகப்பனும்,

சிவநாதன், சிவயோகமலர், பாலபுலேந்திரன், நாகேஸ்வரன், அருந்தவசீலன் (ஆசிரியர், யா/கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலயம்), சுபந்தினி, பிரதீபா (பவா) ஆகியோரின் பாசமிகு மாமனாரும்,

சுஷானா, நிவேதனா, பவிநுதன், அட்சயா, கௌரீசன், துஷாந், நிதுர்ஷன், நிதுர்ஷா, குஸ்மிகா, சியாகன், தபேஷ் ஆகியோரின் அன்புப் பேரனும்,

அமரர் அன்னப்பிள்ளை மற்றும் முத்துப்பிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரனும், முத்துபொன்னையா, செல்வரத்தினம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (01.09.2010) புதன்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக் கிரியைக்காக கொற்புலவு மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

T.P.:- 021 790 1999,
021 733 3666,
077 733 4374

சிற்றம்பலம் வீதி,
மீசாலை கிழக்கு,
மீசாலை.

தகவல்:
கிருபாகரன் (மகன், டயலொக் Telecom-யாழ்.கிளை)
அருந்தவசீலன் (மருமகன்)
கரவெட்டி

(2296)

# மக்கள் கூட...

கழகத்தினர், சைவபரிபாலன சபை பிரதிநிதிகள், சைவ சமய அமைப்புகள், சைவ அபிமானிகள் என ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

நாவலர் வீதி, கோயில் வீதி வழியாக மணி மண்டபத்திற்கு கொண்டுவரப்பட்ட நாவலர் சிலை பூசை வழிபாடுகளைத் தொடர்ந்து அங்கு பிரதிஷ்டை செய்யப்பட்டது.

இதேவேளை நல்லூர் முருகன் ஆலய தெற்கு வீதியில் நாவலர் மணி மண்டபத்தின் புதிய கட்டிடத்திற்கான அடிக்கல்லை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நாட்டிவைத்தார். (ந)

# மீள்குடியேற்றத்திற்கு முன் நாகர்கோவில் பாதை திறப்பு

(திருநெல்வேலி)

வடமராட்சி கிழக்கில் மக்களை மீளக் குடியமர்த்துவதற்கு முன்னர் நாகர் கோயில் பாதை திறக்கப்படும் என படைவட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

வடமராட்சி கிழக்கில் மீள் குடியேற்றம் தொடர்பில் ஆராய்வதற்காக அப்பகுதிக்கு நேரடியாகச் சென்ற அரச அதிகாரிகளிடம் படை உயர்மட்டத்தினர் இதனைத் தெரிவித்துள்ளனர்.

வடமராட்சி கிழக்கில் மக்களை மீள்குடியமர்த்துகின்ற பொழுது எந்தெந்தப்பகுதிகளில் மக்களைத் தங்கவைத்து காணிகளுக்குள் அனுமதிப்பது என்பது தொடர்பில் ஆராய்வதற்காக படையினரிடம் பாஸ் அனுமதி பெற்று அண்மையில் மருதங்கேணி உதவி அரச அதிபர் பணிமனையின் உயர்மட்டக் குழுவினர் அங்கு சென்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை நாகர்கோவில் பகுதியின் வீதியோரங்களில் காணப்படும் மிதிவெடிகளை அகற்றும் நடவடிக்கையில் படையினர் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

இது தொடர்பில் படை உயர் அதிகாரிகளிடம் கருத்துக்கேட்ட போது ஒருமாதத்திற்குள் வீதியோரங்களில் உள்ள கண்ணி வெடிகளை முழுமையாக அகற்ற முடியுமென நம்பிக்கை வெளியிட்டார். (ச-49)

# நீதிமன்ற...

பெற்றதாகக் கூறப்படும் முறைகேடுகள் தொடர்பாக இரண்டாவது இராணுவ நீதிமன்ற விசாரணை நடைபெறுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச-5)

# புதிய அரசியலமைப்பு வந்...

அலுவலகத்தில் நடைபெற்ற வீடமைப் புக்கடன் வழங்கும் வைபவத்தின்போதே இவ்வாறு தெரிவித்தார். இதன்போது அவர் மேலும் உரையாற்றுகையில்,

போரினால் சிதைந்து போன யாழ்.மக்களின் வாழ்வை பழைய நிலைக்கு கட்டியெழுப்ப வேண்டுமானால் அவர்கள் அனைவரும் குடியிருக்க வீடுகள் அவசியம். ஆயினும் கடந்த கால அனர்த்தங்களினால் பல மக்கள் தமது வீடுகளை இழந்துள்ளனர்.

நாட்டின் பொருளாதார அரசியல் நிலையை ஸ்திரப்படுத்துவதற்காக புதிய அரசியலமைப்பை எமது அரசாங்கம் விரைவில் நடைமுறைக்கு கொண்டுவந்துவிடும். இந்நிலையில் வீடுகளை இழந்து நிற்கும் மக்கள் அனைவருக்கும் வீடுகள் அமைத்துக் கொடுக்கப்படும் என்றார்.

இந்த வைபவத்தின் போது 20 பேருக்கு 2 இலட்சம் ரூபாய் வீதமும், 5 பேருக்கு ஒரு இலட்சம் ரூபாய் வீதமும் 40 பேருக்கு காணிகளும் அமைச்சரால் வழங்கப்பட்டது.

அதனையடுத்து யாழ்.பொதுநூலகத்துக்குச் சென்ற அமைச்சர் அங்குள்ள புத்தகங்களைப் பார்வையிட்டார்.

அமைச்சர் தனது யாழ். விஜயத்தின் போது தனது பிள்ளைகளுடன் வந்திருந்தார். திட்டமிடப்பட்ட நிகழ்வுகளை முடித்துக் கொண்ட அமைச்சர் அதன் பின்னர் நயி னாதீவு, நாகவிகாரை உட்பட பல இடங்களுக்குச் சென்று அவர் பார்வையிட்டார். (ச-5)

# இந்தியக் கடலில்...

தொடர்ந்தும் தாக்கப்படும் குற்றச்சாட்டுத் தொடர்பாக நாடாளுமன்ற மக்களவையில் தி.மு.க. உறுப்பினர் டி.ஆர்.பாலு கொண் டுவந்த கவனஈர்ப்புத் தீர்மானத்தின் மீது பதிலளித்துப்பேசும் போது அமைச்சர் கிருஷ்ணா கருத்தைத் தெரிவித்தார்.

அவர் மேலும் பேசும்போது இந்தியப் பெருங் கடலில் சீனா அளவுக்கதிகமாக அக்கறை காட்டி வருவதை இந்திய அரசு உணர்ந் திருப்பதாகத் தெரிவித்தார். சீனாவின் நோக் கத்தை நுணுக்கமாகக் கண்காணிப்பதாகவும் இந்தியப் பெருங் கடலில் நடக்கும் மாற்றங்களையும் கண்காணித்து வருவதாகவும் கிருஷ்ணா தெரிவித்தார்.

மேலும் கச்சதீவுப் பிரச்சினையைப் பொறுத்தவரை இரு நாடுகளுக்கும் இடையே ஏற்பட்ட ஒப்பந்தப்படி அது இலங்கை அரசுக்கு ஒப்படைக்கப்பட்ட நிலையில் அந்த ஒப்பந்தத்தை மறு ஆய்வு செய்யமுடியாது அதே நேரத்தில் கச்சதீவில் இந்திய மீனவர்கள் தங்கள் வலைகளை உலர்த்துதல் உள்ளிட்ட சலுகைகளை தொடர்ந்து அனுபவிக்கலாம் என்றும் அது தொடர்பான பிரச்சினைகள் தீர்க்கப்படும். இந்திய வெளியுறவுச் செயலர் தற்போது இலங் கையிலுள்ள நிலையில் இந்தப் பிரச்சினையை யும் இலங்கை அரசிடம் எடுத்துச் செல்வார் என்று வெளியுறவு அமைச்சர் எஸ்.எம். கிருஷ்ணா தெரிவித்தார். (ச-5)

# அரசியல்...

சாசனத்து-க்கு அமைவான முறையில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா என ஜே.வி.பி. கேள்வி எழுப்பியுள்ளது.

உத்தேச அரசியல் சாசன திருத்தங்கள் நாடாளுமன்றத்தின் மூலம் நிறைவேற்றப்பட முடியாது எனவும், திருத்தங்களைக் கொண்டுவர சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் எனவும் குறிப்பிட்டுள்ளது. (ச-5)

# தமிழ் மக்களுக்கு உதவி...

நேற்று யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்த இந்திய வெளியுறவுச் செயலர் நிருபமா ராவ் உடனான சந்திப்பின் போதே அவர் இதனைக் கூறினார்.

இந்தச் சந்திப்பில் கலந்து கொண்ட யாழ். பல்கலைக்கழகத்தின் ஓய்வு நிலைப் பேராசிரியர் சி.க.சிற்றம்பலம் அங்கு தனது கருத்துக்களை முன்வைக்கும் போது கூறியதாவது,

கடந்த காலத்தில் இந்தியாவின் நடவடிக்கைகள் பற்றி மக்களிடையே மனக்கவலை இருக்கின்றது என்று இலங்கை-இந்தியா ஒப்பந்தத்தை பரிபூரணமாக நிறைவேற்றுவதற்கு இந்தியா தனக்குரிய பங்களிப்பை அளிக்கவில்லை.

போரின் இறுதிக்கட்டத்திலேயே இந்திய அரசாங்கம் ஒரு போர் நிறுத்தத்தை உரு வாக்குவதற்கும் முயற்சிக்கவில்லை. அந்தச் சண்டைக்கு வேண்டிய ஆயு தங்கள் இந்தியாவால் கொடுத்து வருகின்ற கவலை எங்கள்மக்கள் மத்தியிலேயே இருந்தது.

இந்தப் போர் முடிபடைந்ததன் பின்னர் எங்களுக்கான ஒரு அரசியற்தீர்வை வழங்குவதற்கு இதுநாளும் இந்தியா ஒரு காத்திரமான நடவடிக்கைஎடுக்கவில்லை என்பதை மக்கள் மிகவும் கவலையோடு சொல்லிக் கொள்கிறார்கள்.

இப்பொழுதுபோர் முடிந்த பின்னரும் இராணுவக் கட்டமைப்புக்கள் அதி லேயே கொடியேற் றங்கள் நடைபெறுகின்றன.

அது இந்தப் பகுதியினுடைய இனங்களுடைய எதிர்பார்ப்பாகவே இருக்கும்.

இத்தகைய மனக் கவலைகள் தான் உங்கள் முன் எங்களுடைய கருத்துக்களை மக்களுடைய எண்ணங்களை நான் பிரதி பலிக்கின்றேன் என்றார்.

இதேவேளை நாங்கள் கடந்தவையை மறந்துவிடுவோம் நாங்கள் நல்லதொரு விசுவாசமான நிலையை நோக்கி வடகிழக்கு மக்களுக்கும் ஏனைய இலங்கை மக்களுக்கும் ஒரு நல்ல எதிர்காலம் அமைக்கிறத்துக்காக நாங்கள் தொடர்ந்து ஒத்துழைத்து நடவடிக்கைகளை மேற்கொள்வோம் என்ற தொனியில் நிருபமா ராவ் கருத்துத் தெரிவித்தார். (ச-5)





## நிழல் அல்ல நிஜம்!

### ஒரே வாரத்தில்

கருமை நிறம் நீங்கி அழகிய நிறம்! கரும் புள்ளிகள், முகச்சுருக்கம், தழும்புகள், உதடு கருமை நீக்கம் போன்றவற்றிற்கான தீர்வுகள்!

உடற்பருமன் கூட்டுதல், குறைத்தல்.

WE CARE ALWAYS!

தொடர்பு :-
0777351954
0774011129

SANEYA BEAUTY PALACE
132, KACHCHERI NALLUR ROAD.
(கிட்டுபூங்கா அருகில்) (2294)

## வீடு விற்பனைக்கு

கடற்கரை வீதியில் (BEACH ROAD) 1 1/2 பரப்பு காணியில் சிறு திருத்த வேலைகளுடன் கூடிய மாடி வீடு விற்பனைக்குண்டு. லொட்ஜ் (Lodge) நடத்துவதற்கு உகந்த சூழலில் வீடு அமைந்துள்ளது.

விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவேண்டிய தொலைபேசி இலக்கம்:-
021 222 7893
0770690570 (2288)

## பிறந்த நாள் வாழ்த்து



31.08.2010 அன்று தனது முதலாவது பிறந்த நாளை யாழ். ஆயர் தோமஸ் சவுந்தர நாயகம் ஆண்டகையுடன் சேர்ந்து கொண்டாடிய பிரான்சிஸ்க் பவித்திரா தம்பதியரின் முதலாவது புத்திரன்

"றிச் பிராங்லின்" ("Rich Franklin")

அவர்களை அவருடைய பெற்றோர் ஞானப்பெற்றோர் : எட்வேட் எட்வின் - மேரி கியூரி தம்பதியினர், நண்பன் வின்சன் டீப் போல் டக்கியஸ் போல் மற்றும் உற்றார் உறவினர்களும் இறைஆசி வேண்டி செபித்து இறை வழியில் பல்லாண்டு காலம் வழிநடக்கவாழ்த்துகின்றனர்.

(2295)

## What's after your A/L's...? My Options?

Results in 3-4 Months, don't waste your Time?

2011 ஆம் ஆண்டிலிருந்து 99% மான பல்கலைக்கழக பாடநெறிகள் அனைத்தும் ஆங்கிலத்திலேயே நடைபெறுமென உயர்கல்வி அமைச்சர் அறிவித்துள்ளார். எனவே நீங்கள் பல்கலைக்கழகத்திற்குச் செல்ல முன்னர் போதியளவு ஆங்கில அறிவைப் பெற City & Guilds London Institute இன் ஆங்கில Diploma வகுப்பில் இன்றே இணைந்து கொள்ளுங்கள். இலங்கையில் எல்லா வளங்களும் நிறைந்த English College களில் ஒன்றென எமது College அங்கிகாரம் பெற்றுள்ளது.

# Spoken English & Diploma in English

City & Guilds

கடந்த 24.04.2010 இல் நடைபெற்ற City & Guilds இன் Diploma in English பரீட்சையில் எமது கல்லூரியில் இருந்து தோற்றி சித்தியடைந்த சாதனையாளர்கள் சிலர்



S.Senthitchelvan S.Sujantha P.Umachandra S.Thanusha V.Kalaichchelvi

குறுகிய காலத்தில் பூரண ஆங்கில அறிவினைப் பெற : சரளமாக எந்தச் சூழ்நிலையிலும் ஆங்கிலத்தில் பேச, இலக்கணப்பிழைகள் இல்லாமல் எழுத, எந்த ஆங்கிலப் பத்திரிகையையும் இலகுவாகப் படிக்க ஏற்ற ஓர் பாடநெறி பரீட்சைகள் யாழ்ப்பாணத்தில் நடைபெறும்.

அடிப்படையில் இருந்து ஆங்கிலம் போதிக்கப்படும்

IELTS பரீட்சை எடுப்பதற்கு முன் City & Guilds இன் Diploma in English பரீட்சைக்கு ஆயத்தப் படுத்தினால் IELTS பாடநெறியை மிகவும் இலகுவாகப் பின் பற்றமுடியும்.

The Diploma is suitable for anybody. The qualification covers all four language skills and so is recognised as a good assessment of a learner'soverall language ability byuniversities and the UK Borders Agency (UKBA).

The International ESOL Diploma Covers all Four Language skills: Reading , Writing, Listening and Speaking

| Course Schedule | Mon-Tue-Wed-Thu-Fri | Saturday & Sunday |
|---|---|---|
| Duration | 3 Months (100 hours) | 3 Months (100 hours) |
| Time | 8.30 - 10.30 a.m<br>10.30 a.m 12.30 a.m | 2.00 p.m 5.00 p.m |
| Commencement | 6th Sep 2010 | 11th Sep 2010 |

புதிய வகுப்புக்கள் 06.09.2010 ஆரம்பமாகும்

BRITISH COLLEGE OF ENGLISH

143, Adiyapatham Road, Thirunelvely. T.P:0213216027 - 0778803887

(C-984)

## தொழிற்பயிற்சிகள்

**Mobile phone Repairing**

Basic Electronic, Tools, Phone Circuit, Circuit Reading, Phone Repairing, Flashing, Unlocking, Use of software, Downloading

*Duration:3 months*

**Television Repairing**

Radio, Amplifier, Television, Video Deck, Satellite Receiver, Ups, CD,DVD Player

*Duration:10 months*

**Air-Conditioning**

Refrigerator, Window AC, Splite AC, Package AC, Vehicle AC, Cool Room

*Duration:6 months*

சகல பயிற்சிகளும் எமது நிறுவனத்தினால் நடத்தப்படுகின்ற workshop இல் முழுநேர செய்முறைப் பயிற்சியளிக்கப்பட்டு சான்றிதழ் வழங்கப்படும்.

பயிற்சிகள் ஆரம்பம்: 05.09.2010 , 06.09.2010

விபரங்களிற்கு:

JAFFNA TECHNICAL INSTITUTE

இல. 45, மணிக்கூட்டு வீதி, (பெருமாள் கோயில் முன் வீதி), யாழ்ப்பாணம்.
T.P. 0718561654 (C-985)

கிளை: NEW ASIAN CENTER 56/15,Stanley Road, (சம்பத் வங்கியருகே) யாழ்ப்பாணம்.

## Personal Class (கணினி)

- Ms Office, DTP, Web Design, Graphic Design, Internet and E-mail ஆகிய கற்கைநெறிகள் உங்கள் வீடுகளில் வந்து கற்பிக்கப்படும்.
- பயிற்சியின் பின் சான்றிதழ்கள் வழங்கப்படும்.
- குறிப்பு : கணினி இல்லாதவர்களுக்கு எனது Laptop மூலமாகப் பயிற்சியளிக்கப்படும்.

T.P.: 0779672038 நல்லூர் (2292)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 01.09.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.